Regd. No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

மலர் 9

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 3, 4

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1356,7 துல்ஹஜ்ஜு, முஹற்றம்மீ
1938ஷு மார்ச்சு, எப்ரல்மீ

1. அல்குர்ஆன் ... 41 2. அல்ஹதீது ... 42
3. லீக்கும் காங்கிரஸும் ... 44
4. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் ... 45
5. முன்னோர்களைப் பின்பற்றல் ... 47
6. அரிமா நோக்கு ... 49
7. முஸ்லிம்கள் கவனிப்பார்களாக ... 51
8. முஸ்தபா கமால் பாஷா ... 53
9. உலக முன்னேற்றம் ... 54
10. ஜனாப் ஜின்னாவின் வீரகர்ஜனை ... 56
11. வகுப்பு வாதிகள் யார்? ... 60
12. பெண்மணிகளின் பாத்தியதைகள் ... 64
13. இஸ்லாமிய உலகம் ... 67
14. உண்மை மத உரைக்கல் ... 70
15. கூத்தாநல்லூர் மரக்கடை மஸ்ஜிது (பிளாக்) ... 73
16. "வக்பு விழா" ... 74
17. ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்க அறிக்கை ... 76

OFFICE OF THE ...
18 MAY 1938
MADRAS

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா, பர்மா முதலிய வெளிநாடுகளுக்கு	,,	4	0	0
தனிப் பிரதி ...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்[illegible], பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்[illegible]ட[illegible]ட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், தி[illegible]க்[illegible]ள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

" ஹிபாஜத்துல் இஸ்லாம் " ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெ[illegible]

G. T., ம[illegible]ல.

208354
OFFICE OF THE REGISTRAR
18 MAY 1938
MADRAS

حفاظة الاسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். (குர்ஆன்)

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 9	ஹிஜ்ரி 1356,7 துல்ஹஜ்ஜு, முஹற்றம் மீ 1938ஹு மார்ச்சு, ஏப்ரல் மீ	இதழ் 3, 4

அல்குர்ஆன்

நீங்கள் செலவிட்டதும், நேர்ச்சை செய்து கொண்டதும் அல்லாஹ்(தஆலா)வுக்கு தெரிந்தே இருக்கிறது. அநீதி புரிவோருக்கு உதவி செய்பவர் யாருமில்லை. 'சதக்கா'க்களை பஹிரங்கமாய்க் கொடுப்பீர்களாயினும் அது நல்லதுதான். அதனை மறைவாக ஏழைகளுக்குக் கொடுப்பீர்களாயின் அது உங்களுக்கு பயனளிக்கும்; உங்களது பாவங்களுக்கு தண்ட குற்றமுமாகும். அல்லாஹ் தஆலா நீங்கள் புரியும் காரியங்களை நன்கு தெரிந்திருக்கிறான். (திருகுர்ஆன்.)

அதாவது, நீங்கள் அதிகமான ஐசுவரியங்களையோ, அல்லது சொற்பமான வற்றையோ அல்லாஹ்வின் வழிப்பாட்டிலோ, அல்லது அவனுக்கு மாறு செய்வதிலோ, பஹிரங்கமாகவோ, அல்லது மறைவாகவோ செலவிடுவீர்களாயினும், அல்லது நிபந்தனையன்றியோ, நிபந்தனையுடனோ அல்லாஹ் தஆலாவின் வழிப்பாட்டிலோ, அவனுக்கு மாறு செய்வதிலோ செலவிடுவீர்களாயினும் அதன் இரகசியம் அல்லாஹ் தஆலாவுக்கு நன்கு தெரிந்திருக்கிறது; அவன் உங்களது எண்ணப்பிரகாரம் அவைகளுக்கு கூலியளிப்பான். அல்லாஹ் தஆலாவின் கட்டளைக்கு மாறு செய்வதில் ஐசுவரியங்களைச் செலவிடும் அநியாயக்காரர்களுக்கு உதவி புரிவோர், அவனது வேதனையை விட்டு காப்பாற்றுபவர் யாருமில்லர்.

நீங்கள் தானம் தருமங்களை பஹிரங்கமாய்க் கொடுப்பீர்களாயினும் இதுவும் நன்மையான காரியமேயாகும். மறைவாக வைத்துக்கொண்டு ஏழை மிஸ்கீன்களுக்குக் கொடுப்பீர்களாயின் இதுவும் உங்களுக்கு மிகமிக பிரயோஜன மளிப்பதாகும். இவ்வாறு தானம் தருமங்கள் செய்வது கொண்டு உங்களுடைய சிற்சில பாவங்கள் மன்னிக்கப்பட்டுப்போகிறது. நீங்கள் செலவிடும் தான தர்மங்களை எந்த நோக்கத்தைக் கொண்டு நிறைவேற்றுகின்றீர்களோ அவைகளை அல்லாஹ்தஆலா தெரிந்துகொண்டு உங்கள் எண்ணங்களுக்குத் தக்கவாறு கூலி அளிக்கிறான் என்பதே.

தானம் தருமங்கள் புரிவதில் பஹிரங்கத்தையோ, மறை முகத்தையோ அனுஷ்டிக்குமாறு அல்லாஹ்தஆலா பொதுவாய்க் கூறியிருப்பதில், சில விரித்துரைக் கர்த்தாக்கள் சிற்சில வியாக்கியானங்கள் கூறி யிருக்கின்றனர். அதாவது, தானம் தர்மம் செய்வதில் கடமையை நிறைவேற்றுவதாயினும் சரி, மேலதிகமாய்ச் செலவிடுவதாயினுஞ் சரி மறைவாகவே நிறைவேற்றுவது மேலாகுமென சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். வேறு சிலரோ, மனிதன் தனது கடமையை நிறைவேற்றுவதில் செலவிடுபவைகளை பஹிரங்கமாகவும், மேலதிகமாய் செலவிடுபவைகளை மறைவாகவும் வினியோகிப்பது மிகமிக சிரேஷ்டமெனவும் அபிப்பிராயப் படுகின்றனர். மனிதன் தம்மீது கடைமையாகவுள்ள பர்லான தொழுகை, நோன்பு முதலியவைகளை எவ்வாறு பஹிரங்கமாகச் செய்வது மேலாகுமோ அவ்வாறே தம்மீது கடமையாகவுள்ள 'ஜகாத்' முதலியவைகளையும் பஹிரங்கமாகச் செய்வது சிரேடஷ்டமாகும். மேலும் தம்மீது கடமையில்லாத நபில் தொழுகை முதலியவற்றை நிறைவேற்றுவதில் உசிதா உசிதப்படி மறைவுதலைத் தெரிந்துகொள்வது சிரேஷ்டமாக இருப்பதுபோல் தம்மீது கடமையல்லாத தானம் தர்மங்கள் புரிவதில் மறைவுதலை அனுஷ்டிப்பதும் உசிதமாகும்.

இதற்கு மாற்றமாய் தங்கள்மீது கடமையாகவுள்ள ஜகாத்தை நிறைவேற்றுபவர்கள் தங்களது ஐசுவரியம் யாருக்கும் தெரியக்கூடாது; மறைவாகவே யிருக்கவேண்டுமென்று கருதும் ஸ்ரீமான்கள் ஜகாத்தை மறைவாகவே வினியோகிப்பது சிரேஷ்டமாகும். இவ்வாறே தங்கள்மீது கடமையில்லாத தானம் தருமங்களைச் செய்வோர் தாங்கள் செய்யும் தர்மங்களைப் பார்த்து இதரர்களும் இவ்வாறு செய்வர் என்னும் எண்ணங்கொண்டு, தங்கள் தர்மங்களை பஹிரங்கமாய்ச் செய்வார்களாயின் அதுவும் விசேஷமானதாகும். ஆகவே, மனிதன் புரியும் எக்காரியமும் அவனது எண்ணத்தைப் பொருத்தே இருக்கிறதென்பது நன்கு புலனாகின்றது. முடிவாகக் கூறுமிடத்து, மனிதன் தம்மீது கடமையாகவுள்ள 'ஜகாத்'போலொற்ற தர்மங்களை நிறைவேற்றுவதில் மறைவுதலைக் கைகொள்வதைவிட பஹிரங்கமாய் வினியோகிப்பது 25 மடங்கு மேலாகுமென்றும், சாதாரண—கடமையல்லாத தானங்கள் புரிவதில் பஹிரங்கமாய்ச் செய்வதைவிட மறைமுகத்தை அனுஷ்டிப்பது எழுபது மடங்கு மேலாகும் என்றும் ஹதீதில் கூறப்பட்டிருப்பதை கைக்கொண்டு நடப்பது மிகமிக சிரேஷ்டமாகும் என்பது திண்ணம்.

அல்ஹதீது

"மக்காள் ! வழிநடைப்பாதையில் வீற்றிருப்பதைவிட்டுத் தவிழ்ந்து கொள்ளுங்கள்" யென, நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியபோது, நாங்கள் வேறுவகையின்றி அவ்விடம் உட்காரும் நிர்ப்பந்தத்திலிருக்கிறோம்; "நாங்கள் ஒவ்வொரு விஷயங்களும் பேசிக்கொள்வதற்குத்தக்க இடம் அதுவாக இருக்கிறது" யென, சஹாபாக்கள் தெரிவித்துக்கொண்டனர். அதற்கு நபிகள் கோன் (ஸல்.) அவர்கள், "நீங்கள் வழிநடைப்பாதையில் உட்காரவேண்டிய அவசியமேற்பட்டு விடுமாயின் அப்பாதை நடையின் பாத்தியதைகளைப் பேணிக்கொள்ளுங்களென அறிவித்தார்கள். அதற்கு அருமை சஹாபாக்கள் அதன் பாத்தியதைகள் யாதாகுமென வினவியபோது, அவ்விடம் வீற்றிருப்போரின் பார்வை கீழ்நோக்குடையதாக இருக்கவேண்டும்; நோவினை செய்கிற வஸ்துக்களை அவ்விடத்தைவிட்டு அப்புறப்படுத்தவேண்டும்; சலாமுக்கு மறுமொழி கூறவேண்டும்; நற்கருமங்கள் புரியுமாறு கட்டளையிடுவதுடன் கெடுதியைவிட்டு விலக்கவேண்டும்" யென சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் அறிவித்ததாக அபூஸயீதுல்குத்ரி கூறுகின்றார்கள்.

நபிகள் பெருமானர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் அருமை சஹாபாக்களை நோக்கி வழிநடைப்பாதையில் வீற்றிருப்பதை விலக்கிய போது சஹாபாக்கள் இவ்வுத்திரவு சாமான்யமான உத்திரவாகு மென்பதைத் தெரிந்துகொண்டு அதற்குள்ள காரணங்களைத் அறிந்துகொள்ள விரும்பினர். அதற்கு சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் நிர்ப்பந்த முறையில் அவ்விடம் வீற்றிருக்கவேண்டிய சந்தர்ப்ப மேற்படுமாயின் அப்பாதை நடையின் பாத்தியதைகளிற் பலவற்றைப் பேணவேண்டு மென்று கூறியுள்ளார்கள்.

1-வது கடமை பார்வையை கீழ்நோக்குடையதாகச் செய்யவேண்டும். அதாவது அங்கு வீற்றிருப்போர் வானத்தின் பக்கலோ மற்றெந்த வஸ்துக்களின் பக்கலோ பார்வையைச் செலுத்தலாகாதென்பது கருத்தல்ல. அவ்வழி நடைப் பாதையில் பெண்கள் செல்வார்களாயின் அவர்கள் பக்கல் பார்வையைச் செலுத்தலாகாதென்பதும், பெருமையைக் கொண்டோ கோபமாகவோ யாரையும் பார்க்கக் கூடாதென்பதும் இதன் கருத்தாகும்.

2-வது கடமை: அவ்வழியேநடப்பவர்களுக்கு நம்மால் எவ்வித இடைஞ்சலும் ஏற்படலாகாது, அவர்களைக் கெடுதி சொல்லலாகாது, வாயினுலும் கையினுலும் எவ்வித நோவினையும் கொடுக்கலாகாது, அவ்விடம் தண்ணீர் முதலியவைகள் ஊற்றியோ, கல் முற்களை போட்டோ வழிநடப்பவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படும்படி செய்யலாகாது, நடப்பவர்களுக்கு கஷ்டமேற்படுமாறு பாதை முழுதையும் சூழ்ந்து கொண்டு உட்காரலாகாது.

3-வது கடமை: சலாமுக்கு மறுமொழிகூறல். வழிநடைப் பாதையில் வீற்றிருப்போர் அங்கு செல்வோர் கூறும் சலாமுக்கு மறுமொழி அளிப்பது கடமையாகும். வழிநடைப் பாதையிற் செல்லுவோர் ஒவ்வொருவரும சலாம் செய்வதற்கு அங்கு வீற்றிருப்போர் மறுமொழி சொல்லச் சடைவுற்றிருந்தால் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது சுன்னத்து விடுபட்டுப் போகிறது. இது பெரும் தவருகும். சலாம் சொல்வது மக்களிடையே பிரீதியை உண்டு பண்ணுவதாகவிருப்பதால் அதற்கு மறுமொழி கூறி அப்பிரீதியை அதிகப்படுத்திக்கொள்வது பிரதானமாகும் ஒரு மனிதன் நமக்கு மரியாதை செய்யும் முகத்தான் சலாம் சொல்லும் போது அதற்குப் பகரமாய் பதிற் சொல்லி அம்மனிதனை கௌரவப்படுத்துவது நமது கடமையாகவிருக்க, நாம் பதிற் சொல்லாதிருப்பது மனிதத் தன்மைக்கே எவ்வளவுதூரம் அழகாயிருக்கிறதென்பதை நன்கு கவனித்துப் பார்ப்போமாக. இதற்காகத் தான் பெருமானர் (ஸல்) அவர்கள், சலாமுக்கு மறுமொழி சொல்லல் வழிநடைப் பாதையிற் வீற்றிருப்போரின் கடமைகளிலொன்றெனக் கூறியுள்ளார்கள்.

4,5-வது கடமை நலவைக்கொண்டு ஏவுதல், கெடுதியைவிட்டு விலக்குதலாகும். இது மிகமிக மேலான கடமையாகும். இஸ்லாமிய ஒழுக்கங்களில் மிக சிரேஷ்டமானதுமாகும். ஒவ்வொரு மனிதனும் தன் முஸ்லிம் சோதரனுக்கு நலவைக்கொண்டு ஏவுதல் செய்வதற்கும் கெடுதியைவிட்டு விலக்குவதற்குமுள்ள பாத்தியதை யுடையவனுக இருக்கிறுன். வழிநடைப் பாதையிற் செல்பவன் அதிக பளுவுள்ள சுமையைத் தான் சுமந்துகொண்டோ அல்லது பிராணியின் மீது அதன் சக்திக்கு அதிகமானவற்றை ஏற்றிக்கொண்டோ செல்வானுகில் அக்கெட்ட காரியத்தினின்று அவனை விலக்குவது இவன்மீது கடமையாகிவிடுகிறது. இவ்வாறே, அவ்வழியே நடப்பவர்களில் இருவர் சச்சரவு செய்துகொள்வார்களாயின் அதனை விலக்கவேண்டியது அப்பாதையிற் வீற்றிருப்போர்மீது கடமையாகும். முடிவாகக் கூறுமிடத்து, அவ்வழியே செல்பவன் சன்மார்க்க விரோத காரியமெதுவும் புரிவானுகில் அதனை விலக்கவேண்டியது அங்கு வீற்றிருப்போர்மீது கடமையாகுமென்பதும், வழிநடைப் பாதையின் பாத்தியதையைப் பேணி நடப்பதாகுமென்பதும், மேலே கூறப்பட்டுள்ள சம்பவங்களால் நன்கு புலனுகின்றது. இவைகளை நம் முஸ்லிம் நேயர்கள் நன்கு கவனித்து நடைமுறையில் அனுஷ்டித்துக் காட்டுவார்களாக.

பொன்மொழிகள்

முஸ்லிம்காள்! ஒருவருக்கொருவர் பகைமை கொள்ளாதீர்கள். பொறுமை கொள்ளாதீர்கள். ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதை விட்டுவிடாதீர்கள். ஒருவருக்கொருவர் சகோதரர்களாயிருங்கள். மூன்று இரவுகளுக் கதிகமாகத் தன் சோதிரனை வெறித்திருப்பது ஒரு முஸ்லிமுக்கு ஹலாலல்ல.



லீக்கும் காங்கிரஸும்

ஒரு தேசத்தின் விடுதலை, ராஜிய சம்மந்தமான போராட்டத்திலிறங்கி யிருப்போர் இரு கக்ஷியினராய்ப் பிரிந்து ஒருவரோ டொருவர் பிணக்கங் கொண்டிருப்பது நமது துர்அதிர்ஷ்டமேயாகும். இது காலை காங்கிரஸுக்கும் முஸ்லிம் லீக்கிற்கு மேற்பட்டிருக்கும் அபிப்பிராய பேத உணர்ச்சி முற்றி குரோதப் பான்மை தோன்றி வருகிறது. இந்தியாவின் பற்பல பாகங்களிலும் ஹிந்து முஸ்லிம் கலகத்திற்கு அடி கோலப்பட்டுப் போய்விடுமோவென பயப்படவேண்டியதாக இருக்கிறது. இதனால் எவ்வளவு சங்கடங்கள் சம்பவிக்குமென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே.

ஜான்ஸி தேர்தலுக்குப் பின்தான் இக்குரோதப் பான்மை தலை தூக்க முற்பட்டது. பிஜ்னூர் தேர்தல் நெருப்பின்மீது எண்ணெய் வார்த்ததுபோலாய் விட்டது. முராதாபாத், ஷிஹாரன்பூர், புலந்தர் ஷஹ்ர், பாட்னா, சாகர், நரசிங்பூர் இவ்விடங்களில் நடைபெற்ற தேர்தல்களில் முஸ்லிம் லீக் சார்பில் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஜெயம் பெறவே இக்குரோதப்பான்மை வீரிட்டெழுந்தது. இதனால் காங்கிரஸுக்கும் முஸ்லிம் லீக்கிர்க்குமிடையே தோன்றியிருக்கும் விரோத மனஸ்தாபத்தின் முடிவு யாதாகுமோவென பயப்பட வேண்டியதாக இருக்கிறது.

மேலே கூறப்பட்டவாறு முஸ்லிம் லீக்கிர்க் கேற்பட்டிருக்கும் அபார வெற்றியையும் காங்கிரஸின் படுதோல்வியையும் காங்கிரஸ் மேதாவிகள் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவந்து, எதன் காரணமாய் முஸ்லிம்களில் மெஜார்ட்டியார் காங்கிரஸைவிட்டுப் பிரிந்து லீக்குடன் சம்மந்தங் கொண்டிருக்கிறார்களென்பதை நன்காராய்ந்து பார்ப்பதுடன் இக்குரோதப்பான்மை நம் மக்களை விட்டகன்று ஹிந்து முஸ்லிம்கள் யாவரும் ஏகமாய் ஒன்று சேர்ந்து சுதந்திரப்போரைத் திறன்பட நடத்திச் செல்வதற்கான மார்க்கம் யாதாகுமென்பதை கண்டுபிடித்து அதி லீடுபடுவது மிகமிக ஆவசியமாகுமென்பதை அம்மேதாவிகள் நன்குணர்வார்களாக.

ஆனால் இதற்கு மாற்றமாய்—இம் மார்க்கத்தைக் கண்டுபிடிப்பதி லீடுபடுவதர்க்குப் பகரமாய்—லீக் தலைவர்கள் வகுப்பு வாதிகளென்றும் சமூகப் பித்துப் பிடித்தவர்களென்றும், தேச விடுதலைக்கு இடையூறு விளைவிப்பவர்களென்றும் தூஷிக்கப்படுகின்றனர். முஸ்லிம் லீக், காங்கிரஸ் போட்டியிடும் தேர்தல்களில் காங்கிரஸ்காரர் பல யிடங்களிலும் அடையும் படுதோல்விகளுக்கு பலவாறான—பிரயோசனமற்ற—காரணங்கள் கூறப்படுகின்றன. இதுவன்றி முஸ்லிம்களில் மெஜார்ட்டியார் காங்கிரஸின் பக்கல் தானிருக்கின்றனரென்றும் கூறிக்கொள்கின்றனர். என்றாலும் காங்கிரஸ்காரர் புரியும் பிரயத்தினங்களிலெதிலும் காரியசித்தி யடைகின்றார்களில்லை யென்பது அவர்களுக்கு நன்கு தெரிந்தே தானிருக்கிறது.

ஹிந்து, முஸ்லிம்கள் இருசாராரும் இதே இந்தியாவில் வாசஞ் செய்யவேண்

டியத்தாகத் தானிருக்கிறது. ஒன்றுகூடி வாழவேண்டியதாகவு மிருக்கிறது. இந்நிலைமையில் காங்கிரஸுக்கும் முஸ்லிம் லீக்கிற்குமிடையே ஆபாஸ அனர்த்தத்தை ஏற்படுத்திவைப்பது ஒரு குடும்பத்தில் ஒற்றுமையுடன் வாழ்பவர்களுக்கிடையே குடும்ப சச்சரவை உண்டு பண்ணிவைப்பது போலிருக்கிறது; விவகாரங்களி லீடுபட்டு ஜெயம் அபஜெயம் இவைகளின் கனவு காணவேண்டியதாகவு மிருக்கிறது. எனவே, காங்கிரஸ் தலைவர்கள் இவ்விபரீதப் போக்கை அகற்ற தங்கள் கவனத்தை சற்று ஆழ்ந்த விதத்தில் செலுத்துவார்களாக. இல்லையேல், இந்தியாவில் காங்கிரஸ், முஸ்லிம் லீக் இவ்விரண்டிற்கிடையே ஏற்பட்டு வளர்ந்துவரும் மனக் கசப்பு ஓர் உருக்கொண்டு ஹிந்து முஸ்லிம்களுக்கிடையே பிரிவினையை உண்டு பண்ணி வைத்துவிடும் காலம் சமீபித்து விடுமென ஐயுறவேண்டிய நிலைமை யளவில் நாம் தினேதினே சென்று கொண்டிருக்கிறோ மென்பது திண்ணம். இப்போராட்டத்தின் பயனாக ஹிந்து முஸ்லிம்கள் அபரிமித நஷ்டத்தை அனுபவித்தபின் காங்கிரஸ், முஸ்லிம் லீக் முதலிய ராஜிய வகுப்புகளுக்கிடையே பெரும் மாச்சரியமும் குரோதமு மேற்பட்டு தேசிய விடுதலை இயக்கம் குழிதோண்டி புதைக்கப்பட்டுப் போமென்பது திண்ணம். ஆகவே, காங்கிரஸ் மேதாவிகள் இவ்விஷயத்தில் கவனத்தைச் செலுத்தி ஆவன செய்ய முன் வருவார்களாக.

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்

யான் எனது காரியாலயத்தில் வீற்று முக்கியக் கடிதங்களைப் பார்த்துக் கொண்டிருக்குங்கால் இற்றைக்கு பத்து ஆண்டுகளுக்குமுன் சீமானாகி விருந்த லாலாநந்து குஷுஅர் என்பவர் என்னிடம்வந்து ஐந்து ரூபாய் கடன் கொடுக்க வேண்டுமென வேண்டிக்கொண்டார். உடனே யான் லாலாஜீ இதுபொழுது உமக்கு அவ்வளவு முக்கியாய் ஐந்து ரூபாய் எதற்காகத் தேவையென வினவினேன். லாலாநந்துகுஷுஅர் ஆஹ்! யென ஓர் பெரும் மூச்சு விட்டவராக என்ன சொல்லப் போகின்றேன்; யான் ஓர் சங்கடத்தில் மாட்டிக்கொண்டதன் பயனாய்ப் பலரிடமும் ஐந்து ரூபாய் கடன்கோரியும் ஒருவரும் கொடாததால் கடைசியாய் தங்களிடம் ஓடிவந்திருக்கிறேன் எனக்கூறினார். நல்லது உட்காருங்கள். தங்கள் தந்தை கோபிந்து சஹாயி என்பவர் ஒரு லக்ஷரூபாய் ரொக்கத்துடன் அநேக கட்டடம், கடை முதலியவை தங்களிடம் ஒப்புவித்ததுடன் தக்கமுறையில் நடைபெற்றுக்கொண்டிருந்த வியாபாரத்தையும் விட்டுச் சென்றாரே அத்தொழிலும் ஐவேஜிகளும் என்னவாயிற்று என வினவினேன். மேலும் தங்கள் நடவடிக்கையில் யான் ஒரு வித்தியாசத்தையும் காணவில்லையே; தாங்கள் குடிகாரராயுந் தெரியவில்லை; சூது விளையாடும் பழக்கமிருப்பதாயுந் தெரியவில்லை. சுருங்கக்கூறின், ஐசுவரியம் நீங்கிப் போவதற்குள்ள எவ்விதக் கெடுதியும் தங்களிலிருப்பதாக வெளிப் பார்வைக்கு தென்பட வில்லையே யென வினவினேன்.

லாலாஜி: தாங்கள் கூறுவது வாஸ்தவந்தான். நான் இப்போது எந்த கடையில் வீற்றிருக்கிறேனோ அந்தக் கடையிலிருந்துதான் என் தந்தை இவ்வளவு ஐசுவரியங்களையும் சம்பாதித்தியஞ் செய்தார். என் பிதாவால் எனக்களிக்கப்பட்டுள்ள ரொக்கம் முழுவதையும் செல விட்டுவிட்டு அசையாப் பொருள்கள் யாவற்றையும் அடமானம் வைத்துவிட்டேன். இதுபொழுது யான் ஒவ்வொரு காசுக்கும் இதரர்களை வழி பார்த்தவனா யிருக்கிறேன்.

'யான் அனுபவமற்றவனாயிருந்தேன். செலவு செய்வதைக் கற்றுக்கொண் டிருந்தேனே யல்லாது சம்பாத்தியஞ் செய்யும் மார்க்கத்தைத் தெரிந்துகொண்டேனில்லை. காலப் போக்குக் கேற்றவாறு யான் நடந்துகொள்ள வில்லை. யான் சிக்கனமுறையைக் கைக்கொள்ள வில்லை. யான் பேராசையின் மிகுதியால் தானியங்களை இலாபத்திற்குக் கொடுத்தேன். அநேகர் என்னிடம்வந்து தானியம் பெற்றுப் போனார்களே யன்றி வசூல் செய்வதில் யான் ஈடுபடவில்லை. என்னுடன் தொழிலி லீடுபடுபவர்களுக்கு யான் தக்க உபகாரஞ் செய்யவில்லை. யான் கஷ்டப்பட்டு சம்பாதியாது என் தந்தையால் தானியம் எனக்குக் கிடைத்து வந்ததால் யான் இதரர்களுக்குக் கடனாக கொடுக்கும் தானியங்களை வசூல் செய்வதற்கு முற்படுவதில்லை. யான் தகுதியற்ற வேலைக்காரர்களை பொறுப்புடைய பதவிகளி லேற்படுத்தி யிருந்தேன். யான் தூக்கத்திலிருந்து வெகு நேரத்திற்குப் பின் விழித்து எழுந்து வெளியிற் சென்று வருவதற்குமுன் இதர கடைக்காரர்கள் தங்கள் வியாபாரங்களை முடித்து விடுவர். இந்த நிலைமையில் என் வியாபாரம் மந்தத்தில் வந்த போது, சதி மோசம் ஏமாற்றம் இவைகளைக் கையாள முற்பட்டேன். என் வியாபாரம் மக்களிடையே பிரஸ்தாபிக்கப்படுவதற்கான எவ்வித ஏற்பாட்டையும் யான் செய்யவில்லை. வியாபாரத்தில் எவ்வாறு அபிவிர்த்தி யடைவதென்பதை கிஞ்சிற்றும் யான் ஆராய்ந்து பார்த்தது கிடையாது. வருவாய்க்குத் தக்கவாறு யான் செலவு செய்து வந்தேனில்லை. சிறிய சிறிய விஷயங்களை அறவே பொருட்படுத்தா திருந்து வந்தேன். யான் என்னை மகா சிறந்த புத்திசாலியெனக் கருதிக்கொண்டிருந்தேன். ஐசுவரியம் ஒருவர் கையை விட்டு மற்றவர் கைக்கு மாறும் சுபாவமுடையதென யான் கிஞ்சிற்றும் கருதியதுகிடையாது. யான் விளையாட்டுத் தனமாய் அளவுக்கதிகமானவும், தேவையற்றதுமாகிய உயிர்ப்பிராணிகளை வைத்திருந்தேன். யான் வியாபாரத்தின் வரவு செலவுகளை கணக்கிட்டுப் பார்ப்பதில்லை. பிரயாசை எடுப்பதினின்று வெகுதூரம் சென்று சுகபாக்கியங்களை விரும்பிக்கொண்டிருந்தேன். யான் நேரத்தை பேணி நடப்பதே கிடையாது. என்னிடம் சரக்குவாங்க வரும் மக்கள் என் விருப்பப்படி நடக்கவேண்டுமென யான் கருதினேனல்லாது அவர்கள் விருப்பப்படி நடக்கவேண்டுமென்று சற்றேனும் கருதினேனில்லை. என் அபிப்பிராயத்திற்குமுன் இதரர்களின் அபிப்பிராயத்திற்கு யான் மதிப்புக் கொடுப்பது கிடையாது.” எனக்கூறி முடித்தார்.

இதனை செவியுற்றுக் கொண்டிருந்த யான், லாலாஜியை நோக்கி, “இவ்வளவு பெரிய ஐசுவரியங்களையும் காணிபூமிகளையும், வியாபாரத்தையும் இழந்து உட்கார்ந்திருக்கும் உம்மிடமிருந்து இந்த ஐந்து ரூபாயை யான் எவ்வாறு திருப்ப வசூலிக்க முடியும். நிச்சயமாக உம்முடைய நிலைமை பரிதபிக்கக்கூடியதாக விருக்கிறது. நீர் எவ்வளவு காலம் கடன் வாங்கி காலங்கழிக்கலாமென்று நினைக்கின்றீர். கைசேதம்! இந்நிலைமையில் யான் உமக்கு ரூபாய் கொடுத்து உதவி செய்வதற்கு விரும்பவில்லை. அந்த உதவி இன்னும் உம்மை தாழ்ந்த நிலைமைக்குக் கொணர்ந்து விட்டுவிடுமெனக் கருதுகின்றேன்” எனக்கூறினேன். யான் கூறியவைகள் லாலாஜி வெட்கித்து தலை குனியுமாறு செய்து விட்டதால் அவர் என்னை ஆதரவற்ற முறையில் பார்த்துவிட்டு என்னிடம் ஒன்று கூறாதே கோபத்துடன் எழுந்து போய்விட்டார். அதுகாலை அவர், என்னிடம் உதவி தேடி வந்திருக்கும் நிலைமையில் இது பொழுது தாழ்மையோடு யான் கை நீட்டியும் அக்கை அலக்ஷ்யமாய் தட்டிவிடப்படுகிறது; இது பொழுது என் கைவசமுள்ளதைக் கொண்டு பிரயாசையோடு தொழில் முறையிலீடுபட்டு காரியாதிகளை நடத்திச் செல்வேன்; உதவி அளிக்குமாறு எவரிடமும் கை நீட்டமாட்டேன்; மக்கள் என்னை எவ்வளவு தூரம் தாழ்மையாகவும் கேவமாகவும் கருதுகின்றார்களோ அவர்களின் இவ்வெண்ணம் தவறாகுமென்பதை நிரூபித்து காண்பிக்க முற்படுவேன் என மனதினுள் எண்ணிக்கொண்டே சென்றார்.

பின்னர் லாலாஜி நிம்மதியோடு கடையில் உட்கார்ந்து கொண்டு தம்மில் காணப்படும் துர்ப்பழக்கவழக்கங்களை களைந்தெறிய முற்பட்டார். பெரும் பிரயாசை கஷ்டத்தோடு காரியாதிகளி லீடுபட ஆரம்பித்தார். ஓர் ஆண்டு திரும்புவதற்குள் லாலாவின் நிலைமை ஒழுங்குக்கு வந்துவிட்டது. அவர் ஊரின் தலைவர்களில் கணக்கிடப்படுவதற்குத் தகுதியுடையவராய் விட்டார்.

எப்பொழுதாகிலும் யான் அவர் கடைக்கு முன் செல்லவேண்டிய சந்தர்ப்பமேற்பட்டு

விடுமாயின், அவர் என்னைப் பிடித்து அவர் சமீபத்தில் உட்கார வைத்துக்கொண்டு எனக்கு பெரும் மரியாதை செய்து, "சோதரீர்! அன்று தாங்கள் எனக்கு ஐந்து ரூபாய் கொடுத்திருந்தால் யான் இந்நிலைமைக்கு வந்திருக்கமாட்டேன்; யான் இவ்வாறு மனோவைராக்கியத்தோடு காரியாதிகளிலீடுபட்டிருக்கமாட்டேன்" எனக் கூறுவார்.

ஏதோ காரணத்தால் ஆதரவற்று மனோசங்கடமடைந்திருக்கும் வர்த்தக சோதிரர்களை நோக்கி யான் கூறுவது யாதெனில், முதன் முதல் உங்கள் காரியம் கைகூடிவராத்த தன் காரணம் யாதாகுமென்பதை நன்கு ஆழ்ந்த கருத்தோடு கவனியுங்கள்; பின்னர் அக்காரியம் கைகூடி வராத்ததற்குத் தடை கல்லாயிருப்பதை அப்புறப்படுத்திவிட்டு உங்கள் தொழில் முறையினுட் பிரவேசிக்க முற்படுங்கள். கஷ்டம் பிரயாசையோடு காரியாதிகளை சாதிக்க முன் வாருங்கள். உங்களுக்கு ஆரம்பத்தில் கைகூடி வராதிருந்த காரியாதிகள் இதுகாலை அல்லாஹ்வின் கிருபையால் கைகூடி வருமென்பது திண்ணம்.

முன்னோர்களைப் பின்பற்றல்

"ஒரு காரியத்தின் பொறுப்பு அதற்குத் தகுதியற்றோர் வசம் ஒப்புவிக்கப்படுங்காலை என் உம்மத்தோர்களின் காரியாதிகளில் பற்பல கேடுதிகளும் குழப்பங்களும் ஏற்பட்டுவிடும்" யென நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார்கள்.

சோதரீர்! இதுகாலை நம் முஸ்லிம்களின் நிலைமை மேற்கூறப்பட்ட வாக்கியத்திற்கு உதாரணமாய்க் காணப்பட்டு வருகிறது. நாம் ஒரு ஊரின் தலைமைக்காரராகவோ, ஒரு பள்ளியின் முத்தவல்லியாகவோ, ஒரு சங்கத்தின் அதிகாரியாகவோ, ஒரு குடும்பத்தின் காரியஸ்தராகவோ ஆகிவிட பிரயத்தனஞ் செய்கிறோம். ஆனால் அக்காரியங்களின் பொறுப்பு யாதாகுமென்பதை சற்றேனும் உணர்கின்றோமில்லை. தாங்கள் வகிக்கும் பதவிகளின் வேலைத் திட்டத்தை தக்க முறையில் நிறைவேற்ற அசக்தர்களாயிருப்பதையுன்னி அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளாது மறுப்பவர்களை உலகம் புகழ்ந்துகொண்டிருக்கிறது.

"உங்களிலொவ்வொருவரும் தலைமைக்காரராகும்; ஒவ்வொரு தலைமைக்காரரிடமும் தனக்குக் கீழாவுள்ளவர்களது சம்ரக்ஷணைகளைப்பற்றி கேட்கப்படும்" யென, நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே, ஒரு குடும்பத்திலுள்ள தந்தையிடம் அவருடைய குழந்தைகளது பராமரிப்பு விஷயமாயும், ஒவ்வொரு உபாத்தியாயரிடமும் அவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் விஷயமாகவும், ஒவ்வொரு தலைமைக்காரரிடம் அவரது குடிகள் விஷயமாகவும், ஒவ்வொரு சங்க நிருவாகிகளிடம் அச்சங்க அங்கத்தினர்கள் விஷயமாகவும் கேட்கப்படும். ஆகவே, ஒவ்வொரு தலைவரும் தம்மீது சுமத்தப்பட்ட—தான் பொறுப்புஏற்றுக்கொண்ட-தலைமைத்தனத்தை எந்தமுறையில் நடத்திவருகிறார்கள் என்பதை நன்கு ஆராய்ந்து பார்த்தல் அத்தியாவசியமாகும்.

பொறுப்பேற்றுக்கொள்வது, ஒரு காரியத்திற்கு ஜவாப்தாரியாவது என்பதற்குள்ள அர்த்தம் யாதாகுமென்பதைத் தெரிந்துகொள்ள முற்பட்டு சங்கைவான்களான சஹாபாக்களின் வாழ்க்கை முறையில் பொறுப்பேற்றுக்கொள்ளப்பட்ட காரியாதிகள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டு வந்திருக்கிறதென்பதை நன்கு கவனித்துப் பார்ப்போமாக.

ஏதாகிலும் மார்க்க சம்மந்தமான காரியங்களுக்காக இரவில் எழுந்திருப்பது, பிரயாணஞ் செய்வது நமக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் கலீபா பதவியை ஏற்றதுமுதல் ஏழு மாதங்கள் வரை மதீனா நகருக்கு வெகுதூரத்திலுள்ள 'நஹ்' என்ற இடத்தில் வசித்துவந்ததுடன் ஒவ்வொருநாளும் கால் நடையாகவோ,

அல்லது வாகனத்தின்மீது வீற்றே மஸ்ஜித நபவிக்கு வந்து இஷா தொழுகைக்குப் பின் திரும்பப்போய்க் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருநாளும் அதிகாலையி லெழுந்து 'தஹஜ்ஜுத்' தொழுகையை நிறைவேற்றிவிட்டு தூக்கத்திலீடுபட் டிருப்பவர்களை 'பஜ்ர்' தொழுகைக்கு எழுப்புவார்கள். இஷாத் தொழுகை முடிந்தவுடன் அல்லாஹ்தஆலாவை வணங்குவதிலீடுபட்டிருப்பவர்களைத் தவிர வீர்தாவாக பள்ளியில் வீற்றிருப்போரை அவ்விடத்தை விட்டு வெளியாக்கி விடுவார்கள். தாங்கள் நடு இரவில் எழுந்து மதீனாநகரைச் சுற்றிவருவார்கள். இந்நிலைமையில் தாங்கள், ஹஸ்ரத் அப்துற்றஹ்மான் இப்னுஅவ்ப் அவர்களுடன் ஓர் இரவில் மதீனா நகரைச் சுற்றிவருங்காலை ஒரு வீட்டில் வெளிச்சம் காணப்பட்டது. அவ்வீட்டின் தலைவாயல் அடைக்கப்பட்டிருந்ததுடன் வீட்டிற்குள்ளாலிருந்து சிலர் கூக்குரல்—சத்தமிடும் ஓசை வெளிவந்தது. உடனே கலீபா அவர்கள் ஹஸ்ரத் அப்துற் றஹ்மான் அவர்களை நோக்கி, இது யாருடைய வீடென வினவியதற்கு, இது ரபீஆஇப்னு உமைய்யாவின் வீடென்றும், இதனுள் சிலர் சாராயம் குடித்துவிட்டு சப்தம் செய்துகொண்டிருக்கிறார்களென்றும் தெரிவித்தார்கள். இதனை ஹஸ்ரத் அவர்கள் தெரிந்துகொண்டு காலையில் அதற்கான பரிகாரஞ் செய்தார்கள்.

மதீனமா நகரில் ஓர் பொதுச் சத்திரமிருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பகற்காலங்களில் அங்கு சென்று தங்கள் கையினால் அங்குள்ளோருக்கு சாப்பாடு அளிப்பார்கள். இஷாத் தொழுகைக்குப்பின் பள்ளியில் வீற்றிருப்போர் ஒவ்வொருவரின் முகத்தையும் கூர்ந்து பார்த்து சாப்பாடு தின்னாதவர்களைத் தெரிந்து அழைத்துப்போய் சாப்பிடச் செய்வார்கள். எங்காகிலும் பட்டாளங்கள் செல்ல நேர்ந்தால் சதாவும் அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். 'காதிஸிய்யா'வென்ற இடத்தில் ஈரானியர்களுடன் யுத்தம் கடுமையாக நடைபெற்ற தினம் காலைமுதல் மத்தியானம்வரை அத்திசையிலிருந்துவரும் ஒவ்வொரு வாகனக்காரரிடமும் முஸ்லிம்களின் நிலைமையைப்பற்றியே விசாரித்துக் கொண்டிருந்தார்கள். இரவிலும் அதே ஞாபகத்தில் காலங்கழிப்பார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பெரிய ஓர் அரசாங்கத்தின் கலீபாவாக இருந்ததுடன் அநேக முஸ்லிம்களது மத சமூக வழிகாட்டியாகவுமிருந்தார்களென்பது யாவருக்கும் தெரிந்தவையே. இந்த ஸ்திதியை அடைந்திருந்த கலீபா அவர்கள் ஜகாத் மூலமாக வரும் ஒட்டகங்களுக்கு தங்கள் கையினால் தீன்போட்டு பாதுகாப்பார்கள். ஒருநாளன்று வெயிலின் கொடுமை அதிகரித்து பூமியிலிருந்து அக்கினி ஜுவாலை வீசிக்கொண்டிருந்தபோது ஹஸ்ரத் அவர்கள் இரு ஒட்டகங்களை ஓட்டிச் செல்வதை ஹஸ்ரத் உதுமான் (ரலி.) அவர்கள் கண்டு, இக்கொடூர வெயிலில் இவ்வொட்டகங்களை தாங்கள் எங்கு ஓட்டிச் செல்கின்றீர்களென வினவியதற்கு, ஜகாத் மூலமாய்வந்த இவ்விரு ஒட்டகங்களையும் மேய்ச்சல் ஸ்தலத்திற்கு கொண்டுசேர்க்கச் செல்கின்றேன் எனக் கூறினார்கள். ஒருநாள் ஹஸ்ரத் அவர்கள் 'ஜகாத்' ஒட்டகைக்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டிருப்பதைக்கண்ட ஒரு மனிதர், ஏதாகிலும் அடிமைமூலம் இக்காரியத்தை செய்விக்கலாகாதாவென வினவியபோது, ஹஸ்ரத் அவர்கள் என்னைவிட யார் அடிமையாக விருக்கமுடியுமென தெரிவித்து, யார் முஸ்லிம்களின் தலைமைக்காரனாகவிருக்கிறானோ அவன் உண்மையில் அவர்களின் அடிமையாகுமென்றும் தெரிவித்தார்கள்.

ஒரு சமூகத்தின் தலைவனே அச்சமூகத்தின் உண்மை ஊழியனாகு மென்பது சஹாபாக்களின் செய்முறைகளிலிருந்து நமக்கு தக்க முறையில் வெளியாயிருக்க, நாம் ஒரு ஊரின் தலைமைத் தனத்தையோ, ஒரு சங்கத்தின் நிருவாகத் தன்மையையோ வகித்தவுடன் நாம் எல்லோருக்கும் தலைவர்களாகும்; இதர்களெல்லாம் நமது அடிமைகளாகும் என உறுதிகொண்டு விடுகிறோம். இந்த 13 நூற்றாண்டுக்குள் முஸ்லிம்களது எண்ணத்தில் எவ்வளவு வித்தியாசமேற்பட்டிருக்கிற தென்பதை நன்குணர்வோமாக. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தாங்களே கடை வீதிகளைச் சுற்றிவருவார்கள். பொது பண்டிலிருந்து யார்யாருக்கு பங்கு கொடுக்கப்பட்டு வந்ததோ அவைகளை ஒவ்வொருவர் வீட்டிற்கும் சென்று பங்கிட்டு வருவார்கள். ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்களும் இதனையே பின்பற்றி நடந்து வந்தார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கிலாபத்பதவி வகித்தபோது தங்கள் கையில் கொரடாவை எடுத்துக்கொண்டு கடைவீதிகளைச்சுற்றி, மக்கள் பேணுதலுட னிருக்குமாறும், லேவாதேவி

செய்வதில் ஒழுங்கு முறையை அனுஷ்டிக்குமாறும் உபதேசிப்பார்கள்.

சங்கைவான்களான கலீபாக்கள் தாங்கள் ஏற்றுக்கொண்ட சமூகப்பணியி லீடுபட்டு அக் காரியாதிகளை முடித்தபின் பொது பொக்கிஷத்தை பாதுகார்க்கும் சேவை புரிவார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் அன்ருடம் தங்களுக்கு தேவையானதை மட்டில் அப்பண்டிலிருந்து எடுத்துக்கொள்வார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு கூலிக்காரரின் சம்பளத்தையே தினம் எடுத்துக்கொள்வார்கள். இதனுல் இஸ்லாத்தை உண்மையில் பின்பற்றி நடந்தோர்களில் ஒரு பாதுஷாவினது வாழ்க்கை சாதாரண ஓர் பகீரின் வாழ்க்கை போன்றிருந்தது என்பது நிதர்சனமாகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், பைத்துல்மால் என்பது முஸ்லிம்களின் பொதுபண்டாகும்; இதில் தங்களுக்கு பிரத்தியேகமான யாதொரு உரிமையுங் கிடையாதென பன்முறையும் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வியாதியால் பீடிக்கப்பட்டபொழுது மருந்து சாப்பிடுவதற்கு தேன் தேவைப்பட்டது. அதுகாலே முஸ்லிம்களது பொது பண்டில் தேன் இருந்தும் ஹஸ்ரத் அவர்கள் அதனை எடுத்து உபயோகித்து விடாது மஸ்ஜித நபவிக்கு வந்து மிம்பர்மீது ஏறி முஸ்லிம்கள் அனைவரையும் நோக்கி, நீங்கள் அனுமதி கொடுத்தால் கொஞ்சம் தேன் எடுத்து உபயோகித்துக்கொள்கிறேன்; உங்களது அநுமதியில்லாது அதனையான் உபயோகித்துக் கொள்வது ஹறுமாகும் என அறிவித்தார்கள்.

சோதரீர்! நம்முன்னோர்கள் தலைமைப் பதவி வகித்திருந்த காலத்தில் எவ்வாறு நடந்து கொண்டார்கள். மேலும் பொது பண்டை எவ்வாறு நிருவாகம் செய்து வந்தார்கள். நாம் அவைகளை விட்டு எவ்வளவு தூரம் பின் நிற்கிருேமென்பதை கவனித்து சன்மார்க்க வழியைப் பின்பற்றி நேரான பாதையிற் சீராய் செல்வோமாக.

அரிமாநோக்கு

கூட்டுத் தொகுதியின் விபரீதம்

முஸ்லிம்கள் ஒருக்காலும் கூட்டுத்தொகுதியை அங்கீகரிக்கலாகாது. எச்சந்தர்ப்பத்திலும், எந்தநிபந்தனையின்பேரிலும் அதனை ஏற்றுக்கொள்ளலாகாது. அது முஸ்லிம்களின் முன்னேற்றத்தைக் கெடுத்து ராஜியத்துறையில் மிகமிக பாதாளத்தில் தள்ளிவிடுமென்பது திண்ணம். அதற்குள்ள ஓர் உதாரணத்தை கீழேதருகிருேம் இதனை முஸ்லிம் நேயர்களும் சொந்தமாய் காங்கிரஸ் தாஸர்களும் கவனித்து உஷாராக விருந்து கொள்வார்களாக:—

வடநாட்டிலுள்ள டகாரி முனிஸிபல் சபையில் தனித்தேர்தல் மூலம் முஸ்லிம்களுக்கு நான்கு ஸ்தானங்கள் கிடைத்திருந்தன. அத்தோரணையில் அச்சபையில் நான்கு முஸ்லிம்கள் அங்கம் வகித்திருந்தனர். இதுபொழுது பீஹார் மந்திரிசபை அங்குள்ள தனித்தேர்தலை ரத்து செய்துவிட்டு கூட்டுத் தொகுதிமூலம் தேர்தல் நடைபெறவேண்டுமென, கட்டளைப் பிறப்பித்தது. இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் அத் தேர்தலில் கலந்து கொள்ளாது விலகியிருக்கவேண்டியது அவசியமாக விருந்தது. ஆனுல் டகாரி காங்கிரஸ் கமிட்டியார் முஸ்லிம்களை ஏமாற்றி அத்தேர்தல்களில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு செய்து விட்டனர். எனவே, ஐந்து ஸ்தானங்களுக்கும் முஸ்லிம் அபேக்ஷகர்கள் நிறுத்தப்பட்டனர். இவர்களுடன் ஐந்து ஹிந்துக்களும் போட்டி போட்டனர். முஸ்லிம் அபேக்ஷகர்களுக்கு முஸ்லிம்கள் மட்டுமே ஓட் செய்தனர்; ஒரு ஹிந்துகூட ஓட் செய்யவில்லை. முடிவில் ஐந்து முஸ்லிம் அபேக்ஷகர்களில் யாருமே வெற்றி பெறுது தோல்வி அடைந்தனர்; டகாரி முனிசிபல் சபையில் இதுபொழுது யாதொரு முஸ்லிம் பிரதிநிதியுங் கிடையாது; அச்சபையின் மெம்பர்களடங்கலும் ஹிந்துக்களாகவே இருக்கின்ருர்கள்.

கூட்டுத்தொகுதி ஏற்பட்டிருக்கும் ஒவ்வொரு இடத்திலும் நிலைமை இவ்வாறுதான் இருந்து வருகிறது. ஆகவே ராஜிய விஷயத்தில் முஸ்லிம்கள் அசம்பிளி, கவுன்சில், முனிஸிபாலிட்டி, டிஸ்டிரிக்போர்ட் முதலிய ஒவ்வொரு ஸ்தாபனத்திலும் தனித்தேர்தல் முறையே ஏற்படுத்தவேண்டுமென வற்புறுத்துவது அத்தியாவசியமாகும். தனித்தேர்தல் முறை ஏற்பாடு செய்யப்படாத விடத்தில் அதன்மீது வற்புறுத்தல் செய்தும் பயன்படாதுபோமாயின் அத்தேர்தல்களில் முஸ்லிம்கள் சம்மந்தப்படாது விலகியே இருக்கவேண்டும். காங்கிரஸ் ஹிந்துக்களது சூட்சியில் சிக்கி கழுத்தைக் கொடுத்துவிட்டு பின்னால் அவமானமடைந்து உட்கார்ந்திருக்கலாகாது.

ஜன்ஜிபார் கிராம்பு

ஜன்ஜிபாரிலுள்ள அசல் குடிபதிகள், வட்டிபளுவின் மிகுதியால் அழிந்து நாசமுற்றுப் போய்விட வேண்டுமென இந்தியாவிலுள்ள அநேக வியாபாரிகள் கருதுகின்றனர். ஜன்ஜிபார் அதிகாரவர்க்கம் இதனை ஏற்றுக்கொள்ள இயலாத நிலைமையிலிருக்கிறது. இதற்காக அக்கவர்ன்மெண்ட் சில சட்டங்கள்மூலம் அங்குள்ள அசல் குடிபதிகளின் பொருளாதார நிலைமையைக் காப்பாற்ற முயற்சித்தது. இதன் பயனாய் ஜன்ஜிபாரிலுள்ள ஹிந்து வியாபாரிகள் இங்குள்ள காங்கிரஸ் கமிட்டிக்குத் தெரிவித்து, இந்தியாவில் கிராம்பு வியாபாரத்தை பஹிஷ்கரிக்கவேண்டுமென முடிவுசெய்து அக்காரியம் நடைபெற்று வருகின்றது. இதனால் ஜன்ஜிபாரிலுள்ள அசல் குடிகளாகிய அராபியருக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

1936-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஒன்றரை லக்ஷம் பொருமதியுள்ள கிராம்பு இறக்குமதி செய்யப்பட்டது. 1937 நவம்பரில் 18 ஆயிரம் பொருமதியுள்ள சரக்கு வந்திருக்கிறது. 1936-ல் மூவாயிரம் ஹண்டர்வேட் எடையுள்ள சரக்குகள் இறக்குமதியாயின. 1937-ல் 24 ஹண்டர்வேட் சரக்குகள் வந்திருக்கின்றன.

ஆகவே, ஜன்ஜிபார் கிராம்பு பஹிஷ்காரம் எத்தோரணையில் நடைபெற் றிருக்கிறதென்பதை நம் முஸ்லிம்கள் கவனித்து பஹிஷ்காரத்திலீடுபடாது, முன்வந்து கிராம்பு வியாபாரத்திலீடுபட்டு முஸ்லிம் சோதரர்களுக்கு உதவிபுரிவார்களாக.

வார்தா கல்வித் திட்டம்

காந்திஜீயின் அறிவிப்பிற்கிணங்க வார்தாவில் நடைபெற்ற கல்வி சீர்திருத்தக் கூட்டம் அடியிற் காணுமாறு தீர்மானித்திருக்கிறது.

1. ஆரம்பக் கல்வி கற்பதன் காலத்தை நான்கு வருடங்களுக்குப் பகரமாய் ஏழுவருடங்கள் வரை ஏற்படுத்தப்படல் வேண்டும்.

2. தாய்ப் பாஷையில் கல்வி கற்பிக்கப்படல் வேண்டும்.

3. ஒவ்வொரு ஸ்கூலிலும் கல்வி கற்பிக்கப்படும் தோரணையில் அதற்கேற்றாற்போல் பலவாறான கைத்தொழிற் முறைகள் கற்பிக்கப்படல் வேண்டும். இதனால் மாணவர்கள் கல்வி கற்றுக்கொள்வதுடன் கைத்தொழிலிலும் தேர்ச்சையடைந்து விடுவர். மாணவர்கள் கற்றுக்கொள்ளும் கைத்தொழிலின் பயனாக தங்கள் கல்விக்கேற்படும் செலவுகளையும், ஸ்கூல் செலவுகளையும் சம்பாதித்துவிடலாம்.

இதுவன்றி கவர்ன்மெண்டார் உயர்தர கலாசாலைகளுக்கே அதிகப் பணம் செலவிட்டு வருவதால் அப்பணத்தை மீதப்படுத்தும் தோரணையில் அக்கலாசாலைகளை இடித்துவிட வேண்டுமென காந்திஜீ யோசனை கூறியிருப்பதுடன் அதிகாரத்தோரணையி லேற்படுத்தப்பட்டுள்ள உயர்தர கலாசாலைகளுக்குப் பகரமாய் ஒவ்வொரு சமூகத்தாரும் தம் வாலிபர்களுக்காக உயர்தரக் கல்விக்குள்ள வசதியளித்துக் கொள்ள வேண்டுமென அபிப்பிராயப்படுகின்றார். காந்திஜீயின் இந்த யோசனைப் பிரகாரம் காரியாதிகள் நடைபெறுமாயின் முஸ்லிம்கள், தீண்டப்படாதார் முதலிய ஏழை சிறுபான்மையோர்மீது உயர்தரக் கல்வியின் தலைவாயலே அடைபட்டுப்போமென்பது திண்ணம். ஏனெனில், இந்தியாவில் செல்வம் படைத்த ஹிந்துக்கள் அதிகமா யிருக்கின்றனர். அன்னோர் தங்கள் சமூக வாலிபர்களுக்காக ஆங்காங்கு உயர்தரக் கலாசாலைகள் ஏற்படுத்தி விடுவர்; ஆனால் முஸ்லிம்கள் ஏழைகளாக விருக்கின்றனர். அவர்களிடம் உயர்தர கலாசாலைகள் ஏற்படுத்துவதற்கு போதிய திரவியங் கிடையாது; ஒவ்வொரு இடத்திலும் உயர்தரக்கல்வி பயிலுவதற்குள்ள மாணவர்கள் கிடைக்கமாட்டார்கள்; இதனால் முஸ்லிம்கள்மீது உயர்தரக்கல்வியின் தலைவாயல் அடைபட்டே போகும். எனவே காந்திஜீயின் இவ்வாலோசனை முஸ்லிம்களுக்கு எவ்வளவு

தூரம் பாதகம் விளைவிப்பதாக விருக்கிறதென்பதை நண்பர்களுணர்வார்களாக.

மாணவர்களுக்கு உயர்தரக் கல்வி புகட்டுவதற்காக நம் கவர்ன்மெண்டார் அளித்துள்ள அற்ப சொற்ப வசதிகூட நம் காந்திஜீக்கு பிடிக்கவில்லை போலும். இதற்கு மாற்றமாய் துருக்கி கவர்ன்மெண்டார் உயர்தரக் கல்வி சம்மந்தமாய் அளித்துள்ள வசதிகளை இதன் கீழ் தருகிறோமாதலால் நண்பர்கள் இவ்விரண்டிற்குமுள்ள வித்தியாசங்களை நன்கு தெரிந்து கொள்வார்களாக:—கலாசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு அதாவது கையில் புஸ்தகங்கள் எடுத்துச்செல்வோர், யூனிபாரம் யணிந்திருப்போருக்கு டிராம், பஸ் முதலிய வாகனங்களில் நான்கிலொரு சார்ஜ் வாங்கப்படுகிறது; மாணவர்கள் உபாத்தியாயர்களுடன் புதினவீடு, ஆரோக்கியசாலை, பூங்காவனம் இவைகளைச் சுற்றிப்பார்க்கச் செல்லுங்கால் டிராம், பஸ் இவைகளுக்கு எவ்வித கட்டணமும் வாங்கப்படுவது கிடையாது. மாணவர்களுக்கு இலவசமாய் கவர்ன்மெண்ட் புறத்திலிருந்து சாப்பாடு கொடுக்கப்படுகிறது. எந்த மாணவரிடமிருந்தும் எவ்வகையிலும் ஸ்கூல்சம்பளம் வாங்கப்படுவது கிடையாது. இதுவென்ன? மாணவர்களின் தாய் தந்தையர் ஏழைகளா யிருப்பார்களாயின் அம்மாணவர்களின் பிரத்தியேக செலவுக்கும் கவர்ன்மெண்டார் நன்கொடை அளிக்கின்றனர். சமூகத்தின் ஆயிரக்கணக்கான மாணவர்கள் இலவச இருப்பிடம், உடை, சாப்பாடு முதலிய சகல வசதிகளுடனும் கல்வி பயின்று வருகின்றார்கள். இவர்கள், பிற்காலத்தின் தேச நிருவாகத்தை தக்க முறையில் செலுத்திச் செல்லவேண்டியவர்களா யிருப்பதால் இவர்களது கல்வி சம்மந்தமாய் எவ்வளவு செலவு செய்தபோதிலும் அது வீண் செலவாக மாட்டாதென்பது தலைவர் காஜீகமால் பாஷாவின் கருத்தாகும். எத்தேசம் தன் மக்களுக்கு கல்வி புகட்டுவதையும் அன்னோருக்கு ஒழுங்கு முறைகளைக் கற்பித்துக் கொடுப்பதையும் தேச க்ஷேமமெனக் கருதுகின்றதோ அத்தேசம் வெற்றி வாழ்க்கை அடையுமென்பது திண்ணம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
208354
சென்னை-600 008

முஸ்லிம்கள் கவனிப்பார்களாக

நம் தலைவர் ஜனுப் M. A. ஜின்னு அவர்கள் முஸ்லிம்களின் எக்கூட்டத்திற்குச்சென்ற போதிலும், அங்கு விஜயஞ் செய்திருப்போரை நோக்கி, "முஸ்லிம்காள்! உங்கள் வீட்டில் தீ மூட்டப்பட்டிருக்கிறது; யான் அபாய அறிகுறி மணியடித்துக்கொண்டிருக்கிறேன்; நீங்கள் இதுபொழுதாகிலும் விழித்து முன் வரவில்லையாயின் நீங்கள் தேசிய விஷயத்தில் சற்றும் சம்மந்தமில்லாது பின் தள்ளப்பட்டவர்களாய் விடுவீர்களென்பது திண்ணம்" யென, கூறிய வண்ணமாகவே இருக்கின்றார். ஜனுப் ஜின்னு அவர்களின் அறைகூவலை தக்க முறையில் செவியுற்ற பின்னரும் நம் முஸ்லிம் நேயர்களிற் பல்லாயிரக்கணக்கானோர் ஆழ்ந்த தூக்கத்தில் மதிமயங்கிக் கிடப்பது நமது துர்அதிர்ஷ்டவசமேயாகும்.

முஸ்லிம் நேயர்காள்! உலகிலுண்டான ஒவ்வொரு பெரிய பெரிய சக்தியும் தன் முன்னேற்ற விஷயத்தில் எவ்வளவுதூரம முன்னேற்ற மடைவதற்கு முயற்சித்து வருகிறதென்பதை ஒருமுறையாகிலும் கண்ணெடுத்துப் பார்ப்பீர்களாக. ஜர்மனி தனது 39-வது பட்டாளத்தை மும்மடங்கு அதிகமாக்கி, 25 லக்ஷம் வாலிபர்களை ஆயுத மணிந்தவர்களாக்க முயற்சிக்கின்றது. அமெரிக்க ஐக்கிய நாடு தன் கடற்படையை பலப்படுத்த அமெரிக்க பார்லிமெண்ட் சபையிலிருந்து $55\frac{1}{2}$ கோடி டாலரின் கோரிக்கை செய்துகொண்டிருக்கிறது. முஸோலினி பழைய உரோமனிய அரசாக்ஷியின் எல்லைகளை அடைவதற்காக யுத்தம்புரிய முயற்சித்து வருகிறது. இதற்காக 30 லக்ஷம் ஆப்ரிக்க வாலிபர்களை யுத்த பயிற்சியி லீடுபடச் செய்து யுத்தகளம் அழைத்துச் செல்வதற்கு முயற்சிக்கப்படுகிறது. ரஷ்யாவில் 40 லக்ஷம் ஏக்கர் நிலம் செயற்கை மழையினுல் பயிர் செய்யப்பட்டு ஐந்துமடங்கு அதிகமான வரு-

படிக்கு வழிசெய்யப்பட்டிருக்கிறது. ஜப்பானின் பல லக்ஷ வாலிபர்களது தியாகங்களும், மூர்க்கத்தன்மையும் இப்பூமண்டலத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்குகளிலும் பெருந்திகைப்பையும், நடுக்கத்தையும் உண்டுபண்ணி வைத்திருக்கிறது. பிரிட்டனின் முன்னேற்ற தியாகத்தைக் குறிப்பிடுவதற்கு அங்குள்ள ஓர் லார்டு சென்ற 10 வருட காலத்திற்குள் தனது சமூகத்தாரின் முன்னேற்றத்தைக் கருதி ஒரு கோடியே பதினைந்து லக்ஷம் பவுன் நன்கொடை அளித்திருப்பதே போதிய சான்றாகும்.

மேலே கூறியுள்ள உதாரணங்களைக்கண்டு ஈதெல்லாம் வெகு தூரத்திலுள்ள சமாசாரங்களென்று நீங்கள் ஒருக்கால் கூறக்கூடும். இது உண்மை விஷயமேயாகும். என்றாலும் நீங்கள் வெகு தூரத்துக்குச் செல்லவேண்டாம்; சதா உங்களுடனேயே கலந்துறவாடும் உங்கள் அயல் பாகக்காரர்களின் நிலைமையை கவனியுங்கள். அவர்களின் தலைவர்கள், வழிகாட்டிகள் முதலானோர் தங்கள் சமூகத்தினர்களின் முன்னேற்ற விஷயத்தில் கவனத்தைச் செலுத்திக்கொண்டு தன்னிலையற்றவர்களாய்த் திரிவதை நோக்குங்கள். அவர்கள் ரயில் பிரயாணஞ் செய்வதற்கு பதிலாய் ஏரோபிளேனில் பறக்கின்றனர்; அவர்கள் கடிதங்களுக்குப் பகரமாய் தந்திகள் மூலம் தங்கள் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவந்து விடுகின்றனர்; தேசம் முழுதிலும் பத்திரிகை மூலமும், அறிக்கை வாயிலாயும், கான்பரன்ஸ் கூட்டியும் பெரும் கிளர்ச்சியை உண்டுபண்ணி வைத்து விடுகின்றனர். பாரீஸ் தேசத்தில் வெளுத்துவரும் உடையை அணிந்து கொண்டிருந்தோர் இன்று சுயவீட்டில் வசிப்பதை வெறுப்பவர்களாய் விட்டனர். அவர்களது படுக்கைகள் சதாவும் வாகனத்திலேயே யிருந்து வருகிறது. அவர்களின் உணவு மோட்டாரிலேயே நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் பிரயாணத்தில் நோய் வாய்ப்பட்டால் பிரயாணத்திலேயே சிகிச்சை செய்து கொள்கின்றனர். அவர்கள் ரயில்வே ஸ்டேஷன்களில் தங்கள் இன பந்துக்களுடன் இரண்டொரு நிமிஷம்மட்டில் சொந்தச் செய்தி பேசிவிட்டு பிறகு சமூக சேவையின் பக்கல் கவனத்தைச் செலுத்தி விடுகின்றனர்.

சங்கையான முஸ்லிம் நேயர்காள்! நீங்கள் தியாகஞ் செய்வதற்கு முன் வாருங்கள். ஆரோக்கிய வாழ்க்கை, சுவண்டி பெறுதல் இவைகளின் எண்ணங்களை விட்டொழியுங்கள். உங்கள் சமூகத்தினரை முன்னேற்ற வழியிற் கொண்டுவர முயற்சியுங்கள். உலகின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் யுத்த அறிக்கை செய்யப்பட்டுப் போயிற்று; பல்லாயிர ஆண்டுகளாய் சவங்களைப்போன்று உணர்வற்றுக்கிடந்த சமூகத்தினர் இதுகாலை வாழ்க்கையென்னும் மைதானத்தின் முன்னணியி லிருக்கின்றனர். முஸ்லிம்காள்! நீங்கள் எழுந்து இஸ்லாத்தின் வரிசையை ஒழுங்கு படுத்துங்கள். இஸ்லாத்தின் உரோஷத்தையும் வீரத்தன்மையையும் காரிய முறையில் அனுஷ்டித்துக்காட்டுங்கள்.

சோதரீர்! முஸ்லிம்கள் எழுந்து நிற்பதற்கான காலம் வந்து விட்டது. முஸ்லிம்களின் ஹிருதயத்தி லமைந்துள்ள மின்சார சக்தியை ஒருமுறையாகிலும் முழு முயற்சியோடு அவர்கள் வெளிப்படுத்திக் காண்பித்து விடுவார்களாயின் இதன்முன் ஒவ்வொரு சமூகமும் அடிபணிந்து தீரவேண்டிய நிலைமையே ஏற்பட்டுவிடும். நண்பர்காள்! வழிபார்த்துக் கொண்டிருக்கும் நேரம் இதுவல்ல, உடனே முற்பட்டு சமய சந்தர்ப்பமென்னும் சாக்குப் போக்குகளை விட்டு வெளியில் வாருங்கள். உங்கள் நபிகள் திலகம் (ஸல்) அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றி இஸ்லாத்தின் கொடியை உயர்த்துங்கள். இந்த உங்களது முயற்சி உங்களைக் காரிய சித்தி யடைபவர்களாய்ச் செய்து விடுமென்பது திண்ணம். முஸ்லிம்காள் ஜாக்கிரதை! நேயர்காள் உஷார்!! உஷார்!!!.

சிலோன் சந்தா நேயர்கட்கு!

அன்பீர்! ஒவ்வொரு ஆண்டிற்குமுள்ள சந்தா ரூபாயை ஆரம்பத்திலேயே கொடுத்து அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டியது பிரதானமாக இருக்க, அனேகர் சென்ற ஆண்டுகளின் சந்தா தொகையை செலுத்தாதே இருக்கின்றீர்கள். இதுபொழுது நம் சங்க பிரதிநிதிகள் அவடம் வந்திருப்பதால் நண்பர்கள் தங்கள் பாக்கிகளை அவர்களிடம் கொடுப்பதுடன் புதிய ஆண்டிற்குரிய சந்தா ரூபாய்களையும் செலுத்தி விடுமாறு வேண்டுகின்றோம்.

மானேஜர்.

முஸ்தபா கமால் பாஷா

துருக்கி தேசியத்தலைவர் முஸ்தபா கமால் பாஷா அவர்களுக்கு அனதோலியாவின் சுற்றுப் பிரயாணத்தில் நிகழ்வுற்ற ஓர் ஆச்சரிய சம்பவம் பக்தாதில் வெளியாகும் 'அல்பிலாத்' என்னும் பத்திரிகையில் வெளியாயிருப்பதை நேயர்களின் பார்வைக்கு அப்படியே தருகின்றோம்.

காஜீ கமால்பாஷா அவர்கள் அன்வர் கோட்டி என்னும் பட்டணம் சென்றபோது பட்டணம் முழுதிலுமுள்ள மக்கள் அங்கு நடைபெற்ற ஊர்வலத்தைப் பார்ப்பதற்காக திரள் திரளாக வந்து கூடினர். இதில் ஏற்கனவே துருக்கி சிப்பாயாகவிருந்த மஹ்மூத்ஷௌகத் பாஷாவின் புத்திரியுமிருந்தனர். இம்மாது ஆகாயவிமானப் போட்டியில் தேர்ச்சி பெற்றிருந்தனர். ஆனல், இம்மாது ஆங்கு நடைபெற்ற தர்பாருக்குப் போய்ச் சேர்ந்துகொள்ள முடியவில்லை. உட்புறத்திலும் வெளியிலும் தக்க பாரா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கவர்னர்கள், பட்டாள கர்னல்கள் தவிர வேறு யாரும் உள்ளால் செல்வதற்கான சக்தி பெற்றில்லை. இங்கிலைமையில் ஹைபா கானம் என்னும் அம்மாது சோர்வுற்று தன் சிநேகியின் ஓர் வீட்டில் சற்றுநேரம் உட்கார்ந்து மாலையில் பட்டணத்தின் கடைசி எல்லையிலுள்ள தன் விடுதிக்குப் புறப்பட முற்பட்டார்.

அம்மாது அசந்து களைப்புற்றவர்போல் மெள்ள மெள்ள நடந்து செல்வதைக்கண்ட ஓர் துருக்கி சிப்பாய், அம்மாதண்டை சென்று அவர் களைப்புற்று சோர்வடைந் திருப்பதைத் தெரிந்து தன் உதவிகொண்டு நடந்து செல்லுமாறு கூறினர். அம்மாது பிற ஆண் பிள்ளையின் உதவிகொண்டு செல்ல விரும்பவில்லையாயினும் இருவரும் பேசிக்கொண்டே அம்மாதின் வீடுபோய்ச் சேர்ந்தனர். இதற்கிடையே அம்மாது, முஸ்தபா கமால் பாஷா தம்மீது கவனம் செலுத்தி முன்னேற்றத்திற்குக் கொணர்ந்து ஏதாகிலுமொரு உத்தியோக மளிக்காதிருக்கும் விஷயமாய் அநேக குறைகளை வழி நெடுகிலும் சொல்லிக்கொண்டே வந்தார். இதனை செவியுற்றுக்கொண்டே வந்த அந்த சிப்பாய், பிரக்யாதிபெற்ற இன்ன சிபாபின்மகள் விஷயமாய் முஸ்தபா கமால்பாஷா கவனஞ் செலுத்தாதிருப்பதை அவருடைய ஞாபகத்திற்குக் கொண்டு வருவதாகக் கூறினர்.

அம்மாது தமதிருப்பிடஞ் சென்றவுடன் தாழிடப்பட்டிருந்த கதவு திறக்கப்படுவதற்காக கைதட்டினள். உடனே வாலிபப் பருவமுடைய அவளது மருமகள் கதவைத் திறந்தவுடன் தன் மாமியாருடன் துருக்கித்தலைவர் கமால் பாஷா நிற்பதைக்கண்டு அவள் திடுக்கிட்டனள். காஜீ முஸ்தபா கமால் பாஷா சிப்பாய் யுடை அணிந்து குடிகளின் விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்காக வெளியிற் கிளம்பியிருந்தார். இவரை மருமகள் நன்கறிவாளாதலின் உடனே குனிந்து சலாம் செய்து துருக்கியின் தந்தையே வென அழைத்தாள். இதனைச் செவியுற்ற அம்மாது தன்னுடன் வந்திருப்பது துருக்கித்தலைவரான முஸ்தபா கமால் பாஷாவாகு மென்பதைத் தெரிந்து கொண்டவுடன் மிக மிக பயந்து விட்டார். அம்மாது விஷயமறியாது துருக்கி தலைவர் விஷயமாய் தூஷணை செய்ததைக்கருதி கையை முறித்துக்கொண்டு மன்னிப்புக் கோரினர். அதுபொழுது துருக்கியின் தந்தையார் அம்மாதை நோக்கி, 'என தருமை சகோதரியே! என்னை துருக்கியின் தந்தை என்று அழைக்காதீர்; யானே உலகத்தைப் படைத்து ரக்ஷித்துக் காப்பாற்றிவரும் அல்லாஹ் தஆலாவின் தாழ்மையான ஓர் அடிமையாகும். தன் சமூகத்தைப் பாதுகாப்பதற்கு இவ்வடிமை நியமிக்கப்பட்டி ருக்கின்றான். யானே அத்தொண்டை சரிவர நிறைவேற்ற முடியாதவனக இருக்கின்றேன், எனக் கூறினர். ஆம்மாது இவ்வரும் மொழிகளைச் செவியுற்றவுடன் அவர் விஷயமாய் அல்லாஹ்விடம் துஆச்செய்து, இவ்வாறு மார்க்கபக்தி சிறந்து விளங்கும் ஒருவரை மார்க்க பற்றற்றவரென மக்கள் கூச்சலிடுவது பேராச்சரியமாக விருக்கிறது எனக் கூறினர்.

அதுபொழுது முஸ்தபா கமால்பாஷா அவர்கள், அருமை சகோதரியே! மக்கள் கூறுவதின்மீது பொல்லாங்கு சொல்லாதீர். உண்மை விஷயமென்னவெனின், யான் என்னை முஸ்லிம் என்று சொல்லிக் கொள்வதற்கே வெட்கப்படுகின்றேன். அல்லாஹ்வின் கட்டளைக்கு வழிபட்டு நடந்து வருபவர்களே உண்மை முஸ்லிம்களாகும். யான் எனது இச்சைக்கு வழிபட்டு நடந்துவருகின்றேன். யான் எந்த முகத்தைக்கொண்டு முஸ்லிமென சொல்லிக் கொண்டு வெளியில் வருவேன். ஹஸ்ரத் பாருக்க அஃலம், காலிதிப்னுவலீத், இமாம் ஹுஸைன் (ரலி-ம்) இவர்கள் தங்களையே இஸ்லாத்திற்காக தியாகஞ் செய்திருக்கிறார்கள். இம்மகான்களுக்கு முன்னிலையில் யான் அற்பமாக மதிக்கப்படுபவனுவேன். அல்லாஹ்தஆலா எனக்கு சுவர்க்கத்தையோ, நரகத்தையோ கொடுப்பதற்கு பிரார்த்திக்காது எக்கடமைகள் என்மீது சுமத்தப்பட்டிருக்கின்றதோ அவைகளை தக்க முறையில் நிறைவேற்றுதற்கான ஆற்றலை எனக்களிக்குமாறும், அல்லாஹ்தஆலா எனது சேவையை ஏற்றுக்கொள்ளுமாறும் வேண்டிக் கொள்வீராக வென, துருக்கியின் தந்தையான முஸ்தபா கமால் பாஷா கூறிவிட்டு தமதிரும்பிடஞ் சென்று அம்மாதிற்கு உயர் பதவி அளிக்குமாறு உத்தரவிட்டார்.

தன்னலமற்ற தியாகிகளது வாழ்க்கைமுறை எவ்வாறிருக்கிறதென்பதை நம் தலைவர்களும் ஏனையோரும் நன்கு தெரிந்துகொண்டு, மக்களைச் சீர்திருத்தம் செய்வதற்கான மார்க்கம் வாய்ப்பேச்சிலில்லாது அனுஷ்டானத்திலிருக்கிறதென்பதை நன்குணர்ந்து கொள்வார்களாக.

உலக முன்னேற்றம்.

நியூயார்க் டைம்ஸ்

நியூயார்க் நகரின் பிரஸ்தாபமில்லாத ஓர்மூலையில், பொது மக்களிடையே பிரஸ்தாபமில்லாத ஒருவர் ஓர் சிறிய இடத்தை வாடகைக்கு அமர்த்தினர். அதுபோதிய வெளிச்சமும் ஜன்னல் வசதியுமில்லாத இருட்டான நெறுக்கமுள்ளதாயிருந்தது. அதில் எவ்வித அலமாரியோ, டெலிபோனே, வேறு சிங்காரிப்புக்குள்ள சாமான்களோ கிடையாது. ஒருமூலையில் ஒடிந்த ஓர் மேஜையும் மெழுகுவத்தியும், மைக்கூடு பேனுவும், சில காகிதத்துண்டுகளுமே இருந்தன. எந்த இடத்திலிருந்து முதன் முதல் 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையின் முதல் பிரதி வெளியானதோ அந்த காரியாலயத்திலுள்ள சாமான்கள் இதுவேயாகும்.

இதே பத்திரிகை இதுபொழுது இருபது மாபெரும் கட்டடங்களிலிருந்து வெளிவருகிறது. அக்கட்டடங்களிலொவ்வொன்றும் 20 ஆயிரம் சதுர அடி கொண்டதாகும். அதன் தினப்பிரதி நான்கு லக்ஷமும் வாரப்பதிப்பு எட்டுலக்ஷப் பிரதிகளும் வெளியாகின்றன. அத்தொழிற்சாலையில் இரண்டாயிரம் மக்கள் வேலை செய்கின்றனர். அன்னோருக்கு வருஷமொன்றுக்கு பத்து லக்ஷம் பவுன் சம்பளம் கொடுக்கப்படுகிறது. சற்றேறக்குறைய பனிரண்டு லக்ஷம் பவுன் காகிதத்திற்காகவும், ஐம்பதினுயிரம் பவுன் மைக்காகவும், இரண்டு லக்ஷம் பவுன் பத்திரிகை வினியோகத்திர்க்காகவும் செலவிடப்படுகின்றன. பத்திரிகையின் நிருவாகம் ஆறுவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. (1) ஒரு வகுப்பார் சமாசாரங்களைச் சேகரிக்கின்றனர். (2) மற்றொரு வகுப்பார் குறிப்பு நோட்கள், தலையங்கங்கள் வரைகின்றனர். (3) ஒரு வகுப்பார் பத்திரிகையின் வரவு செலவு கணக்கு வைத்திருக்கின்றனர். (4) ஒரு வகுப்பு மெஷின், டைப் இவைகளின் மேன்பார்வை செய்கிறது. (5) ஒரு வகுப்பு தொழிலாளிகளிடம் வேலை வாங்குவதிலும் அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதிலு மீடுபட்டிருக்கிறது. (6) ஒரு வகுப்பு அங்குள்ள பலவாறுன காரியாதிகளிலு மீடுபட்டிருக்கின்றது.

'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகாலயத்திலுள்ள லைப்ரேரியில் 25 ஆயிரம் உயர்தர புத்தகங்க

ளிருக்கின்றன. வெளியிலிருந்து அனுப்பப்படும் சமாசாரங்களை தானே டைப் செய்யக் கூடிய ஒரு டஜன் எலக்டிரிக் டைப்ரைட்டிங் மிஷன்களிருக்கின்றன. அங்குள்ள ஓர் இடத்தில் வயர்லஸ் கருவிகள் அமைக்கப்பட்டிருப்பதால் பல ஆயிர மைல்களுக்கப்பால் நடைபெறும் விஷயங்களெல்லாம் உடனுக்குடன் அங்கு தெரிந்துவிடுகிறது. தந்திமூலம் சமாசாரங்கள் வாங்குவதற்கு மட்டும் 70 கிளர்க்குகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அச்சடிக்கும் காரியம் இவைகளைவிட அதி ஆச்சரியமாக இருக்கிறது. அதாவது, 1600 குதிரைவேகமுள்ள 20 மோட்டர் மிஷன்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இதில் மணி ஒன்றுக்கு நான்கு லக்ஷத்திற்கதிகமான பிரதிகள் தயாராய் மின்சாரத்தின் மூலமே பத்திரிகை வெளியிடப்படும் இடத்திற்கு வந்து சேர்ந்துவிடுகின்றது. பத்திரிகையின் சொந்தக்காரர் இதுவரை இரண்டரை கோடிப்பவுன் சம்பாத்தியஞ் செய்திருக்கின்றார். இலாபத்தின் நூற்றில் மூன்று பங்கு பாகஸ்தர்களுக்கு பங்கிட்டுக்கொடுப்பது போக மீதமுள்ள யாவற்றும் பத்திரிகாபிவிர்த்தியிலேயே சிலவிடப்படுகின்றது. இதுபொழுது அப்பத்திரிகாலயத்திலுள்ள சகல சாமான்களும் சேர்ந்து 35 லக்ஷம் பவுன் பொறுமதியுள்ளதாக இருக்குமென மதிப்பிடப்படுகிறது.

ஆக்ரா தியால்பாக்

ஆக்ராவுக்குச் சில மைல் தூரத்திலுள்ள ஓர் இடத்தில் "தியால்பாக்" என ஓர் ஊர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவ்வூர் ஆரம்பிக்கப்படும்போது அதன் நிருவாகிகளிடம் 5 ஆயிரம் ரூபாய்கள் மட்டுமே இருந்தன. இதுபொழுது அவ்வூரில் 3½ ஆயிரம் ஏக்கர் பூமியில் கட்டடம் அமைக்கப்பட் டிருக்கிறது. சுமார் ஆயிரம் மாணவர்கள்வரை கல்விபயின்று வருகின்றனர். கட்டடங்களுக்காக 50 லக்ஷம் ரூபாய்கள் செலவழிக்கப்பட் டிருக்கின்றன. 'தியால்பாக்'கு சொந்தமான பல தொழிற்சாலைகளி விருக்கின்றன. கைத்தொழில் ஸ்கூலும், இன்ஜினீரிங் காலேஜும், அனுதைச் சாலையும், வெள்ளாமை செய்யுமிடங்களும், கிணறு தோட்டங்களும் இருக்கின்றன. கடைகளும் பல பாக்டரிகளும் இருக்கின்றன. சுருங்கக் கூறுமிடத்து, அவ்விடத்தில் கைதேர்ந்த 1500 தொழிலாளர் வேலை செய்து வருகின்றனர். அங்குள்ள தொழிற்சாலைகளில் மின்சார விசிரிகளும், சிறிய பெரிய கத்திகளும், பவுண்டன் பேனுக்களும், கிராம்போன் மிஷன்களும், பூட்ஸ் முதலிய சாமான்களும் வைத்திய சிகிச்சை ஆப்ரேஷனுக்குத் தேவையான ஆயுதங்களும், தங்கம் வெள்ளி சாமான்களும் தயாராகின்றன. ஒவ்வொரு மாதத்திலும் 50 ஆயிரம் ரூபாய் வரும்படி வரக்கூடிய சாமான்கள் வெளியிலனுப்பப்பட்டு வருகிறது.

நம் முஸ்லிம் நேயர்களுக்கு வெள்ளாமை கைத்தொழில் முதலியவைகளில் எவ்வித உற்சாகமோ, ஊக்கமோ இருப்பதாய்த் தெரியவில்லை. இஃதென்ன நூதன வஸ்துக்களைக் கண்டு பிடிப்பது, தொழிற் சாலைகளை ஏற்படுத்துவதன் உற்சாகம் இந்தியாவிலில்லாது ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களில் காணப்பட்டுவருகிறது. அங்குள்ளோருக்கு நூதன வஸ்துக்களைக் கண்டு பிடிப்பது, நூதன தொழிற்சாலைகளை அமைப்பது இவைகள் மிக மிக விருப்பமான விஷயங்களாகவே இருக்கின்றன. சரித்திரம், ஒழுக்கம் முதலியவைகளைக் கற்பதைவிட்டு சைன்ஸ் ஆராய்ச்சியி லீடுபட அவ்வுலகங்கள் முயற்சித்து வருகின்றன. இதுகாலே நாம் வாசனை திரவியங்களுக்காக புஷ்பங்களைத் தேட வேண்டியதும், பாலுக்காக மாடுகளை வளர்ப்பதும் தேவையில்லை. மனிதன் தனக்குத் தேவையான வஸ்துக்கள் யாவற்றையும் தேவையான அக்ஷணமே பூமியினின்று தயாரித்துக் கொள்ள முயற்சித்து வருகின்றான். சேர்க்கை தங்கம், சேர்க்கை வாசனை, சேர்க்கை நெய் பால், சேர்க்கை முத்து, வைரக்கற்கள், பட்டு தினுசுகள் முதலியவைகள் கண்டுபிடிக்கப்பட்டு போயிற்று. ஏறிச் செல்வதற்கு குதிரை, ஒட்டகத்தின் தேவையில்லாது போயிற்று. சமையல் செய்வதற்கு விறகு எண்ணெய் தேவையில்லை. தோட்டிகளின் உதவியன்றி வீடு துப்பறவு செய்யப்பட்டு போகிறது. வேலையாட்களன்றி கடை சாமான்கள் வீடுவந்து சேர்ந்து விடுகின்றது. அம்பட்டனன்றி சவரம் செய்யப்பட்டுபோகிறது. வீட்டில் உட்கார்ந்தவாறே உலகம் முழுவதிலும் நடைபெறும் சமாசாரங்களைத் தெரிந்து கொள்வதற்குள்ள வசதி ஏற்பட்டுப்போயிற்று. இச்சம்பவ நிகட்சிகளடங்களும் மக்களின் அபிவிர்த்தியில் ஓர் பெரும் மாறுதலை உண்டு பண்ணி வைத்து விட்ட தென்பதை நன்கு தெரிந்து கொள்கின்றோம்.

ஜனப் ஜின்னாவின் வீர கர்ஜனை

இந்திய முஸ்லிம்களின் இணையிலாத் தலைவரும், அகில இந்திய முஸ்லிம் லீகின் அக்ராஸனாதிபதியுமான ஆலீ ஜனப் முஹம்மத் அலிஜின்னா அவர்கள் ஆற்றிய ஓர் அரிய சொற்பொழிவு :—

"நமது முஸ்லிம் லீக்கின் இலக்ஷியமானது பரிசுத்த இஸ்லாத்தின் போதனைகளை விட்டும் தனியாய் ஒருபோதும் பிரிக்க முடியாததாகும். ஏனெனில், இஸ்லாத்தின் போதனை, முஸ்லிம் லீக்கின் நடைமுறை இவ்விரண்டின் அடிப்படையானது சகோதரத்வம், சமத்துவம், சுதந்திரம் ஆகிய விழுமிய லட்சியங்களின் மீது நிறுவப்பட்டதாகும். மானிட வாழ்க்கையில் அன்றன்றாடம் உதயம் முதல் அஸ்தம் வரையில் நிகழ்பெறக்கூடியன வெல்லாம் மேற்கூறிய முப்பெரும் தத்துவத்துடன் சம்பந்தப்பட்டனவாகும்.

ஆகவே, இவ்விழுமிய நோக்கங்களுடன் திகழும் முஸ்லிம் லீக்கானது முஸ்லிம்களுக்கு மட்டும் பாடுபடும் ஸ்தாபனமென்று கருதவேண்டாம்; அது தேசமக்கள் எல்லோருக்கென்று, பாரபக்ஷமின்றி, சமரஸ நோக்கோடு உழைத்து வரும் ஸ்தாபனமாகும்.

9 கோடி முஸ்லிம்கள் ஐக்கியம்

முஸ்லிம் லீக்கின் முதற்பெரும் நோக்கம் இந்துஸ்தானத்திலுள்ள 9 கோடி முஸ்லிம் மகா ஜனங்களையும் ஐக்கியப்படுத்தி ஒரே கட்டுப்பாட்டிலாக்குவதே யாமென்பதில் சந்தேகமில்லை. இந்த வேலையானது கொஞ்ச நாட்களாக யாரும் எதிர்பார்த்திராத வண்ணம் அத்துணை தீவிரமாய் தெய்வீக சக்தியேபோல் முன்னேற்றமடைவதைக் காணுகின்றோம்.

ஒவ்வோரிடத்திலும் முஸ்லிம்கள் இஸ்லாமிய கொடியின்கீழ் சேர்ந்து ஆங்காங்கு முஸ்லிம் லீக் ஸ்தாபிதஞ்செய்து, சமூகப் பிரச்னையை யுணர்ந்து, தேச சமூக நலன்களுக்காகப் பாடுபட்டு வருவதைக் கொண்டு இதை நன்குணரலாம்.

இரண்டாவது வேலை.

முஸ்லிம் லீக்கானது அடுத்தபடியாய் மேற்கொண்டிருக்கும் பெரியதோர் வேலை யாதெனில்; காங்கிரஸின் பெரும் பெரும் தலைவர்களுக்கு, தேச சமூக க்ஷேமத்திற்கான நேரான வழியைக் காட்டுவதாகும். ஏனெனில், இப்போது ஹிந்து சமூகத்தின் பெரும்பான்மை (மெஜாரிட்டி) பலம் பெற்று, சமூகத்துக்காக வேலை செய்துவரும் காங்கிரஸ்காரர்கள், தங்கள் வேலை முறைகளை, தாராள நோக்குடனில்லாமல், ஒரு மிகக் குறுகிய நோக்குடன் புரிந்துவருகின்றார்கள். இதில் அவர்களுடைய வேலைத்திட்டமும் கொள்கையும், பொதுப்படையாய் தேசத்தாரனைவருக்கும் தீங்கு செய்வதாகவே இருந்து வருகின்றது.

ஹிந்துக்களுக்கு காங்கிரஸின் தீங்கு

காங்கிரஸ்காரர்களின் தற்காலப் போக்கு முஸ்லிம்களுக்கு எதிரிடையாயிருக்கிறதென்பதைப்பற்றி இங்கு நான் முக்கியமாய் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால், அறியாமையினாலோ வேறு கருத்தைக் கொண்டோ இப்போது காங்கிரஸ்காரர்கள் அனுஷ்டித்து வரும் போக்கானது, பெரும்பாலான ஹிந்துகளுக்கே தீங்காகவும் விபத்தாகவும் வந்து முடியப் போகிறது.

எனவே, காங்கிரஸின் போக்கிலுள்ள இடையூறை, ஹிந்துக்களில் ஒரு சாரார் உணர்ந்துகொண்டு, காங்கிரஸையே எதிர்க்கத் துணிந்துவிட்டதால், அதைக் கண்டு நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில், காங்கிரஸினால் ஹிந்துக்களில் ஒரு பகுதியினருக்கு நேரிடும் தீங்கை விட்டும் தங்களை தற்காத்துக் கொள்ள வேண்டியது அவர்களின் கடமையேயாகும்.

தேசியமே முஸ்லிம் லீக்திட்டம்

முஸ்லிம் லீக்குடைய வேலை முறைத்திட்டமானது, நாட்டு விடுதலைக்கும் சமூக க்ஷேமத்துக்கும் அடிப்படையான தேசிய இலக்ஷியப் படியேதான் அமைக்கப்படுகிறது. முஸ்லிம் லீக் திட்டம் தாராள மனப்பான்மையுடனும்,

ஆழ்ந்த நோக்குடனும் அமைக்கப்பட்டிருக்கிறது. முஸ்லிம் லீக்குடைய செயல் முறையில் இந்தியாவின் எந்தக் சிறு சமூகத்துக்கும் தீங்கு உண்டாகமாட்டாது.

தற்போது நம் இந்தியாவுக்கு அளிக்கப் பட்டுள்ள புதிய அரசியல் சீர்திருத்தத்தை, கண்ணை மூடிக்கொண்டு பகிஷ்கரித்து விடுவதோ, அல்லது கண்ணை மூடிக்கொண்டு முற்ற முற்ற ஏற்றுக்கொண்டு விடுவதோ முஸ்லிம் லீகின்நோக்கமல்ல. ஆனால், அந்தப் புதிய சீர்திருத்தத்தை அமுல் நடத்திப் பார்த்து, அதில் நாம் எம்மட்டும் பிரயோஜனம் எடுத்துக்கொள்ள முடியுமோ அதை எடுத்துக் கொள்வது முஸ்லிம் லீக்குடைய நோக்கத்திலொன்ருகும்.

எந்த ஒரு விஷயத்தையும் எடுத்த எடுப்பிலேயே கெட்டதென்று தள்ளிவிடக்கூடாது. அந்தக் 'கெட்டதைக்'கொண்டு அதையே நல்லதாகச் செய்துவிடுவதுதான் சாமர்த்தியம். இது புதிய அரசியல் விஷயத்தில் முஸ்லிம்லீக் கொண்டுள்ள அபிப்பிராயம். இதை காங்கிரஸ் காரர்கள், அகராதியில் இல்லாத அர்த்தங் கொண்டு திரித்துக்கூறி விபரீதப் படுத்துகின்றனர்.

முதலாளித்துவமும் காங்கிரஸும்

காங்கிரஸ்காரர்கள், எது மகாக் கொடியகாரியம் என்று கூறுகிருர்களோ அதையே செய்தும் வருகின்ருர்கள். ஏகாதிபத்தியமும், முதலாளித்தன்மையும், ஜமீன்தாரி முறையும் கூடவே கூடாதென்று, அவற்றை அழித்து ஒழித்து இல்லாமலாக்க வேண்டுமென்று வாசாமகோசரமாய்ப் பேசி வருகின்ருர்கள். ஆனல் அதையே அவர்கள் அறிந்தோ அறியாதோ செய்து வருகின்ருர்கள். இன்று எத்தனையோ முதலாளிகளும், ஜமீன்தார்களும் காங்கிரஸிலிருந்துகொண்டு தங்கள் சொந்த காரியங்களில் ஏழைகளைக் கசக்கிப் பிழிந்து கொண்டுதான் வருகிருர்கள். இதற்கு ஒருவகையில் காங்கிரஸ் ஆதரவு கொடுத்துக்கொண்டுதான் வருகின்றது.

முஸ்லிம் லீக்கானது, காங்கிரஸ்காரர்களை 'ஆகாயக் கோட்டைகள் கட்டவேண்டாம்' என்று வற்புறுத்தி வருகிறது. அதாவது, தற்காலம் ஏழைகளுக்கு என்ன அனுகூலம் செய்து தரமுடியுமோ அதை முதலில் செய்து தரும்படி வேண்டுகிறது. ஆனல், ஒரே அடியாய் தேசத்தின் ரீதியையே மாற்றியமைத்துவிடப் போகின்றோம்; கொஞ்சம் பொறுங்கள் என்று காங்கிரஸ் கூறுகிறது. இத்தனைகாலம் கஷ்டப்பட்டுப் பொறுத்துக் கிடந்தது போதாமல், இன்னமும் பொறுத்துக் கிடக்கவேண்டுமாம்.

பெரும்பான்மையின் நம்பிக்கை

காங்கிரஸ்காரர்கள், ஜனங்களது ஆதரவு பெற்று, பதவிகளுக்கு வந்ததும், தங்கள் பொறுப்புக்களை மறந்து விட்டார்கள். தங்களுக்குப் பெரும்பான்மையினரின் ஆதரவு இருக்கிறதென்ற மமதையில் சிறு பான்மையினரின் பாத்தியதையை அலக்ஷியம் செய்து விட்டார்கள். சிறு பான்மையினர் எம்மட்டோ முறையிட்டுக் கேட்டுக்கொண்டும், "சிறுபான்மையினர் பிரச்னை இப்போது தீரக்கூடிய விஷயமல்ல" என்று உதாசீனஞ் செய்துவிட்டு, தங்கள் பெரும்பான்மை சமூகத்தினருக்கு மட்டும் பிரயோஜனமான காரியங்கள் செய்து கொடுப்பதிலீடுபட்டு விட்டனர்.

காங்கிரஸ்காரர்கள், இங்ஙனம் தான்தோன்றித்தனமாய் நடந்துகொண்டால், சிறுபான்மையினர் அவர்கள்மீது எங்ஙனம் நம்பிக்கை வைக்க முடியும்?

காங்கிரஸ்காரர்களின் நடப்புக்களைக் கண்டு ஹிந்துக்களிலேயே ஒரு பெரும் பகுதியினருக்கு வெறுப்பும் மனஸ்தாபமும் ஏற்பட்டுள்ளன. இதையொட்டி எத்தனையோ ஹிந்துப் பிரமுகர்கள் என்னிடம் முறையிட்டுக்கொண்டு, காங்கிரஸின் போக்கைப்பற்றி அதிருப்தி தெரியப்படுத்தி யிருக்கின்ருர்கள்.

காங்கிரஸ்காரரிடம் ஆட்சிமுறை யென்னும் கடிவாளம் கொடுக்கப்படவே, அவர்கள், இனி சர்வமும் தங்களுடையதுதான் என்ற மமதைக் கொண்டு, நடந்துகொள்ளலாயினர். அதிகார போதை அவர்கள் மூளையை குழப்பிவிட்டது. ஆகவேதான் சிறுபான்மையினரை அலக்ஷியம் செய்து வருகின்றனர்.

முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்

மாகாண சுயாட்சிமுறை அளிக்கப்பட்டதின் பயனுக, அநேக மாகாணங்களில் பெரும்பான்மை சமூகத்தாராகிய காங்கிரஸ்கார ஹிந்துக்களுக்கு மந்திரிசபைகள் கிடைத்திருக்கின்றன. அங்கெல்லாம் அவர்கள் தங்களுடைய ஆட்களையே மந்திரிகளாய் நியமித்து, பிற ஜனப்பிரதிநிதிகளை ஒதுக்கித்தள்ளி வைத்திருக்கின்றனர்.

அங்கெல்லாம், முஸ்லிம்கள் ஹிந்துக்களோடு ஐக்கியப்பட்டு எல்லா விஷயங்களிலும் ஒத்துப் போக வேண்டுமென்று வற்புறுத்தப்படுகின்றனர். ஆனால், முஸ்லிம்கள் தங்கள் இஸ்லாமியக் கொள்கைகள், ஆசாரம், பாஷை, வழக்க ஒழுக்கம், வணங்கும் முறை—இவை யெல்லாவற்றிலும், ஹிந்துக்களுடைய வழக்க ஒழுக்க ஆசாரப் பாஷைகளுக்கு எதிரான அனுஷ்டானம் பெற்றுள்ளவர்களா யிருக்கின்றனர்.

ஆகவே, அப்படிப்பட்ட விஷயங்களில் முஸ்லிம்கள் ஹிந்துக்களுடன் எப்படி ஒத்துப் போக முடியும்? முடியாது. எனவே, முஸ்லிம்கள் தங்களுடைய மதம், ஆசாரம், பழக்கவழக்கம், பாஷை இவைகளிலான பாத்தியதைகளை பாதுகாத்துக் கொண்டுதான் தீருவர். அவசியமாயின், இதற்காக போரிடவும் முஸ்லிம்கள் தயாராயிருக்கின்றனர். முஸ்லிம்களுக்கு வேண்டியது சமூக பாத்யதைகள்தான். இதுவிஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் விட்டுக்கொடுத்து விடுவார்களாயின், அப்புறம் மற்றெல்லா விஷயங்களிலும் காங்கிரஸ்காரருடன் ஒத்துழைக்கத் தயார்!

சம்பாஷணை

ஜனுப் ஜின்னுஹ் அவர்கள் சில முஸ்லிம் மாணவர்களுக்கு, தற்கால அரசியல் பிரச்னைகளைப்பற்றி போதித்துக்கொண்டிருந்தபோது அங்கு வந்திருந்தவர்களில் பத்திரிகா நிருபராகிய ஒரு ஹிந்து வாலிபருமிருந்தார். அப்போது ஜனுப்ஜின்னு அவர்கள் பற்பல பிரச்னைகளைப் பற்றியும் கூறிவிட்டு, முஸ்லிம் மாணவர்களிடம் கேட்லானுர்கள் :—சோதரீர்! காங்கிரஸானது முஸ்லிம்களுக்கென்று விசேஷமான நன்மை ஏதாவது செய்திருக்கிறதென்று உங்களால் எடுத்துக் காட்ட முடியுமா? காங்கிரஸுக்குள் சேவாசமிதியென்றும், மற்றும் பெயர்களுடனும், எத்தனையோ சபைகள், ஹிந்துமத சமுதாய நன்மைகள் செய்துவருகின்றனவே அங்ஙனம் எந்த ஒரு முஸ்லிம் மதஸ்தாபனத்துக்காவது காங்கிரஸ் ஆதரவு அளித்திருக்கிறதா?" என்று கேட்டார்.

ஹிந்து வாலிபர் :— (ஜனுப் ஜின்னுவை நோக்கி) ஐயா! தங்களுடைய சம்பாஷணையில் குறுக்கிடுவதற்கு என்னை அனுமதிக்கக் கோருகின்றேன்:

ஜனுப் ஜின்னு :—ஆஹா! தாராளமாய் கேளுங்கள்.

ஹி. வாலிபர் :—காங்கிரஸானது முஸ்லிம்களுக்கு தனிப்பட ஒன்றுஞ் செய்யவில்லையென்று கூறினீர்களே. அது வாஸ்தவம். ஆனால் ஹிந்துக்களுக்குத் தான் அது என்ன சாதித்து விட்டது?

ஜ. ஜின்னு :—சேவாசமிதிபோன்ற ஸ்தாபனங்கள், ஹிந்து மத சமூகத் தொண்டுகள் புரியவில்லையா? இந்த ஸ்தாபனத்தில் காங்கிரஸ் பிரமுகர்களும், தேசீய வாதிகளும் அதிகம் சம்பந்தப்பட் டிருக்கின்றனர் என்பதை மறுக்க முடியுமா?

ஹி. வாலிபர் :—அங்ஙன மிருக்கக் கூடும். ஆனால் காங்கிரஸானது அகில இந்திய தேசிய ஸ்தாபனம் என்ற ஹோதாவில் நேரடியாய் ஸேவாஸமிதியுடைய காரியங்களுக்கு எங்ஙனம் பொறுப்பேற்றுக் கொள்ள முடியும்? ஆகவே, காங்கிரஸானது தேசீய ஸ்தாபனம் என்ற ஹோதாவில், ஹிந்து மதத்துக்கு ஒன்றுஞ் சாதிப்பதில்லை யென்று தெரிவித்துக் கொள்கிறேன் *

ஹி. வாலிபர்:—மிஸ்டர் ஜின்னு! சில முஸ்லிம்கள், கூட்டங்களிலும் மேடைகளிலும், பிற சமூகத்தினர் மனம் புண்படும் முறையிலும்,

---

* குறிப்பு:—இந்த வாதம், இதர சமூகத்தினர் குறை கூறுவார்களே என்பதை விட்டும் தப்பிப்பதற்காகும். காங்கிரஸிலுள்ள பெரும் பெரும் தலைவர்களெல்லாம் யார்? மதப்பற்றும் ஜாதி அபிமானமுமுள்ள ஹிந்து தலைவர்களல்லவா? காங்கிரஸ் மகாசபையின் சார்பாக செய்கிறோம் என்று பகிரங்கமாகக் கூறிச்செய்யாவிடினும், அவர்கள் தலைவர்கள் என்ற ஹோதாவில் ஹிந்துமதாசாரத்துக்கு அல்லும் பகலும் நன்மை செய்துகொண்டு தானிருக்கிறார்கள். எனவே, காங்கிரஸ் செய்தாலென்ன? காங்கிரஸ் தலைவர்கள் செய்தாலென்ன? இரண்டும் ஒன்றுதான். காங்கிரஸ் தலைவரெல்லாம், இந்தியர் அனைவருக்கும் பொதுவான தலைவர்கள் என்றல்லவா அர்த்தமாகிறது. அங்ஙனமிருக்க, அவர்கள் தனிப்பட்ட குறுகிய மனப்பான்மையுள்ள ஸ்தாபனங்களில் சம்பந்தம் வைத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட சமூகாசாரத்துக்கு சேவை செய்யலாமா? அங்ஙனம் அவர்கள் பொதுவான தலைவர்கள் என்பது வாஸ்தவமாயின் சேவாசமிதியுடன் சேர்ந்து வேலை செய்ததைப் போல் ஏதாவது இஸ்லாமிய சங்கங்களுடனும் சேர்ந்து, முஸ்லிம்களுடைய மதாசார நன்மைக்காக ஏதேனும் செய்திருக்கலாமல்லவா? அங்ஙனமிருக்க, இதை மட்டும் ஏன் புறக்கணித்து ஒதுக்குகின்றனர்.

வகுப்புச் சச்சரவு கிளம்புவதற்கு ஏதுவான முறையிலும் கண்டனப் பிரசங்கங்கள் செய்கின்றார்களே? இது தங்களுக்குத் தெரியுமா?

ஜனப் ஜின்னு:—ஓஹோ! அப்படியானல், ஹிந்துமகா சபையின் புதிய தலைவரான ஸ்ரீ. ஸாவர்க்காருடைய பேச்சுகளைப்பற்றி என்ன சமாதானம் கூறுகிறீர்?

ஹி. வாலிபர்:—எம் ஹிந்துக்களிலே ஸ்ரீ. ஸாவர்க்கார், பாய் பரமானந்தர் போன்றவர்கள், அத்தகைய துவேஷப் பிரசங்கங்கள் செய்து வருகின்றார்க ளென்பது வாஸ்தவம் தான். ஆனல், முஸ்லிம்களிலே ஒவ்வொருவரும் இதே ரீதியில் தானே பிறமத காரியங்களைத் தாக்கிப் பிரசங்கம் செய்கின்றனர்?

ஜ. ஜின்னு:—சரி! அங்ஙனம் ஹிந்துக்கள் பிரசங்கம் செய்வதிலும், முஸ்லிம்கள் பிரசங்கம் செய்வதிலும் நிறைய வித்தியாஸமிருக்கிறது. ஹிந்துப் பிரசங்கிகள், மத்திய ஹிந்து ஸ்தாபனத்தினுல் பயிற்சி அளிக்கப்பட்டு தக்க பக்கபலத்தோடு அம்மாதிரியாக முஸ்லிம்களைத் தாக்கிப் பேசுகின்றனர். ஆனல், முஸ்லிம்களுக்கு அந்தவிதமான பயிற்சியும் பக்கபலமும் அளிக்கும் ஸ்தாபனமோ, பிரமுகர்களோ கிடையாது. எனவே, சில முஸ்லிம்களும், காலால் மெறிக்கப்பட்ட புழுவு சீறுவதைப்போல், தனிப்பட்ட முறையில், ஏதேதோ கூறித்திரிகின்றனர். இதைக் காரணமாக வைத்துக்கொண்டு, காங்கிரஸாரும் மற்றவர்களும், முஸ்லிம்களை மதவெறியர் என்றும், வகுப்புவாதிகளென்றும் பிறுத்தி, முழு முஸ்லிம் சமூகத்தின்மீதே விரோதம் பாராட்டுகின்றனர். இது நியாயமாகுமா?

ஹி. வாலிபர்:—அதைப்பற்றி நான் ஆக்ஷேபிக்கவில்லை. முஸ்லிம்கள் ஸ்தாபன பயிற்சியோ, பிரமுகர் பொருளுதவியோ பெறறில்லாமல் போகட்டும், சேவா சமிதியைப்போல் அவர்களில் ஸ்தாபனமில்லாது போகட்டும், அதைப்பற்றி எமக்கென்ன? ஆனல், எந்த வகையிலும் அவர்கள், ஹிந்துக்களுக்கு விரோதமாய் பிரசங்கித்து பாமர மக்களைத் தூண்டுவது ஆக்ஷேபிக்கத் தக்கதுதானே!

ஜ. ஜின்னு:—ஆமாம்! முஸ்லிம் பிரசங்கிகள், தங்கள் சமூகஜனங்களை உறக்கத்தினின்று தட்டி எழுப்பி முன்னேற்றப் பாதையிற் செல்லும்படித் தூண்ட, பிற சமூகங்களாகிய ஹிந்துக்களுடைய அனுஷ்டான காரியாதி உதாரணங்களை கூறி போதிக்கின்றனர். இது எப்படி துவேஷமான பிரசங்கமாகும். அப்படி இதை துவேஷப் பிரசங்கம் என்றுல், ஹிந்துக்கள் மட்டும் முஸ்லிம்களைப்பற்றி மேடைகளிலும், சபைகளிலும், பத்திரிகைகளிலும் ஓயாமல் ஒழியாமல் துவேஷப் பிரசாரங்கள் செய்து வருகின்றனரே! அதையெல்லாம் செய்யலாமோ?

ஹிந்து, முஸ்லிம் இரு சமூகங்களுக்கிடையே துவேஷத்தை உண்டாக்கி சச்சரவை மூட்டுவதற்கு முக்கிய காரணமாய் இருப்பவர்கள் ஹிந்துக்களே. வியாபார ஸ்தலங்களிலும் ஹிந்துக்கள் முஸ்லிம்கள் விஷயத்தில் தீண்டாமை அனுஷ்டிக்கின்றனர். ஹிந்துவுடைய உணவுப் பொருளை ஒரு முஸ்லிம் அறியாமல் தொட்டுவிட்டால், ஏதோ குடி முழுகிவிட்டதைப் போல் கடைத்தெரு ஹிந்துக்களையெல்லாம் சேர்த்துக்கொண்டு, அவ்வெளியவனை அடிக்க வந்து விடுகின்றனர். இதனுலெல்லாம், வகுப்பு துவேஷம் உண்டாவது யாரால்?

நண்பரே! அந்த ஊர் வம்புகளை யெல்லாம் பேசிக்கொண்டிருந்தால் ஒருக்காலும் விவாதமும் பிரசினையும் தீர மாட்டாது. நாம் அரசியல் துறையை கவனிப்போம். மந்திரி வேலைக்கு லாயக்கான முஸ்லிம்கள் எத்தனையோ பேர், பொதுமக்களால் பெரும்பான்மை ஓட்டுகளால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டிருந்தும், காங்கிரஸ்காரர்கள், அவர்களையெல்லாம் உதாசினஞ் செய்துவிட்டு, தங்களுக்கு அடிபணிந்து தாஸானு தாஸராய் கைகட்டி வாய்ப்பொத்தி நடக்கும் ஒரு சில முஸ்லிம்களை மட்டும் ஆங்காங்கு நியமித்துள்ளனரே, இது எத்தனைப் பெரிய துவேஷமான காரியம்பாரும். காங்கிரஸ் தலைமைப் பதவி என் கைவசமிருந்தால், இந்த சந்தர்ப்பத்தில் நான் எவ்வளவு தந்திரமாய் காரியாதிகளி லீடுபட்டிருப்பேன் என்பது உமக்குத் தெரியுமா? (அதன் பின் நடந்த சம்பாஷணை முக்கியமல்ல.)

ஜனப் முகம்மத் அலி ஜின்னு

தேசியத் தலைவர் ஜனப் எம். ஏ. ஜின்னு அவர்களின் ஆரம்ப சரிதையையும், ஆங்காங்கு நிகழ்த்திய சொற்பெருக்குகளையும், வீரமொழிகளையும் தெரிந்துகொள்ள விரும்புவோர் எம். எல். ஜி. அவர்களால் எழுதப்பட்ட மேற்கண்ட நூலை வாங்கி வாசித்து விஷயங்களைத் தெரிந்துகொள்வார்களாக. கிரயம் அணு 6. (தபால் செலவு பிரத்தியேகம்)

கிடைக்குமிடம் :—ஜின்னு புக் டிபோ, மவுண்டு ரோடு, சென்னை.

வகுப்பு வாதிகள் யார்?

நமது நாட்டில் வதியும் ஹிந்து சோதரர்களி லனேகர் உண்மையில் தேசிய வாதிகளா? அல்லது வகுப்பு வாதிகளா?—என்ற விஷயம் ஒரு மறைமுகமான ரகஸ்யமாகவே இருந்து வருகின்றது. ஏனெனின், ஹிந்து சோதரர்களிலனேகர் எந்தப் பிரச்னையைப் பற்றிப் பேச வாய்திறந்தாலும் முதலில் முஸ்லிம்களை 'வகுப்பு வாதிகள்' என்று தூஷிக்காமல் இருப்பதில்லை.

இங்ஙனம் தாங்களே பெரிய வகுப்பு வாதிகளாயிருந்து கொண்டு, பிறரை வகுப்பு வாதிகளென்று சதா கூறிக்கொண்டிருப்பது அவர்களது நயவஞ்சகத்தன சாமர்த்தியமேயாகும்.

தேசத்திலே யார் அதிகமான வகுப்பு வாதத்தைக் கிளப்பி சச்சரவுகளுக்கும் பிணக்குகளுக்கும் மூலகாரணமாயிருந்து வருகின்றனர் என்ற விஷயம், பத்திரிகைகள் படித்துவரும் பழக்கம், பகுத்துணரும் சக்தியுடைய கல்வி ஞானமுடைய ஜனங்கள் நன்கறிந்தே யிருக்கின்றார்கள்.

நம்மை தூஷிப்பதின் ரகசியம்

ஹிந்துக்கள், நம் முஸ்லிம்களை எதற்காக வகுப்புவாதிகளென்றுகூறி, வீண்பழி சுமத்தி வருகின்றனர் என்ற ரகசியத்தை முஸ்லிம் உலகம் நன்கறிந்தே தானிருக்கிறது. ஹிந்துக்கள் தேச பக்தியில் எவ்வளவு சிறந்தவர்களென்பதையும், அவர்கள் தொண்டு செய்வதில் எத்துணை தூரம் தூய்மையான எண்ணம் கலந்திருக்கிற தென்பதையும் நம் முஸ்லிம் அறிஞர்கள் அறியாமலில்லை.

ஆனால் ஹிந்து சமூகத்திலுள்ள பாமர ஜனங்களும், இதர பொதுமக்களும் ஹிந்துத் தலைவர்கள் புரிந்துவரும் சுயநல வாதங்களையும் காரியங்களையும் உள்ளாவுள்ளபடி நன்குணர்ந்து கொள்ளும் வண்ணம், அதிலுள்ள ஊழல்களையும் ரகசியங்களையும் வெளிப்படுத்திவிட வேண்டியது மிக மிக முக்கிய விஷயமாகும். இங்ஙனம் ஹிந்துக்களுடைய ஊழல்களை பகிரங்கப்படுத்தி விட்டால் அப்புறம், வகுப்பு வாதிகள் யார்? உண்மையாக நேச நலத்தை விரும்புகிறவர்கள் யார்? ஹிந்துக்களா? முஸ்லிம்களா? என்பனபோன்ற மிக முக்கிய பிரச்னைகள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கிவிடும்.

பாமர மக்களை ஏய்க்கும் விதம்.

இதுகாலை ஹிந்துத்தலைவர்கள் கூறும் ஒரு தலைப்பட்சமான தூஷணை மொழிகளை பாமர மக்களும் கூறி பிற சமூகத்தினரை பரிகாசஞ் செய்யத் தொடங்குகின்றனர். இதனால் பாமர மக்களுக் கிடையே மனஸ்தாபங்களும் வகுப்புச் சச்சரவுகளும் உண்டாகின்றன. ஆகையால் ஹிந்துத்தலைவர்கள், முஸ்லிம்களை எதற்காக வகுப்பு வாதிகள் என்று கூறி வருகின்றனர் என்ற ரகசியத்தை பாமர ஜனங்களுக்கு விளக்கிவிட்டால், அப்புறம் அவர்கள் ஜாக்கிரதையாய் விடுவர்; தலைவர்களுடைய கபட நாடகங்களை உணர்ந்துகொள்வர்; தங்களுக்குள் சச்சரவிட்டுக் கொள்வதையும் விட்டு சமாஸமாய் வாழ விரும்புவர்.

ஹிந்துத் தலைவர்களுடைய சுயநல பேச்சுகளையும், நடத்தைகளையும் பாமரமக்கள் உணர்ந்து கொள்வார்களாயின், அதன்பின் அத்தலைவர்களுக்கு செல்வாக்குக் குறைந்து, ஆர்பாட்டம் அடங்கிவிடும். அதன்பின் அவர்கள், உண்மையாகவே தேசத்துக்கும் சமூகத்துக்கும் தொண்டாட்டத் தலைப்படுவர்.

ஹிந்துக்கள் எந்தத்துறையிற் சென்றாலும் மதாசாரத்தைப் பிரதானமாய்க் கருதி அரசியல் விஷயத்தில் அவர்கள் மதச் சடங்குகளை கொண்டுவந்து புகுத்துவதை இக்காலை நாம் பார்த்து வருகின்றோம். அப்படிப்பட்ட மனப்பான்மையுள்ள ஹிந்துக்களுடைய செயல்களில் முற்ற முற்ற வகுப்புவாதம் வெளிப்படாமல் வேறென்ன வெளிப்படும்?

ஹிந்துக்களுடைய மனப்பான்மைகளையும் கபடநாடகங்களையும் நாம் வெளிப்படுத்திக் கூறத் தொடங்கினால், அது பெரும்பாலோ

ருக்கு கசப்பாகவும் மனக்குறைபாகவும் தோன்றும். ஆயினுமென்ன உண்மையை எடுத்துக் கூறுங்கால் எவருடைய விருப்பு வெறுப்பையும் நாம் பொருட்படுத்தக்கூடாது.

மேலும், ஹிந்துக்கள், முஸ்லிம்களை சதா கேவலமாய் தூஷித்துக்கொண்டும், வகுப்புவாதிகள், மத வெறியர்கள் என்றும் கூறித் திரிவதைக்கண்டு, ஆத்திரமும் ரோஷமுமடைந்த நம் முஸ்லிம்களில் ஒரு சாரார், அதற்கு பதிலுக்குப்பதிலாய், ஹிந்துக்களை நாமும் அவ்வாறு தூஷிக்க வேண்டுமென்றும், எதிர்த்துப் போராட வேண்டுமென்றும் கூறுகின்றனர். இது கொஞ்சமும் ஒவ்வாத விஷயம். ஹிந்துக்களை நாம் ஏன் தூஷிக்கவேண்டும்; அவர்களை நாமேன் எதிர்க்கவேண்டும். இப்படிச் செய்வதனால், நஞ்சமூகத்துக்கோ தேசத்துக்கோ எத்தகைய பிரயோஜனமுமுண்டாகமாட்டாது.

ராமராஜ்யக் கனவு

ஆகவே, அரசியலுக்கே சதா தொண்டாற்றுவதாகவும், தேசநலனுக்கே தியாகங்கள் செய்வதாகவும் இக்காலே பறைசாற்றிவரும் ஹிந்துத் தலைவர்களுடைய அந்தரங்க மனப்பான்மைகளென்ன? அவர்களுடைய மனத்தில், பிறமதங்களை ஒழித்து ஹிந்து தர்மத்தை—ராமராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற விஷத்தன்மை எத்துணைமட்டும் ஊறிப்போய் கிடக்கிறதென்பதை, அம்பலத்துக்குக் கொண்டுவந்துவிட்டால், அவர்களைப்பற்றி அப்புறம் ஜாக்கிரதை ஏற்பட்டுவிடும். அதன்பின் அவர்களுடைய துவேஷப் பிரசாரங்கள், பாமர மக்களால் வெறுத்துத்தள்ளப்பட்டு அவர்களுடைய செல்வாக்கும் தானே ஒழிந்துபோம். ஆகவே, இந்த நல்ல நோக்கத்தைக்கொண்டு நாம் இங்கு, ஹிந்துமத வாதிகள், தேசநலத்துக்கும் சமூக ஒற்றுமைக்கும் பாதகமான முறையில் எங்தெந்த வகைகளில் விஷமப்பிரசாரங்கள் செய்து வருகின்றனர் என்பதை விளக்குவான்வேண்டி சில சம்பவங்களை ஈங்கெடுத்துக்கூறி சற்றே விமர்சனம் செய்வோம்.

வகுப்புவாரி பிரதிநிதித்துவம்

சிறுபான்மை தொகுதியினருக்கு (முஸ்லிம்களுக்கு) வகுப்புவாரி பிரதிநிதித்துவம் (கம்யூனல் அவார்ட்) அளிக்கும் விஷயமாய், காங்கிரஸ்கார ஹிந்துக்களுடையவும், ஹிந்துமகா சபாகார (ஆரிய சமாஜ) ஹிந்துக்களுடையவும் அபிப்பிராயங்கள் ஒரேவிதமாகவே இருந்துவருகின்றன. அதற்கு எதிரிடையாய் அவ்விரு சாராரும் கூறும் காரணமும் மொழிகளும் மட்டும் வெவ்வேறாய்க் காணப்படுகின்றன. அவை:—

காங்கிரஸ்கார ஹிந்துக்கள் கூறுவதாவது:—

"முஸ்லிம்கள் கேட்பதைப்போல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டால், மொத்த ஸ்தானங்களில் மூன்றில் ஒரு பாகம் அவர்களுக்குப் போய்விடுகிறது. இதனால், அவர்களுடைய தனித்தொகுதி சக்தி அளவுக்கதிகமாய் மிகைத்துப் போகிறது. இப்படி முஸ்லிம்களுக்கு அதிக வன்மையும், சுய சக்தியும் கிடைத்துவிட்டால், அப்புறம் தேசீயத்துக்கும் சமுதாய இயக்கத்துக்கும் அவர்களால் கெடுதி நேரிடும்; பிறகு ஹிந்து சமுகத்துடன் அவர்கள் சேர்ந்து உழைக்க மாட்டார்கள்" என்பதாகும்.

பாய் பரமானந்தின் எதிர்ப்பு

இதுவிஷயமாய் ஆரியசமாஜ (ஹிந்துமகா சபாகார) ஹிந்துக்கள் கூறும் காரணப் பேச்சுகள், அதைவிட மகா குரோதமும் விரோதமும் கொண்டதாகும். ஆரியசமாஜத் தலைவரான பாய் பரமானந்தர் இதுவிஷயமாய் கூறுவதாவது:—

"வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையானது முஸ்லிம்களுக்கு பெருத்த அனுகூலமானதாகும். அது ஹிந்துக்களுக்குப் பெருங் கெடுதியானதாகும். ஹிந்துக்கள் சாதாரணமாய் முஸ்லிம்களுக்கு கொடுக்கலாமென்று நாடும் அளவைவிட மிக மிக அதிகமான பாத்யதைகள் (ஸ்தானங்கள்) அந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையினால் முஸ்லிம்களுக்கு கிடைத்து விடுகிறது. ஆகையால் ஹிந்து சமூகத்தினரெல்லோரும் சேர்ந்து பெருங்கிளர்ச்சி செய்து, முஸ்லிம்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கிடைக்காதவிதமாய் அரசியல் முறையை மாற்றி அமைத்துவிடவேண்டும்" என்பதாகும்.

எதிர்ப்பின் காரணம்.

முஸ்லிம்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அளிக்கக் கூடாதென்று ஹிந்துக்களெல்லோரும் எதிர்த்து வருவதின் காரணம் இன்னதென்பதை, பாய் பரமானந்தர் கூறியுள்ள கருத்துக்களிலிருந்து நம் முஸ்லிம் சோதரர்கள் நன்குணர்ந்து கொண்டிருப்பார்கள்.

காங்கிரஸ்கார ஹிந்துக்களைப்போல் ஆரிய சமாஜ (ஹிந்து மகாசபா)கார ஹிந்துக்கள், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களல்ல. ஆரியசமாஜிகள் இஸ்லாத்தை ஒழி

க்கவேண்டுமென்று பகிரங்கமாய் வேலை செய்ப வர்களாவர். ஆகையால், வகுப்புவாரி பிரதி நிதித்து விஷயத்திலும் அவர்கள் நம் முஸ்லிம் களுக்கு விரோதமான அபிப்பிராயத்தை வெளிப்படையாகவே கூறிவருகின்றனர்.

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டா மென்பதற்கு காங்கிரஸ்காரர்கள் கூறும் கார ணம் என்னவெனில், "தேசிய இலட்சியங் களுக்குப் பலமில்லாதுபோகும்; ஹிந்து முஸ் லிம் ஒத்துழைப்பு அற்றுப்போகும்........" என் பனவேயாகும். ஆம்! சுயராஜ்யம், சுயநல ராஜ யம் என்று ஹிந்துக்கள் இப்போதுகண்டுவரும் கனவும் பலிக்காமற் போய்விடும் என்பதுவு மாகும். இதுதான் உண்மை. ஆனால் காங்கிரஸ் இதை மறைத்து ஏதோ தேசநலத்தைப் பிர தானமாய்க்கருதி எதிர்த்து வருவதாக பிரகட னப் படுத்திக் கொள்வது வெளி வேஷமே யாகும்.

முஸ்லிம்கள் பெரும்பான்மை

முஸ்லிம்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித் துவம் அளிக்கக்கூடாதென்று எதிர்க்கும் ஹிந் துக்கள் வங்காளம் சம்பந்தப்பட்டமட்டில் அதை ஒருவாறு மழுப்பி வருகின்றனர். அதற் குக் காரணம் என்னவெனில், வங்காளமாகாண மானது முஸ்லிம்கள் பெரும்பான்மையாயிருந் துவரும் முஸ்லிம் மாகாணமாகும். அங்கு இப் போது முஸ்லிம்களுடைய பெரும்பான்மைப் பிரதிநிதிகளின் ஆட்சியே நடைபெற்று வரு கின்றது. ஹிந்துக்களுக்கோ இதர சமூகங்களுக் கோ, வங்காளத்தில் செல்வாக்கு கிடையாது. ஆகவே, வங்காளத்தில் முஸ்லிம்களுக்குள்ள பெரும்பான்மை சக்தியை எங்ஙனம் சீர்குலைக்கச் செய்யலாம் என்ற விஷயமாய் ஹிந்துமகா சபாக் காரர்களும் காங்கிரஸ்காரர்களும் என்னென்ன வோ பிரயத்தனங்கள் புரிந்துதான் வருகின்ற னர். இதையொட்டி ஹிந்துக்கள் கிளர்ச்சியும் செய்துவந்துள்ளனர்.

பொதுப்படையாய் ஹிந்துக்களுடையகொள் கையாதெனில், எல்லா மாகாணங்களிலுமே ஹிந்துக்களுக்கு பெரும்பான்மை யிருந்துவர வேண்டுமென்பதும், அதற்கு காங்கிரஸ் ஆட்சி யென்று பெயரிடவேண்டு மென்பதுவுமேயா கும். இப்போது காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வரும் மாகாணங்களிலெல்லாம் இதே கருத்துக் கொண்ட ஹிந்துராஜ்யம் தான் நடந்துவருகின் றது.

வங்காளப் பிரிவினை சூழ்ச்சி

வங்காளத்தில் முஸ்லிம்களுடைய பெரும் பான்மை சக்தியுள்ள முஸ்லிம் அரசாட்சி நடை பெற்று வருவதால், அங்கு, ஹிந்து ராஜ்யத் தை ஏற்படுத்துவதற்கு, ஹிந்துக்களுக்கு ஒரு சிறிதும் இடங் கிடைக்கவில்லை. ஆகவே, முஸ் லிம்களுக்கு இடையூறு செய்ய மற்றொரு சூழ்ச்சியைக் கையாளப் பிரயத்தனப்பட்டு வரு கின்றனர். அதாவது வங்காளத்தை (இந்திய புதிய அரசியலில் சேராத) இரு தனித்தனி மாகாணங்களாகப் பிரித்துவிடவேண்டும் என்ற கிளர்ச்சியை 'மறுமுறையும்' ஆரம்பித்துள்ள னர்.*

வங்காளம் பிரிந்தால்—

வங்காளத்தில் முற்ற முற்ற முஸ்லிம்களுக்கு மெஜாரிட்டி இருந்துவருவது வகுப்புவாதிக ளான ஹிந்துக்களுக்குப் பிடிக்கவில்லை. வங்கா ளத்தைப் பிரித்து விட்டாலாவது, அங்கு ஹிந்துக்களுக்கு ஒரு சிறு தனி மாகாணம் கிடைத்துவிடும் என்ற சுயநல வகுப்புவாத நோக்கங்கொண்டு கிளர்ச்சிசெய்து வருகின்ற னர். டில்லியிலுள்ள ஒரு ஹிந்துப்பத்திரிகை, இதைப்பற்றி மிக மிக வற்புறுத்தி யெழுதி வருகிறது. இத்தகைய பத்திரிகைகள், ஒரு பக்கம் ஹிந்து-முஸ்லிம் சமத்துவத்துக்காக பாடுபட்டு வருவதாய்க் கூறிக்கொண்டு மற் றொரு பக்கல் முஸ்லிம்களுடைய மெஜாரிட்டி ஒரு மாகாணத்திலுமில்லாது போய்விட வேண்டுமென்று வங்காளப் பிரிவினைப்போன்ற வகுப்புவெறியான விஷயங்களை கிளப்பி வரு கின்றன.

ஹிந்துக்களின் 'தேசநலம்'

ஹிந்துக்கள் யாருக்கு எத்தகைய தீங்குசெய் தாலும் அதெல்லாம் தேசபக்தியின் மேலீட் டால், தேசநலத்திற்காகவே செய்யப்படுகிற தென்று பறை சாற்றப்படுகிறது. ஹிந்து சமூ கத்தை மேன்மைக்குக் கொண்டுவந்து ஹிந்து ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற உட்

---

* சில ஆண்டுகளுக்குமுன் இவ்வாறே வங் காளத்தை இரண்டாகப் பிரித்துவிட வேண்டு மென்று பெருங்கிளர்ச்சி நடைபெற்று வந்தது. அப்போது ராஜப்பிரதிநிதியாயிருந்த லார்டு கர்ஸன், அவ்வாறே வங்காளத்தை இரண்டாகப் பிரித்தார். அதனால் நன்மைக்குப் பதிலாய் தீங்கே அதிகம் நேரிட்டதால், பழையபடி யிணைக் கப்பட்டது.

கருத்து, அந்த 'தேச நலத்'தில் விஷம்போல் மறைந்து கிடப்பது வெளிப்படுவதில்லை.

ஆனால் ஹிந்துக்களின் கபட எண்ணங்களை வெளிப்படுத்தி தங்களுடைய சமூகநலப் பாதுகாப்புக்காக முஸ்லிம்கள் ஏதேனும் சொல்லவும் செய்யவும் தொடங்கிவிட்டால், வந்தது மோசம்! வகுப்புவாதம், வகுப்புவாதம் என்ற கூச்சல் கிளம்பிவிடுகிறது. ஹிந்துக்கள் 'தேசநலத்'தின் பெயரால் செய்யும் காரியங்களை முஸ்லிம்களும் செய்தால் அது வகுப்புவாதமாய் ஆக்கப்பட்டு விடுகிறது. இதென்ன காலவிபரீதமோ!

அப்படியானால், முஸ்லிம்கள் தங்கள் சமூகத்தைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடாதா? சதா சர்வகாலமும் ஹிந்துக்களுடைய தயவை நாடி, அவர்களுடைய தாஸானுதாஸர்களாய் இருக்க வேண்டுமா? முடியாது, ஒருக்காலும் முடியாது. முஸ்லிம்கள் சுதந்தரதாகத்தோடு பிறந்தவர்கள்; அவர்கள் எப்போதும் சுயேச்சையாகவே இருக்க விரும்புகிறவர்கள்; யாருக்கும் ஒரு க்ஷணமும் அடிமைப்பட்டுக் கிடந்துழலமாட்டார்கள்.

பத்திரிகைகளின் கிளர்ச்சி

முஸ்லிம்கள் ஏதேனும் கோரினால் உடனே வகுப்புவாதக் கூச்சலைக் கிளப்பும் ஹிந்துப் பத்திரிகைகள் அநேகமிருக்கின்றன. அதுமட்டுமல்ல. அப்பத்திரிகைகள் சதா சர்வகாலமும் ஓயாமல் தூஷித்து, முஸ்லிம்களுக்கு விரோதமாய் ஹிந்துக்களை கிளப்பிவிடுவதையே ஜன்மத்தொழிலாய் கொண்டிருந்து வருகின்றன. இப்படிப்பட்ட ஈனத்தொண்டின் முன்னணியில் நிற்பவை லாஹூர் 'மிலாப்', டில்லி'தேஜ்', லாஹூர் 'பிரதாப்' போன்றவைகளாகும். நம் தமிழ்நாட்டிலும் அப்படிப்பட்ட பத்திரிகைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட கொடியவகுப்புவாத நாற்றம் கிளப்பும் பத்திரிகைகளை சற்றே புரட்டிப்பாருங்கள். ஒவ்வொரு தலையங்கமும், ஒவ்வொரு விஷயமும் முஸ்லிம்களுக்கு நேர் விரோதமான மனப்பான்மையுடன் எழுதப்பட்டதாகவே இருக்கும். உதாரணமாய்—"வங்காள முஸ்லிம் மந்திரி சபை ஆட்சியில் வகுப்புவாதம்"—"மேனாட்டில் டாக்டர் கல்வி கற்றுவர முஸ்லிம் மாணவர்களை தேர்ந்தெடுக்கப்பட்டனர்" "ஜின்னாவின் படுதோல்வி" "லீக் முறியடிக்கப்பட்டுப் போயிற்று", "மஸ்ஜித் முன் மேளம் வாஸிப்பது விலக்கல்ல" என்பன போன்ற வாக்கியங்கள் அதிகம் காணப்படும்.

முஸ்லிம்கள் இந்தியரல்லவா?

மேற்கூறிய விஷயங்களை ஹிந்துப் பத்திரிகைகள், வேஷதாரிப் பத்திரிகைகள் எத்துணைக் குரோதத்துடன் வெளிப்படுத்துகின்றன வென்பதை ஆராய்ந்து பாருங்கள். முஸ்லிம்கள் பெரும்பான்மையாய் வசிக்கும் மாகாணத்தில் முஸ்லிம் மாணவர்கள், மேனாட்டுக்குச் சென்றுவர தேர்ந்தெடுக்கப்பட்டதில் என்ன விபரீதமிருக்கிறது. மேனாட்டில் கல்வி கற்றுவர இந்திய மாணவர்கள் அனுப்பப்பட வேண்டுமென்பது தானே அரசாங்கத்தின் நோக்கம். முஸ்லிம் மாணவர்கள் இந்தியர்களல்லவா? கல்கத்தாவிலுள்ள முஸ்லிம் மாணவர்கள் சீனர்களா? ஜப்பானியரா? முஸ்லிம் மாணவர்கள் சீமையிலிருந்து டாக்டர்களாகி வந்தால், தேசத்தாரனைவருக்கும் தானே சேவை செய்யப்போகின்றனர். ஹிந்துக்களுக்கு சிகிச்சை செய்யமாட்டோம் என்று கூறப்போகின்றனரா? அங்ஙனமே, எதற்காக இத்தகைய வீண் பிரச்னைகளை யெல்லாம், அந்த ஹிந்துப்பத்திரிகைக்காரர்கள் கிளப்பி விடுகின்றனரோ தெரியவில்லை. ஓஹோ! இதெல்லாம் வகுப்புவாதமல்லவோ!

காங்கிரஸ்காரரை பாருங்கள்.

முஸ்லிம்களுடைய ஒவ்வொரு அனுஷ்டானங்களைப்பற்றியும் தவறானமுறையில்'கல்பனை' செய்து, முஸ்லிம்களை கேவலப்படுத்தி,கிளர்ச்சி செய்வதே, இக்காலை ஹிந்துக்களுடைய வழக்கமாய் இருந்து வருகின்றது. ஆனால் அங்ஙனம், முஸ்லிம்கள், ஹிந்துக்களுடைய வகுப்புவாதச் செயல்களைப்பற்றி ஒரு கூச்சலும் கிளப்புவதில்லை. ஹிந்துப் பத்திரிகைகள், முஸ்லிம்லீக் தலைவர்களைப்பற்றி அனாவசியமாய் அபவாதங்களைச் சுமத்தி பரிகாசஞ் செய்து எழுதிவருவதையும் நாம் படிக்கின்றோம். நாம் இதையெல்லாம் கண்டுங்கூட பேசாமல், அஜாக்ரதையாய் இருந்துவிடுவது நமது அசிரத்தையையும், ஊக்கமின்மையையும் காட்டவில்லையா?

முஸ்லிம்களே! காங்கிரஸ்காரர்கள் அனுதினமும் என்னென்ன செய்கிறார்கள் என்பதைப் பார்த்தாவது புத்துணர்ச்சி பெறுங்கள். நம் முஸ்லிம்களை வகுப்புவாதிகளென்று அவர்கள் என் கூறுகின்றனர் என்பதையோசித்துப்பாருங்கள்.

ஹிந்துப் பிரசங்கிகள் எங்கேனும் நம் முஸ்லிம்களைப்பற்றி தூஷணையாகப் பேசினால், உட

னே அவர்களை நோக்கி, "நீங்கள் காங்கிரஸ் லட்சியப்படி நடப்பவர்கள்தானு? ஹிந்து முஸ்லிம் சமரஸத்திற்கு நீங்கள் பாடுபடுபவர்கள் தானு? இந்தியர் யாவரும் சமத்துவமென நீங்கள் எண்ணுபவர்கள்தானு?'' என்ற கேள்விகளைக் கேளுங்கள்.

மேற்கூறிய அநேக விஷயங்களாலும், உதாரணங்களாலும், உண்மையில் வகுப்புவாதிகள் ஹிந்துக்கள்தான்—முஸ்லிம்களல்ல வென்பது தெளிவாய்விட்டது. இனி முஸ்லிம்கள் தங்கள் கடமைகளை யுணர்ந்து, சமூக பாத்யதைகளைக் கோரி, புதிய ஊக்கமும் உற்சாகமும் பெற்று, உழைப்பார்களாக.

பெண்மணிகளின் பாத்தியதைகள்

இப்பூ உலகின்கண் இஸ்லாம் தோன்றுவதற்குமுன் நமது பெண்மணிகள் மிக மிகசங்கட நெருக்கத்திற் குட்படுத்தப்பட்டிருந்தனரென்பது சரித்திர ஆராய்ச்சியிற் தேர்ச்சியுற்றவர்களின் ஏகோபித்த அபிப்பிராயமாகும். இதுகாலே பெண்மணிகளின் அநேகபாத்தியதைகள் மறுக்கப்படும் கட்டளைகள் முஸ்லிம் அல்லாத இதர மதவாதிகளின் மார்க்கங்களிலேற்பட்டிருப்பது மேற்கூறப்பட்ட விஷயத்தை நன்கு உறுதிப்படுத்துகின்றது. கிறிஸ்துவர்கள் இக்கட்டளைகளில் சற்று சீர்திருத்தம் செய்து அவைகளைக் கையாண்டுவருகின்றனர். ஹிந்துக்கள் வெகு பிரயாசையோடு இச் சீர்திருத்திலீடுபட முற்படுகின்றனர். இம் முயற்சிகள் அவர்களது உலக சம்மந்தமான விவகாரங்களில் பிரயோகிக்கப்பட்ட போதிலும் மார்க்க சம்மந்தமாக கவனிக்கின், அவைகள்முற்றமுற்ற விரோதமாயிருப்பது புலனுகும். இந்நிலைமையில் சில இதர மதவாதிகள், இஸ்லாம் பெண்களை கேவலஸ்திதியில் வைத்திருக்கிறதெனக் கூறிக்கொண்டிருப்பது ஆச்சரியத்தை விளைவிப்பதாக இருக்கிறது. பறந்த நோக்குடைய பண்டிட் கிருஷ்ண பிரசாத்கூட கேவலமான இப்பிரசாரத்தின் வலையில் சிக்கி, சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் "இந்தியாவில் பெண்மணிகளை சிறையிடும் பழக்கத்தை முஸ்லிம்கள் தங்களுடன் கொணர்ந்திருக்கிருர்கள்'' யென கூறியிருக்கிருர்.

ஆனுல் உண்மையை அறிய விரும்பும் பொது நோக்குடையோருக்கு உலகில் இஸ்லாம் தோன்றுவதற்குமுன் பற்பல தேசங்களிலும் பெண்கள் நிலைமை எவ்வாறிருந்ததென்பதை விபரித்துக்கூறிவிட்டு கடைசியாக இஸ்லாம் பெண்களின் ஸ்திதியை உயர்த்துவதற்காக எந்தெந்த வகையில் முயற்சி செய்தது; இதுகாலே பெண்களின் சுயேச்சையை விரும்புவோர் தங்கள் பிரசாரத்திற்கு எதன்மீது அஸ்திவாரமிட்டிருக்கின்றனர் என்பவைகளை சுருக்கமாக கூறிவிட விரும்புகிறேன்.

உலக சரித்திரங்களை நாம் நன்கு ஆராய்ந்து பார்ப்போமாகில், மிஸ்ர் தேசத்தைத் தவிரயுள்ள சகல விடங்களிலும் பெண்களின் அந்தஸ்த்து கேவல ஸ்திதியிலிருந்ததென்பதும், ஆண்கள் பெண்களின் மீது அதிகாரஞ் செலுத்பவர்களா யிருந்தார்களென்பதும், அவர்கள் சகல பாத்தியதைகளைவிட்டும் பின் தள்ளப்பட்டிருந்தார்களென்பதும், மிஸ்ரிலும் பெண்களுக்களிக்கப்பட்டிருந்த சமத்துவ அந்தஸ்து நெடு நாளிராது யூனனியர் அத்தேசத்தைக் கைப்பற்றியவுடன் தங்கள் தேசத்தின் பழக்க வழக்கங்களை அங்கு கொணர்ந்து புகுத்தி விட்டனதன் பயனுய் பெண்களின் சகல பாத்தியதைகளும் பறிக்கப்பட்டுப்போய், ஆண்மக்கள் அவர்களின் மீது அதிகாரஞ் செலுத்துபவர்களாய் விட்டார்களென்பதும் நன்கு புலனுகும்.

பாபுலி, அஷோரி வர்க்கத்தின் பெண்கள் தங்கள் விவாக விஷயங்களில் மாப்பிள்ளைகளைத் தெரிந்தெடுப்பதில் சற்றும் பங்கெடுத்துக் கொள்ள முடியாது; இவ்விஷயமாக தாய் தந்தையர் மார்க்கத் தலைவர்களின் அபிப்பிராயப்படியே பெண்கள் நடந்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஆண்டிலும் எதாகிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஓர் இடத்தில் திருவிழா நடக்கும் போது விவாகத்திற்கு தகுதியான பெண்க

ளெல்லாம் ஒன்று சேர்வர். அவர்களின் மார்க்கத்தலைவர் ஒவ்வொரு பெண்களையும் ஏலம் கூறி அதிக விலை கொடுக்கும் ஆண்களிடம் அப்பெண்ணை ஒப்புவித்து விடுவார். இவ்விருவரில் எவரும் மார்க்கத்தலைவரின் கட்டளைக்கு எவ்வகையிலும் வழிப்படாதிருக்க முடியாது. அத்தலைவர்கள், இவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்ட இருவருக்கிடையே சம்மந்தத்தை ஏற்படுத்தி வைத்துவிடுவர். ஈரானியர் இத்தேசத்தைக் கைப்பற்றிய பிறகும் இவ்வழக்கத்தை கடுமையான முறையில் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து பெண்களை அடிமைத்தனம் என்னும் சங்கிலியால் நன்கு பிணைத்துவிட்டனர். அக்காலத்தில் பெண்கள் அசை பொருள்கள்போல் பாவிக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுவதிலும் அனந்தர பாத்தியதை அடைவதிலும் தந்தை, மகன் இவர்கள் பங்கெடுத்துக் கொள்பவர்களாயிருந்தனர். அவர்கள் வீட்டில் அடைபட்டுக்கிடந்ததுடன் கல்வி சம்மந்தமாயும் அலக்ஷியஞ் செய்யப்பட்டிருந்தனர்.

ஜப்பானில் ஆரம்பத்தில் பெண்களுக் கேற்பட்டிருந்த சிற்சில பாத்தியதையையும் புத்தமதம் அபகரித்துவிட்டது. பெண்கள் சிறு பிராயமாயிருக்கும் வரை தந்தையர்களுக்கு வழிப்பட்டு நடந்து வரவேண்டு மென்பதும், விவாகமானபின் புருஷனுக்கும், கை பெண்கள் மக்களுக்கும் வழிப்பட்டு நடக்க வேண்டுமென்பதும் அம்மதத்தின் மார்க்கக் கொள்கையாகும். பெண்கள் அசுத்தமாகக் கருதப்பட்டு வந்ததால் அவர்களை விட்டு ஆண்கள் பேணுதலாக இருக்கவேண்டு மென்பதும் அம்மார்க்கக் கட்டளையாகும்.

பெண்கள் ஆண்மக்களின் பணிவிடை செய்வதற்காகவும், அவர்களின் இச்சைகளைத் தீர்த்துக் கொள்வதற்காகவுமே படைக்கப்பட்டிருக்கின்றனரென்றும், ஆண்கள் எப்பெண்களையும் தங்கள் இஷ்டம்போல் எவ்வாறும் நடத்திக் கொள்ளலாமென்றும், பெண்சாதியாயினும் மகளாயினும் வேலைக்காரியாகியாயினும் எல்லோருடனும் ஒரே விதமாய் நடந்து கொள்ளலாமென்றும் சீனர் கருதியிருந்தனர். பெண்கள் ஆண்மக்களின் கட்டளைக்கு மாறு செய்யாது, அவர்களது சொல்லுக்கு யாதொருதடையுஞ் செய்யாது அடிபணிந்து நடக்கவேண்டு மென்பதும், தந்தை அல்லது புருஷனுடைய சொத்தில் மகளோ, பெண்சாதியோ எவ்வித அனந்தர பாத்தியதையும் அடைய முடியாதென்பதும், அன்னுடையவாழ்க்கையில் ஆண்களைத் திருப்தி செய்து வைக்கும் காரியாதிகளிலீடுபட்டிருக்க வேண்டியது பெண்கள் கடமை யென்பதும் அன்னேரின் மார்க்கக் கட்டளையாகும்.

யூதர்களில் பெண்கள் இதர அசை பொருள்கள் போன்று மதிக்கப்பட்டு, பாகத்தில் பங்கிடப்பட்டுக் கொண்டிருந்தனர். அன்னேர் வாழ்க்கை முறையில் மிக மிக தாழ்ந்த நிலைமையிலேயே இருந்துவந்தனர். கிறிஸ்துவர்களில் மக்களின் ஆரம்பப்பாவத்திற்கு பெண்கள்தான் பொறுப்பாளிகளென கருதப்பட்டு வந்தது. மார்க்க அனுஷ்டானங்களிலும் சபைகளிலும் பெண்களுக்கு எவ்வித அந்தஸ்துமில்லாதிருந்தது. பெண்கள் கோவில்களில் சாதாரண வார்த்தை பேசுவதுங் கூட பெரும் பாவமென கருதப்பட்டு வந்ததென, பிரக்யாதிபெற்ற கிறிஸ்துவ பாதிரியாரொருவர் அறிவிக்கிருர். பெண்கள் ஏதாகிலும் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டுமாயின் தந்தை மூலமாகவோ, புருஷன் மூலமாகவோதான் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்களில், மார்க்கத்தில் மிக மிக பற்றுக்கொண்டிருப்பவர்களிடம் பெண்களுக்கு எவ்வித வாரிசு பாத்தியதையுங் கிடையாது. இக்காலை சீர்திருத்த கிறுஸ்துவர்களிடம் அன்னேர் பழைய அனுஷ்டானங்களை யெல்லாம் சீர்திருத்த முயன்றிருக்கும் நிலைமையிலும் பெண்களுக்கு விவாக மேற்பட்டவுடன் அவர்களின் சகல பாத்தியதைகளும் அபகரிக்கப்பட்டுப் போய் அவர்களுடைய பெயர்களும் புருஷர்களுடைய பெயரளவில் இழுக்கப்பட்டுப் போகிறது. துரதிர்ஷ்ட வசமாய் இதுகாலை நம் முஸ்லிம் நேயர்களிற் சிலரும் இவ்வனாசரீக முறையைப் பின்பற்றி, தங்கள் பெண்சாதியை இன்னரின் மிஸர்ஸ் என்றழைக்கின்றனர். இது பெண்களை அலக்ஷியமாக மதிக்கும் நோக்கமும், இஸ்லாமிய சட்டத்திற்கு நேர்விரோதமான செய்கையுமல்லவா? இதற்காகத்தான் முழுஉலகின் சீர்திருத்த வழிகாட்டியாய் வந்த நம் பெருமானர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களின் நம்பிராட்டிமார்கள் தங்கள் திருப்பெயர்களைக்கொண்டே அழைக்கப்பட்டிருக்கிறர்கள். அவர்களின் திருநாமங்கள் மேலான சங்கையையுடைய புருடரின் பெயரில் மறைந்துபோகவில்லை,

பூர்வீக பர்பரி வகுப்பினர், யூனனியர்களி டையே பெண்ணின் வலிகாரரின் இஷ்டத் திற்கு மாற்றமாய் அவள் விவாகம் புரிந்து கொள்ளவோ, அல்லது அவன் தேர்ந்தெடுத்த புருடனை இவள் விவாகம் புரிந்துகொள்ளா திருக்கவோ இவளுக்கு எவ்வித பாத்தியதை யுங் கிடையாது. இவ்வாறே ரூமியர்களிடமும் பெண்கள் அடிமையர்களாக மதிக்கப்பட்டு வந்தனர். விவாக சம்பந்தமாயும், விவாக விலக்குச் சம்பந்தமாகவும் அவர்களுக்கு எவ்வித அதிகாரமுமில்லாதிருந்தது. இதென்ன அரேபியாவில் பெண்மக்கள் பிறப்பது துற்குறியாக மதிக்கப்பட்டு வந்ததுடன் அப்பாபமற்ற சிசுக்களை உயிருடன் புதைக்கும் பழக்கமு மேற்பட்டிருந்தது. இஸ்லாம் மதம் தோன்றி அநீதியான இப்பழக்கங்களை யெல்லாம் ஒரே யடியாய் விலக்கி சமத்துவ முறையைக் கைக்கொள்ள வேண்டுமென கட்டளையும் பிறப்பித்தது.

இவைகள் யாவற்றையும்விட பெண்களுக்கு மிக மிகக் கஷ்டத்தைக் கொடுத்து வந்தது இந்தியாவிலுள்ள ஆரியமதமேயாகும். அதிலும் குறிப்பாய் பிராம்மண மதம்தான் பெண்களை கேவலமாகக் கருதி வந்தது. அவர்களிலுள்ள ஒரு பெண்ணை ஒரே காலத்தில் 12 புருடர்கள் வரை விவாகம் புரிந்து கொள்ளலாமென்னும் அனுமதி கொடுத்து, அப்பெண்ணின் வாழ்க்கையை வீழ்த்தியிருந்தது. அம் மார்க்கக் கொள்கைகளை ஓர் ஹிந்து மாது விவரித்துக் கூறிவருங்கால், பெண்களை ஆண்மக்கள் தாழ்மையாகக் கருதவேண்டு மென்பதும், பெண்கள் மார்க்கக் கட்டளைகளைவிட்டு ஒதுங்கி தன்னுணர்வற்ற அடிமைகள்போல் ஒதுங்கியிருக்க வேண்டுமென்பதும் பிராமண மத அனுஷ்டான முறைகளி லுள்ளதாகுமென தெரிவித்திருக்கின்ருள்.

மநுஜி என்பார் இந்துமார்க்கத்தின் சட்ட திட்டங்களை வகுக்குங்கால் வாழ்க்கை முறை சம்மந்தமாய் பழைய இந்துமார்க்கத்தை ஆதாரமாகக்கொண்டே நிறுவும்படி ஏற்பட்டது. மிஸர்ஸ் எச். தாஸ் என்னும் மாது இச்சட்டங்களை விவரிக்குங்கால், இந்து சாஸ்திரத்தின் பயனுய் இந்திய பெண்மணிகள் சகல கௌரவங்களையும் இழந்து உட்காரவேண்டியதாக இருப்பதுடன் பின்னுல் பல தலைமுறைகள்வரை பெண்கள் கடுமையான கஷ்டத்தை அனுபவிக்கும் படியும் நேரிடும் எனக்கூறி யிருக்கின்றனள். அச்சாஸ்திரத்தில் பெண்மக்கள் வயதை அடைவதற்குமுன் அவர்களுக்கு விவாகஞ் செய்து விடவேண்டுமென கட்டளையு மிடப்பட்டிருப்பதுடன் பெண்மக்கள் தந்தையின் அதிகாரத்திலுள்ளவர்களாதலின் தந்தையால் தேர்ந்தெடுக்கப்பட்ட புருடனை மறுப்பதர்க்கு பெண்ணுக்கு எவ்வித அதிகாரமுங் கிடையாது எனவும் கூறப்பட்டிருக்கிறது. விதவைகள் தங்கள் புருடர்களுடன் சுடுகாட்டில் எறிக்கப்பட்டுப் போய் விடவேண்டும்; இது இயலாது போயின் அவர்கள் தங்கள்வாணுள் முழுதும் துக்கசாகரத்தில் ஆழ்ந்து உலகின் ஆசாபாச இச்சைகளை விட்டு விலகி இருக்கவேண்டியதுதான்.

ராமாயணம், மகாபாரதம் இவைகளின் சட்ட திட்டங்கள் அனுஷ்டானத்தி லிருந்து வந்த காலத்தின் நிலைமை எவ்வாறிருந்ததென்பது சீதையின் தந்தை தன் குமாரத்தியை ராமச்சந்திரர்கூட அனுப்பும்போது "என் குமாரத்தி மிகவும் அழகு சௌந்திரிய முடையவளாகும்; தன் பர்த்தாவின் வாழ்க்கை, மரணம் இவைகளில் கூடவே இருப்பாள்" என்று கூறியதிலிருந்து நன்கு தெரியவரும். அக்காலத்தில் பெண்கள் வீட்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிகிறது. வேதங்களையும் சாஸ்த்திரங்களையும் நன்கு தெரிந்த ராமச்சந்திரரே பெண்கள் யுத்த சமயங்கள் அல்லது பிரதான அபாயங்களேற்படும் காலம் இவைகளைத் தவிர எந்த வகையிலும் ஆண்கள் முன் வரக்கூடாதென தீர்ப்பளிப்பதா யிருந்தால் அக்காலத்தின் நிலைமை எந்த ஸ்திதியை அடைந்திருக்குமெனக் கூறவும்வேண்டுமோ. திரவ்பதை ஐந்து பாண்டவர்களின் பெண்சாதியாக விருந்தாள். இவளுடைய ஐந்து புருடர்களும் சூது விளையாட்டில் தோல்வியுற்றபோது, ஜெயித்தவன் திரவ்பதையை அவமானப்படுத்தக் கருதி வெளியில் கொண்டுவந்தபொழுது அவள் கை சேதமடைந்தவளாய் ஆஹ்வென சப்தமிட்டு, இதுகாலம்வரை சூரியன், காற்று முதலிய எதுவும் தொடாத என் திரேகம் இது பொழுது பொதுமக்களிடையே வெளியாகிறது; இது ஆரியமதத்தின் மிகமிக கேவலமான செய்கையாகும் என, அறிவித்தாள்.

இவ்வாறு உலகம் முழுதும் இருள் சூழ்ந்து பெண்களின் பாத்தியதைகள் பறிக்கப்பட்டுப் போயிருக்குங்கால இவ்வுலகில் இஸ்லாத்தின் ஒளி தோன்றி, பெண்களை கேவலமாகக் கருதுவதை அகற்றி, ஆண்களுக்குச் சமமாகச்செய்து விட்டது. மேலும் குர்ஆன் ஷரீபானது பெண்

களுக்கும் ஆண்களுக்குள்ளதுபோல் பற்பல பாத்தியதைகளு மேற்பட்டிருக்கிறதென்றும், தந்தையின் சொத்துக்களில் ஆண்மக்களுடன் பெண்மக்களுக்கும் அனந்தர பாத்தியதை இருக்கிறதென்றும், புருடனுடைய சொத்தில் பெண்சாதிக்கு பாகமுண்டென்றும் அறிவித்திருக்கிறது. இதுவன்றி பெண்சாதியின் சவரக்ஷணை முழுதும் புருடன் மீதே சுமத்தப்பட்டிருக்கிறது. விவாகஞ்செய்து கொள்வதிலும், விவாக விலக்கு செய்து கொள்வதிலும் ஆண்களைப்போல் பெண்களுக்கும் பாத்தியதைகளுண்டு. எந்த ஆண்பிள்ளையும் பெண் பிள்ளையின் இஷ்டத்திற்கு விரோதமாய் அவளை விவாகஞ் செய்து கொள்ள முடியாது. எனவே, இஸ்லாம்தான் ஆரம்பமாக மனித வர்க்கத்தில் பெண்கள் பாத்தியதை அடைவதை அளித்தது. இப்பாத்தியதை அடைவதை தந்தையோ புருடனோ எந்த வகையிலும் மறுக்க முடியாதென்பது திண்ணம். இவ்வாறே இஸ்லாம்தான் பெண்களின் வாழ்க்கை முறையில் மார்க்க அனுஷ்டானம், நற்கூலி பெறுதல், தண்டனை அடைவது முதலியவைகளில் பெண்களுக்கு சம அந்தஸ்த்தையும் அளித்தது. வெகு காலமாய் பெண்கள் கல்விகற்பது அலக்ஷியஞ் செய்யப்பட்டு வந்ததை இஸ்லாம் அகற்றி ஆண்களைப்போல் பெண்களும் கல்வி கற்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தியது. எனவே, இவ்வுலகின்கண் ஆரம்பமாக பெண்களுக்கு சுயேச்சை முன்னேற்றத்தின் தூதைக்கொண்டு வந்து அவர்களை பற்பல துறைகளிலும் முன்னேற்றமடையச் செய்தது இஸ்லாம் மார்க்கமேயாகும். இஸ்லாம் பெண்களுக்கு இவ்வாறுன தூதைக்கொண்டு வராதிருக்கின் பெண்கள் சமத்துவமுறையின் கோரிக்கையை வெளியிடுவது பாவமாகக் கருதப்பட்டிருக்கும். இதனால் உலகிலுள்ள மாதர்கள் யாவரும் இஸ்லாம் தங்கள் வகுப்பினருக்குச் செய்துள்ள நன்றியை ஞாபகத்துக்குக் கொண்டுவருவதுடன் அதற்கு நன்றியும் செலுத்த கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

இஸ்லாமிய உலகம்

பாலஸ்தீன்

பாலஸ்தீனில் அதிகார வர்க்கத்தினரால் ஏற்படுத்தப்பட்ட நெருக்கடியின் நிலைமை இன்னும் முடிவுக்கு வராமலே யிருக்கிறது. என்றாலும் சென்ற சில நாட்களாக நெருக்கடியின் சம்பவ நிகட்சியில் சற்று பிற்போக்கேற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சமீபத்தில் பாலஸ்தீன் அதிகாரவர்க்கம், கடுமையாக அனுஷ்டிக்கப்பட்டுவந்த சில இராணுவச் சட்டங்களை தற்போது ஒழித்துவிட்டிருப்பதாக அறிக்கை வெளியிட்டிருக்கிறது. ஆனால், கோஹஸ்தான் பக்கல் பட்டாளங்களும் போலீஸாரும் சுற்றி வருவதால் சிலகால் நெருக்கடி ஏற்படுவதாக சமாசாரம் எட்டிக்கொண்டிருக்கிறது. அதிகார வர்க்கத்தினரின் நோக்கத்தில் இவ்வாறு மாறுதலேற்பட்டதற்கு முக்கிய காரணம் அங்கு புதிய விசாரணை கமிஷனை அனுப்ப முற்பட்டிருப்பதேயாகும். பாலஸ்தீனில் அராபியர்களின் கிளர்ச்சியை அடக்குவதற்கு பிரிட்டிஷ் அன்னிய நாட்டு மந்திரியார், இன்னும் பாலஸ்தீன் பிரிவினை அங்கீகாரமாகவில்லை; புதிய கமிஷன் அப்பிரிவினை பயனளிக்காவென்பதைத் தெரிந்து கொள்ளும் எனக் கூறியதாகத் தெரிகிறது. ஆனால் பாலஸ்தீன் மக்களுக்கு தலைமை வகித்திருப்போர் இக்கமிஷனை பஹிஷ்கரிக்க வேண்டுமென அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

சமீபத்தில் மிஸ்ரிலுள்ள 'அஷ்ஷுப்பாப்' பத்திரிகை பாலஸ்தீன் பத்திரிகையை சுட்டிக்காட்டி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதில் பாலஸ்தீன் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒரு புதிய மார்க்கம் ஆலோசனையிலிருந்து வருவதாயும், மிஸ்ரில் இராக் கவுன் சிலராக நியமிக்கப்பட்டிருந்த டாக்டர் அஹ்மத் காதரீ, ஹஸ்ரத் அமீனுல் ஹுஸைனி பாலஸ்தீன் முப்திய அஃலம் அவர்களைச் சந்தித்து பாலஸ்தீன் பிரச்சினையை தீர்ப்பதற்காக நூரீபாஷாசயீது, டாக்டர் வாஜ்மின் முதலிய யூதத்தலைவர்களுக்

கிடையே லண்டனில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் முடிவைத் தெரிவித்தார். இப் புதிய திட்டத்தின் அஸ்த்திவாரம் அடியில் குறிப்பிடப்பட்டிருப்பதின் மீதிருக்குமெனத் தெரிகிறது.

1. பாலஸ்தீனில் 100-க்கு, 35 வீதம் யூதர்கள் வசிக்கவேண்டும். இதன் பயனுய் பாலஸ்தீனில், 100-க்கு 35-க்கு மேல் யூதர் வசிப்பதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

2. அரபிகளில் விவசாயிகளா யுள்ளோர் காட்டு பூமிகளிலும் மலைப்பிரதேச ஜில்லாக்களிலும் குறிப்பிட்ட அளவு பூமிக்கு அதிபதிகளாய் விடுவதற்கான ஒரு சட்டம் இயற்றப்படும்.

3. இராக்,ஷாம், லப்னுன் அரசாங்கங்கள் தங்கள் தேசங்களின் சிலபாகங்களில் யூதர்கள் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்குமாறு அவைகளைக் கேட்டுக்கொள்ளவேண்டும்.

4. பாலஸ்தீனின் நிருவாகத்தை தக்கமுறையில் நடத்துவதற்காக ஓர் சபை ஏற்படுத்தப்படவேண்டும். அக்கமிட்டி அங்குள்ள மக்களின் விகிதாசாரப்படி அங்கத்தினர்களைக் கொண்டதாக விருக்கும்.

5. பாலஸ்தீனில் தற்போதிருக்கும் சுப்ரியம் கவுன்சில் (உயர்தர சபை) அப்படியே இருக்கும். ஆனுல் அச்சபை ராஜீய விஷயங்களில் தலையிடமாட்டாது.

6. ஹஸ்ரத் அமீனுல் ஹுஸைனி அவர்கள் சுப்ரியம் கவுன்சிலுக்கு தலைமைவகித்து தங்கள் பொறுப்பை நிறைவேற்றி வருவதுடன் ராஜீய விஷயங்களில் தலையிடாதிருக்கவேண்டும். அல்லது புதிதாக ஏற்படப்போகும் சபையில் அங்கம் வகிப்பதற்கு முன்வரலாம்.

இத்திட்டத்தை யூதத்தலைவர்கள் அங்கீகரித்துக்கொண்டதுடன் இதன் நகலொன்றை அங்குள்ள ஹை கமிஷனருக்கும் அனுப்பிவிட்டதாயும் அல்ஹாஜ் முப்தி அமீனுல் ஹுஸைனி இந்த ஸ்கீமின் நிபந்தனைகளை ஒப்புக்கொள்வதற்குத் தயாராகவிருப்பதாயும், இந்த திட்டம் தயாரிப்புக்கு காரணமாயிருந்த ஸர் ஆர்தர் வாஜ்மின், புதிய ஹை கமிஷனர் தன் வேலையை ஆரம்பிக்குமுன் இந்த திட்டத்தை தக்க முறையில் வெளிப்படுத்திக் காண்பித்துவிட முயற்சிப்பதாயும் தெரிகிறது. இந்தத் திட்டத்தை விபரித்தறிவிக்கும் நிலைமையில் பாலஸ்தீன் அரபியர்களின் சில கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதென்றும், முப்தி அவர்கள் அத்திட்டத்தின் நிபந்தனைகள் யாவற்றையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்களென்றும் தெரிகிறது. என்றுலும் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள பிரிவினையை ரத்து செய்துவிட்டு இத்திட்டத்தை தக்க முறையில் விபரித்து அவைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது உசிதமென யூகிக்கப்படுகிறது.

மிஸ்ர்

நுஹாஸ் பாஷாவின் மந்திரி சபை முற்றுபெற்று மஹ்மூத் பாஷாவின் மந்திரி சபை நியமானது மிஸ்ரில் பயன் அளிக்காதெனத் தெரிகிறது. ஒரு பக்கல் மிஸ்ர் வாசிகளிடையே அமைதியின்மை ஏற்பட்டிருக்கிறது. மற்றொரு பக்கல் பாருக் அரசரும், புதிய மந்திரி சபை அங்கத்தினரும் சங்கட ஸ்திதியிலிருக்கின்றனர். பாருக் மன்னர் சில காலத்திற்காக பார்லிமெண்ட் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்திருக்கின்ருர். இதற்குக் காரணம் புதிய பிரதம மந்திரி மஹ்மூத் பாஷாவுக்கு பார்லிமெண்ட் மெம்பர்களில் அநேகருடன் ஒற்றுமையில்லாததேயாகும். பார்லிமெண்டின் ஒத்திவைப்பானது, புதிய மந்திரி சபையினரின் பட்ஜட், சபையில் அனுமதிக்கப்படாது அமூல் நடத்துவதற்கு தடையாக இருக்கிறது. இதன் பயனுய் கவர்ன்மெண்டை நடத்துவதற்கே பெரும் சங்கடமாகவிருக்கிறது.

மிஸ்ரில் 'வப்த்' கூட்டத்தாரின் சேவைகள் மிக மிக போற்றப்படுபவைகளாயிருக்கின்றன. மிஸ்ர் வாசிகளில் மிகுதப்பேர் அந்தக் கக்ஷியிலேயே இருக்கின்றனர். பார்லிமெண்டிலும் இக்கூட்டத்தினரே மிகுதமாய் அங்கம் வகித்திருக்கின்றனர். இக்கூட்டத்தைச் சேர்ந்த பிரதம மந்திரியும் ஸஅத் ஜகுலுல் பாஷா அவர்களின் ஸ்தானத்தை வகித்து வந்தவருமான நுஹாஸ் பாஷாவின் மந்திரி சபை கலைவுற்றது மிஸ்ர் வாசிகளில் மிகுதம் பேருக்கு பெரும் கவலையாக இருக்கிறது. ஆனுல் மிஸ்ர் வாசிகளுக்கு ஷாஹ் பாருக் மன்னரிடம் பிரத்தியேக அன்பிருந்துவருவதால் அன்னோர் தக்க முறையில் மன்னரிடம் விசுவாசமாகவிருந்து வருகின்றனர். என்றுலும் நுஹாஸ் பாஷா அவர்களை மந்திரி பதவியினின்று நீக்கிவிடுவதை ஒருக்காலும் அங்கீகரிக்கமாட்டார்கள். எனவே, இது சமயம் மிஸ்ர், அரசரின் தாக்ஷண்யம், பொதுஜன நோக்கம் இவ்விரண்டிற்குமிடையே மாட்டிக்கொண்டிருக்கிறது. நுஹாஸ் பாஷாவுக்கு

உதவி புரிவது ராஜ வழிப்பாட்டிற்கு விரோதமாகவிருக்கிறது. பாரூக் மன்னரின் செயல்களை ஆதரித்துக்கொண்டு நுஹாஸ் பாஷாவை மறந்துவிடுவது பொதுஜன விருப்பத்திற்கு மாற்றமாய்க் காணப்படுகிறது.

டாக்டர் அஹ்மத்முஹர், நக்ராஷ் பாஷா இவ்விருவரும் நுஹாஷ் பாஷாவிற்கு விரோதமாய் தனியாக 'வப்த்' கக்ஷியினரிடையே ஒரு கூட்டத்தைச் சேர்த்துக்கொள்ள முயற்சித்து வருகின்றனர். இது 'வப்த்' கூட்டத்தினரிடையே பிரிவினையை உண்டுபண்ணச் செய்யும் சூக்ஷியாகும். இவ்விருவருக்கும் நுஹாஷ் பாஷாவினிடம் விரோதமிருப்பதுடன் மஹ்மூத் பாஷாவின் மந்திரி சபையையும் அங்கிகரிப்பதில்லை. இதுபொழுது மிஸ்ரில் பார்லிமெண்ட் கூட்டம் நடைபெறுவது வழிபார்க்கப்படுகிறது. பார்லிமெண்ட் அங்கத்தினர்களிலனேகர் தற்காலேயுள்ள மந்திரி சபையுடன் முரண்பட்டிருப்பதால் இம்மந்திரி சபையின் கதி யாதாகுமோவென நினைக்கவேண்டியதாகவிருக்கிறது. பாரூக் மன்னர் மஹ்மூத் பாஷாவிற்குப் பகரமாய் டாக்டர் அஹ்மத் முஹரை மந்திரி சபை அமைக்குமாறு அழைக்கலாம். ஆனுல் இம்மந்திரி சபை அமைப்பில் பார்லிமெண்ட் சபை அங்கத்தினரில் மெஜாரிட்டியோர் அரசரின் யோசனையை விரும்பாதவர்களாயிருப்பார்களாயின் ஒருக்கால் அரசர் தனது விசேஷ அதிகாரத்தைப் பிரயோகித்து பார்லிமெண்ட் சபையை கலைத்துவிட்டு புதிய தேர்தலுக்கு ஏற்பாடு செய்யவும் கூடும்.

சில நாளைக்கு முன் பாருக் மன்னர், மிஸர் ஹைகோர்ட் ஜட்ஜியின் குமாரியான மிஸ் பரீதா துல்பகார் என்னும் மாதை விவாகம் புரிந்துகொண்டவுடனே மிஸ்ரிலுள்ள உமராக்கள் பாருக் மன்னரை முஸ்லிம்களின் கலீபாவாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்னும் பிரேரணையைக் கிளப்பினர். (இதற்கு உலக முஸ்லிம்களின் எதிர்ப்பு ஏற்பட்டது யாவருக்கும் தெரிந்த விஷயமே.)

துருக்கி

இஸ்கந்தரோனு விஷயமாய் துருக்கி பிரான்ஸ் இவ்விரண்டு தேசங்களுக்கு மிடையே நீண்ட நாளாய் பிணக்கு இருந்து வருகிறது. ஆரம்பத்தில் அப்பகுதி துருக்கி அரசாக்ஷியின் ஒரு பாகமாக விருந்து பிறகு பிரான்ஸ் காரரின் ஆதிக்கத்திற்கு வந்துவிட்டது. இதுபொழுது துருக்கி வல்லமை பொருந்தியதாய் விட்டபின் இஸ்கந்தரோனுவை தன் ஆளுகையின் கீழ் கொண்டுவர முயற்சிக்கின்றது. அதில் அராபியரும் துருக்கியரும் வதிகின்றனர். ஒருபக்கல் துருக்கியர் ஆங்கு தங்கள் ஆக்ஷியை நிலை நிறுத்த முயற்சிக்கின்றுர்களென்றுல் மற்றொரு பக்கல் அங்குள்ள அரேபியர் தனி அரசாக்ஷி ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். பிரான்ஸ் வெகு நாளைக்கு முன்னிருந்து அங்கு அதிகாரம் செலுத்தி வருவதால் அதற்கு ஷாம் தேசத்திற்குட்பட்ட சுயாக்ஷி அளித்து பிரான்ஸிடம் ஒப்புவிப்பதென சர்வதேச சங்கம் முடிவுசெய்திருந்தது. இஸ்கந்தரோனுவில் வதியும் துருக்கியர் இதனை அங்கீகரியாது துருக்கியின்கீழ் சுயேச்சைபெற்ற தேசமாக இதனை ஆக்கிவிட வேணுமெனவிரும்புகின்றனர். பிரான்ஸியரோ தங்கள் கோரிக்கைகளில் வெற்றி பெறுவதற்காக துருக்கியரைப்பற்றி அராபியர்களின் எண்ணங்களில் வெறுப்பை உண்டாக்கி வைப்பதற்காக பகீரத முயற்சி செய்துவருகின்றனர்.

இஸ்கந்தரோனுவில் துருக்கியர் மிகுதமாய் வசிப்பதால் அங்குள்ள சட்ட நிரூபண சபை அமைப்புக்குள்ள சட்ட திட்டங்கள் நிர்ணயிக்கும் விஷயத்தில் துருக்கியரையும் கலந்துகொள்ளவேண்டியது நியாயமாக இருக்க, துருக்கி அன்னியநாட்டு மந்திரி சமீபத்தில் வெளியிட்ட ஓர் அறிக்கையில், அச்சட்ட திட்டங்களை நிர்ணயிப்பதில் ஷாம், பிரான்ஸ் இவ்விரண்டு தேசங்களிடமும் ஆலோசனை கேழ்க்கப்பட்டதே தவிர துருக்கியரிடம் ஒன்றும் கேழ்க்கப்படவில்லையென குறிப்பிட்டிருக்கிறுர். உண்மையில் இஸ்கந்தரோனுவில் துருக்கியர்களின் பாத்தியதைகளைக் காப்பதுடன் அராபியர்களுக்கு உதவிபுரிய வேண்டுமென்பதுதான் துருக்கியரின் நோக்கமாக விருந்து வருகிறது. இந்நோக்கத்தை பிரான்ஸ் அங்கீகரித்துக்கொள்ள விரும்பவில்லை.

ஏற்கனவே இஸ்மத் பாஷாவுடன் ராஜினமாச்செய்த அன்னியநாட்டு மந்திரியான டாக்டர் ருஷ்தி அராரை இதுகாலை மறுபடியும் அன்னியநாட்டு மந்திரியாக துருக்கி தலைவர் கமால்பாஷா ஏற்பாடு செய்துள்ளார். இவர் இஸ்கந்தரோனுவின் சிக்கலான நிலைமையை தீர்த்து வைக்க முற்பட்டிருக்கிறுர். அன்னிய நாட்டு மந்திரியின் நிருவாகத்தை வகித்து அதனை தக்க முறையில் நடத்துவதற்கு இதுகாலை துருக்கி

யில் டாக்டர் ருஷ்தி அவர்களைவிட அனுபவ சாலியாருமில்லை.

துருக்கித்தலைவர் முஸ்தபா கமால்பாஷா சிக்கனத்தை அனுஷ்டிப்பது, வெள்ளாமை செய்வது இவைகளில் பிரத்தியேக கவனம் செலுத்துவதிலீடுபட்டிருக்கிறார். தலைவர் சமீபத்தில் பார்லிமெண்டில் நிகழ்த்திய சொற்பெருக்கில் பொருளாதார விஷயத்தில் முக்கிய மாறுதல் செய்யப்போவதாய்க் குறிப்பிட்டிருப்பதால் இதன்மூலம் ஏழை விவசாயிகளுக்கு அபரிமித பிரயோசனமேற்படுமென்னும் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

முராகஷ்

முராகஷில் வசிப்பவர்கள்மீது பிரான்ஸ் அதிகார வர்க்கத்தினர் அநீதிபுரிவது துயர்படியாய் நடைபெற்றுக்கொண்டே வருகிறது. மகாநாடு கூட்டுவது, விடுதலை சம்மந்தமாய் சொற்பொழிவு நிகழ்த்துவது, எழுதுவது சம்மந்தமாய் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அங்கு வதியும் ஏழை மக்களின் நிலைமையும் மிக மிக க்ஷீண திசையை அடைந்திருக்கிறது. சமீபத்தில் மக்ரிப அக்ஸாவிலுள்ள ஓர் தேசீய அஞ்சுமன் பிரான்ஸ் அதிகார வர்க்கத்தினருக்கு ஓர் விண்ணப்பம் அனுப்பியிருந்தது. அதில் எழுத்து சுதந்திரம், சொற்பொழிவாற்றும் சுதந்திரங்களை அளிக்குமாறு வேண்டிக் கொண்டிருந்ததுடன் பொருளாதார சங்கட நிலைமையை நிவர்த்தி செய்வதற்கான சில கோரிக்கைகளும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதிகாரவர்க்கம் அவைகளின் பக்கல் சற்றும் கண்ணெடுத்து பார்க்கவே கிடையாது. முராகஷ், ருபாத், தார்பைலா, மக்னாஸ் இவ்விடங்களிலுள்ள வியாபாரிகளில், சென்ற வேலை நிறுத்த காலத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வம்பறியாக அவர்களிடமிருந்து அபராதங்கள் வசூலிக்கப்படுவதாயும், பள்ளிவாசல்கள் கவர்ன்மெண்டாரின் மேற்பார்வையிலிருந்து வருவதால் எவ்வித தேசீய சம்மந்தமான பிரசங்கங்களுக்கும் அங்கு இடமளிக்கப்படுவது கிடையாதென்றும், தேசவிடுதலை, சுயேச்சைப் போராட்டங்களிலீடுபட்டதின் பயனாக சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்கள்மீது கடூரங்கள் அனுஷ்டிக்கப்பட்டு வருவதாகவும், இவ்வித சங்கட நிலைமையிலும் முராகஷில் வதியும் அராபியர் தேசவிடுதலைக்கான பஹீரதப் பிரயத்தனஞ்செய்தே வருகின்றனர் எனவும், அவர்களது இச்சுயேச்சை உணர்ச்சியைத் தடுக்க எவராலும் முடியாத நிலையிலிருந்து வருகிறதெனவும் தெரிகிறது.

உண்மை மத உரைக்கல்

(பெரியக்கிராம் கா. அ. அப்துல் ஹலீம் சாஹிப் வரைவது)

சோதரீர்! இற்றைநாளில் இப்பூவுலகத்தில் மட்டற்ற மதங்களிருந்து வருகின்றன. ஒவ்வொரு மதத்தவரும் தத்தம் மதமே சத்தியமென்றும், மறுமதங்கள் அசத்தியமென்றும் வரைந்தும் பிரசங்கித்தும் வருவது எவருக்கும் மறைந்ததன்று. மானிட ஜன்மமெடுத்த எவரும் தமக்குப் பிரியமுள்ள விஷயத்தை போற்றிப் புகழ்வதும், அது அவர்களிடத்து நேர்மையாய் தோன்றுவதும் ஆச்சரியமன்று. எவர் எவ்வாறு கூறினும் உண்மையில் உலகத்தவருக்கு உன்னத பயனளிக்கக் கூடியதெனவும் மானிட சித்தாந்தத்திற்கு ஒற்றதானவுமான ஓரே மதம் இருக்கமுடியும். அதுவே, வேண்டற்படுவதாகும். அகில உலகிற்கு பொதுவாயும் ஜனசமூகத்துக்கிடையே ஒற்றுமையை நிலைநாட்டுவதை தமது லக்ஷியமாகக்கொண்ட மதம் இஸ்லாமாகவே இருக்கமுடியுமென்று கூறுமலிருக்க எம்மால் கூடவில்லை. ஆனால் விஷயத்தை விளக்குமுன் மதாம்ஸங்களுக்குரிய நான்கு நிபந்தனைகளை ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன். அந்நிபந்தனைகளை உரைகல்லாக வைத்துக் கொண்டு உண்மையை எளிதில் தெரிந்துகொள்ளலாம். முதலாவது நிபந்தனை: அம்மதத்திற்குரிய கடவுள் நிகரற்றவனாய் இருத்தல்வேண்

டும். இரண்டாவது நிபந்தனை, அம்மதத்தின் தீர்க்கதரிசி இதரமத தீர்க்கதரிசிகளைவிட சிறந்தவரா யிருத்தல்வேண்டும். மூன்ருவது நிபந்தனை;—அம்மதத்தின் சட்டதிட்டங்கள் பொதுவாய் இருத்தல்வேண்டும். நான்காவது நிபந்தனை—அம்மதத்தின் போதனை முறைகள் மற்ற மத போதனை முறைகளைப் பார்க்கினும் உயர்ந்ததாயிருத்தல் வேண்டும். இந்நிபந்தனைகள் அனைத்தும் எதில் காணப்படுகிறதோ, அதுவே சத்திய மதமாயிருக்க முடியுமென்பது முக்காலும் நிச்சயம்.

இத்தாரணியில் இவ்வமயம் எண்ணிறந்த மதங்களிருப்பினும் உருவெடுத்துலாவும் மதங்கள் நான்காகும். கிறிஸ்துவமதம், யூத மதம், ஹிந்து மதம், இஸ்லாம் மதம் என்பவைகளே. இம்மதங்களில் ஒன்று உண்மையாயிருப்பின் அது இஸ்லாமென்றே கூறலாம். ஏனெனில், நங் நிபந்தனைகள் இஸ்லாத்தை தவிர வேறெதிலுமில்லை.

கிறிஸ்துவ மதம்

மேலே குறிப்பிட்ட நான்கு நிபந்தனைகளும் கிறிஸ்துவ மதத்தி லிருக்கிறதா வென்ருராய்வோம். முதலாவது நிபந்தனை : "அம்மதத்திற்குரிய கடவுள் நிகரற்றவனுய் இருத்தல்வேண்டும்" என்பதாகும். கிறிஸ்துவர்கள் "பிதா, குமாரன், பரிசுத்த ஆவி," என இம்மூன்றுமே ஆண்டவமைக் குரியதென கூறுகிருர்கள். இக்கொள்கையை திருமறையாம் குர் ஆனும் சாக்ஷியம் கூறுகிறது. "மஸீஹ் (அலை) (இயேசுநாதர்) ஆண்டவனின் மகன் என்று கூறுகிருர்கள்" மற்ருேரிடத்தில் அவர்கள் விஷயமாய் குர்ஆன் எடுத்தோதுவதாவது : "ஆண்டவன் மூன்றில் மூன்ருவது என்றவர்கள் காபிரா (தெய்வ விரோதியா)கிவிட்டார்கள்" என்பதாகும். எப்பொழுது ஆண்டவனை மூன்ருக்கி விட்டார்களோ, அதுபொழுது ஏகத்துவம், நிகறற்றிருத்தல் எங்ஙனம்? நாம் குறிப்பிட்ட முதல் நிபந்தனை முற்றும் காணேம். உண்மையில் ஏகத்துவம் இல்லாமல் போய்விடுவதுடன் அவர்கள் நிர்ணயப்படி நிச்சயமாக நிகரிற்றிருத்தல் நிலைத்திருப்பதில்லை என்பது வெளிப்படை.

2-வது நிபந்தனை

இரண்டாவது நிபந்தனை—"அம்மதத்தின் தீர்க்கதரிசி இதரமத தீர்க்கதரிசிகளைவிட சிறந்தவராயிருத்தல் வேண்டும்" என்பதாகும். ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கிறிஸ்துவமத தீர்க்கதரிசியாவர்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்களைவிட பல படிகளில் சிறந்து காணப்படுகிருர்கள். ஏனெனில், ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள், ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மட்டுமே தீர்க்கதரிசியாய் அனுப்பப்பட்டார்கள். எம்பிரான் (ஸல்) அவர்கள் அகில உலகிற்கே வழிகாட்டியாய் அனுப்பப்பட்டார்கள். ஒரு சிறிய கூட்டத்திற்கு தலைவரா யிருப்பவரின் ஆற்றல், கீர்த்தியை விட மாபெரும் ஜனசமூகத்திற்கே வழிகாட்டியாயும் தலைவராயும் இருப்பவரின், ஆற்றலும் கீர்த்தியும் வேறு என்பது எவரும் மறுக்கமுடியாத விஷயமாகும். "(நாயகமே) 'மானிடர்காள், நானுங்களனைவருக்கும் நபியாய் அனுப்பப்பட்டேன்' என்று சொல்லிவிடுங்கள்" என திருமறையின் ஓரிடத்தில் நபிகள் பிரான் (ஸல்.) அவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. ஏ அராபியர்களே என்ருே, அல்லது ஏ குறைஷிகளேஎன்ருே, ஒரு குறிப்பிட்ட சாராரையோ, கிளையையோ குறிப்பிடாதது மிகமிக விசேஷமான விஷயமாகும். ஏ மானிடரே என்ற பொது வார்த்தையே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலக மக்களுக்கே நபியாக அனுப்பப்பட்டார்கள் என்பதற்கு போதிய சான்ருகும். இன்று இக்காசினியில் இஸ்லாம் இல்லாத ஊர் எதுவுமில்லை என்பதுவும் இரண்டாவது ஆதாரமாகும். முஹம்மது நபி (ஸல்) அவர்கள், அஞ்ஞானத்தில் மூழ்கிக் கிடந்த அநேக வம்பர்களை மெஞ்ஞானத்தின் பக்கல் திருப்பியதும் நம் பெருமானின் பெருமையை விளக்க போதிய பிரமாணமாகும். உதாரணமாக, ஹஜ்ரத் உமர் பாரூக் (ரலி.) அவர்கள் இஸ்லாத்தில் வருவதற்குமுன் ஓர் தினத்தில் 'அதோ! அந்த முஹம்மதி(ஸல்)ன் தலையைக் கொணர்ந்துவிடுகிறேன்' என்று வீர கர்ஜனை செய்து கரத்தில் ஏந்தியவாளுடன் ஞானகுரு (ஸல்) அவர்கள் விடுதியை நோக்கி செல்கிருர்கள். ஆனல் அவர்களால் கொணரப்பட்ட ஞானமிருதங்களைப் பருகிய மாத்திரத்தில் வேட்டையாடச் சென்ற உமர்பாரூக் (ரலி.) அவர்கள், இஸ்லாமென்னும் வலையில் வேட்டையாடப்படுகிருர்கள். நம் நபியவர்களின் ஆத்மசக்தி தானென்னே! அரேபியாவின் சிங்கம் ஹஜ்ரத் உமர் பாரூக் (ரலி.) அவர்களின் இதயம் இத்துணை விரைவில் அதுவும் ஒரே தினத்தில் இத்தகை மாறுதலடைந்து அவர்கள் இஸ்லாமாகிவிட்டார்

கள் என்றால், நம் ஞானப்பிதா (ஸல்) அவர்களின் மேன்மையை விளக்க வேறென்ன வேண்டும்? இதுமட்டுமா? இரசூலவர்களின் பிரீதிமேலீட்டால் ஹஜ்ரத் உமர்பாரூக் (ரலி.) அவர்களின் இருதயமே இரசூல் மயமாக மாறுகிறது. சத்தியநபி (ஸல்) அவர்கள் வபாத்து (காலமான) செய்தி பிரஸ்தாபிக்கப்படுகிறது. இது செய்தியை செவியுற்ற ஹஜ்ரத் உமர்பாரூக் (ரலி.) அவர்கள், ரசூலுல்லாஹ் வபாத்தாகிவிட்டார்கள் என்று எவரும் சொன்னால் அவர் சிரம் துண்டாகிவிடும் என்றியம்புகிறார்கள். என்னே, ரசூல்மாட்டுள்ள மாண்பு! இதுபோன்ற வீரர்களின் சரிதைகள் பல உள. ஆனால் விரிவஞ்சி விடுத்தனன்.

3-வது நிபந்தனை

மூன்றாவது நிபந்தனை— "அம்மதத்தின் சட்டதிட்டங்கள் பொதுவாயிருத்தல் வேண்டும்" என்பதாகும். பைபிளில் "இந்தப் பன்னிருவரையும் (கிருஸ்துவமத பிரசாரத்திற்காக) அனுப்புகையில் அவர்களுக்கு கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால், நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள். (மத். 10 அ. 5, 6 வா)ல் எழுதப்பட்டிருக்கிறது. பிறிதோரிடத்தில் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்களிடம் ஒரு பெண்மணி தன் குழந்தைக்கு இறைவனிடம் பிணி நீங்க பிரார்த்திக்கும்பொருட்டு ஒரு பிள்ளையைக் கொண்டுவந்து, மன்றாடிக் கேட்டுக் கொண்டாள். அவள் இஸ்ரவேலர்களில் நின்றுமல்லாதவளாகையால் "அதற்கு அவர் காணாமற்போன இஸ்ரவேல் வீட்டாரிடத்து அனுப்பப்பட்டேனேயன்றி மற்றபடியல்லவென்றார்" (மத. 15 அ. 24 வா) எனவும் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வாக்கியங்களைக் கொண்டே கிறிஸ்தவமத சட்டதிட்டங்கள் ஒரு குறிப்பான சாராருக்கு மட்டுமே சொந்தம் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதில் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கே தீர்க்கதரிசியாய் அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்பது வெள்ளிடை விலங்கல்.

4-வது நிபந்தனை

நான்காவது நிபந்தனை— "அம்மதத்தின் போதனா முறைகள் மற்றமத போதனா முறைகளைப் பார்க்கினும் உயர்ந்ததாயிருத்தல் வேண்டும்" என்பதாகும். பைபிளை எடுத்துப்பாருங்கள். அதில் முன்னவர்களின் சரித்திரங்களும் பிரார்த்தனைகளும் சில முன்வாக்குகளுமே தவிர வேறெதுவும் காணப்படுகிறதில்லை. இதற்கெதிரில் குர்ஆனையும் நீதக்கண்களைக்கொண்டு சீர்தூக்கிப்பார்த்தால் அதில் லௌகீக, வைதீக சம்பந்தப்பட்ட விஷயங்களனைத்தும் சட்டப்பூர்வமாக காணக்கிடக்கிறது. எனவே, இறைவன்தானே தந்திருமறையில் "அந்தக் குர்ஆனில் ஒவ்வொரு வஸ்துக்களின் விபரமும் நிறைந்து இருக்கிறது" என திருவளமாயிருப்பதால் அதன் போதனா முறை உயர்ந்ததாகும். இதுமட்டுமல்ல, முஸ்லிமல்லாதாரான பெரிய பெரிய கிறிஸ்துவ சரித்திராசிரியர்களும், குர்ஆனை நிராகரிப்பவர்களும் கூட "குர்ஆன் லௌகீக வைதீக கல்வி, ஒழுங்கு, ஒற்றுமைபோன்ற எதையும் சொல்லாமல் விட்டுவிடவில்லை" என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இறுதியாய் கூறின் குர்ஆனின், கல்வி முறையில் அதன் ஒவ்வொரு பக்கங்களும் படிப்பினைக்குரிய பொக்கிஷமாகவே இருக்கிறது.

(தொடரும்)

இஸ்லாம் மத விளக்கம்.

நமது சன்மார்க்கக் கொள்கைகள் (ஈமான்) கிரிகைகள் (இஸ்லாம்) சம்மந்தமான சகல விஷயங்களையும் தக்க முறையில் நிபுணர்களின் ஆராய்ச்சியைக்கொண்டு கூத்தாநல்லூர் "சன்மார்க்கத் தொண்டர்" சபையார் ஒன்று திரட்டி "இஸ்லாம் மத விளக்கம்" என்னும் பெயரால் வெளியிட்டிருக்கின்றனர். அறபி, உர்து முதலிய பாஷைகளைப்பயின்று அவைகளின் மூலம் மார்க்கக் கல்வியைக் கற்றுக்கொள்ளாமலும், இஸ்லாம் மதத்தின் சட்டதிட்டங்களை அறிந்து கொள்ளாமலும் இருக்கிற முஸ்லிம் ஸ்திரி, புருஷர் இருபாலாருக்கும் இப்புத்தகம் மிகப் பயன்படுமென்பதிலையமில்லை. இது செந்தமிழில் அழகிய நடையில் எழுதப்பட்டிருப்பதால் ஒவ்வொருவரும் வாங்கிப் பிரயோசனமடைவார்களென எதிர்பார்க்கின்றோம்.

சுமார் 200 பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தின் கிரயம் அண 8.

(தபால் செலவு பிரத்தியேகம்)

கிடைக்குமிடம்:— 'சன்மார்க்கத் தொண்டர் சபை' கூத்தாநல்லூர்.

கூத்தாநல்லூர் மரக்கடையில் ஹாஜீ ஜ. மு. முகம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்களால் கட்டப்பட்ட மஸ்ஜிது.



கூத்தாநல்லூர் மரக்கடை புதிய மஸ்ஜித் வக்பு விழா

18—3—38 வெள்ளிக்கிழமை ஜூம்ஆவில் இவ்விழா நடைபெற்றபோது ஹாஜி ஜ. மு. முகம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்களால் செய்விக்கப்பட்ட சொற்பொழிவுச் சுருக்கம்.

அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன் ; வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா றசூலிஹி செய்யதினு முகம்மதின் வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மயீன்.

அல்லாஹு தஆலாவின் அருள்நிறைந்த அன்பான முஸ்லிம் சகோதரர்களே! நாம் இங்கு கூடியிருப்பது இப்புதிய மஸ்ஜிதை வக்பு செய்வதற்காகவேயாகும். இது கட்டி முடிந்த சந்தர்ப்பத்தில் நான் ஹஜ்ஜு யாத்திரையிலிருந்ததால் இவ்விஷயத்தை முடிக்க சற்று தாமிதமே தவிர வேறில்லே. அது இன்று பூர்த்தியடைந்திருப்பதில் நாம் சந்தோஷமடைவோமாக.

இந்த மரக்கடை கிராமத்தில் சொற்ப முஸ்லிம்களே வசித்து வந்தார்கள். சமீபத்தில் பக்கத்திலுள்ள கூத்தானல்லூர் முஸ்லிம்களில் பலர் இங்கு குடியேற ஆரம்பித்து இங்கோர் மஸ்ஜிதையும் நிர்மாணிக்க வேண்டுமென விரும்பினார்கள். அடுத்தாற்போல் கூத்தாநல்லூர் மேலப்பள்ளி மஸ்ஜித் 3 பர்லாங்கு தூரத்திலேயே இருந்தாலும் இவ்வூரில் அவசியமென்று விரும்பிய இம்மஸ்ஜிதை அல்லாஹ்வின் நாட்டப்படி அழகியதோர் பக்கா காங்கிரட் கட்டிடமாக அமைக்கும்படி என்னை தூண்டிய வல்ல ரஹ்மானை நாமெல்லோரும் புகழக் கடமைப்பட்டிருக்கிறோம். இனி இவ்வூர் வாசிகள் தங்கள்மீது விதியாக்கப்பட்ட ஐங்கால வணக்கத்தைத் தவறாது தொழுதுகொண்டு மார்க்கக் கல்வியையும் கற்றுவரவேண்டுமாய் கோருவதே எனது அவாவாகும். இப்பள்ளியின் நிர்வாகச் செலவுக்காக மாதம் 25 ரூபாய் கிடைக்கக்கூடிய ஒரு பாகத்தை மன்னார்குடி கடையிலுள்ள வருமானத்திலிருந்து மதுரஸா மன்பஉல் உலா தஸ்தாவேஜி மூலம் கிடைக்கும்படி செய்திருக்கிறேன்.

இம் மஸ்ஜிதை கூத்தானல்லூர் மத்ரஸா மன்பஉல் உலா சபையின் ரிஜிஸ்டர்ட் சட்டதிட்டங்களுக்குட்படுத்தி நிர்வாக உத்தியோகஸ்தர்கள் சார்பில் மரக்கடை முஸ்லிம்களின் சௌகரியங்களுக்காக வேண்டியதுகளைச் செய்யும்படியான ரிஜிஸ்டரான தஸ்தாவேஜி ஒன்றையும் இன்று தங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

தஸ்தாவேஜியின் சாராம்ஸம்.

“இந்த மஸ்ஜித் எனக்கும் எனது காலஞ்சென்ற மனைவி பாத்துமாபீவிக்கும் தரும பலன் தரும்படி வக்பு செய்யப்பட்டுவிட்டது. இதை நானே அல்லது என் வாரிசுகளோ வணக்கம் தவிர எவ்வித சுதந்திரமும் கொள்ளக்கூடாது” என்பதாகும்.

பல தர்ம ஸ்தாபனங்கள் ரிஜிஸ்டராகி நாட்டாண்மைக்காரர்கள் பெயரிலும், பிறகு தனது பந்துக்களே தர்மகர்த்தர்களென்றும் ஏற்பட்டு ஒருசமயம் தரித்திரம் தொடும்போது அதன் வருமானங்கள் கோரியபடி செலவு செய்யப்படாமல் வம்புகளாகவும், மாறுபாடாகவும் முடிந்துவிடுகிறது என்பதற்காகவே இவ்வாறு சொல்லநேரிட்டது. இனி வக்பு செய்யும் ஒவ்வொரு சகோதரர்களும் இதை கவனிக்க வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் ஒவ்வொரு பொது ஸ்தாபனங்களும் ஜாயிண்டு ஸ்டாக் ரிஜிஸ்டரில் பதிவு செய்து கொள்ளவேண்டியதும் அவசியமாகும். இதனால் சில்லரை விவகாரங்களுக்கும் வழியில்லாதொழிவதுடன் பலர் நம்பி தங்களது ஹாஜத்துள்ள தர்மங்களேயும் தாராளமாகச் செய்ய வழி யேற்பட்டு விடும். இதற்காக ஜாயிண்டு ஸ்டாக் ரிஜிஸ்டர் பீஸ் சுமார் ரூபாய் ஐம்பது தவிர புதிய புதிய நிர்வாகஸ்தர்கள் மாறி வரும் பொழுது பதிவுச் செலவுங்கூட கிடையாது.

வாழ்க்கைக் கிரமம்.

நம்மில் ஒவ்வொருவரும் தன் வாழ் நாட்களை எப்படி நிதானித்து அடக்கமாகச் செலவு செய்ய வேண்டும்; அதில் எதைக் கடப்புச் செய்யக்கூடாது; எதை அவசியம் செய்ய வேண்டுமென்பதை நமது இஸ்லாம் மார்க்க சட்ட திட்டங்கள் விரிவாய்க்கூறி வருகின்றன. அதை பொருட்படுத்தாது வரவுக்குத் தக்க

செலவுகளையும் நிதானித்துச் செய்யாது சோம்பேறிகளாத் திரிவதும் திண்ணைத் திட்டுகளில் கூடி வீண்பேச்சுகள் பேசி காலங்கழிப்பதுமே தற்போதய நஞ்சகோதரர்கள் பெரும்பாலோரின் பழக்கமாயிருந்து வருவது நம் முஸ்லிம்கள் பிறசமூகத்தைவிட கீழ்ப்படியில் இருந்து வருவதற்கு காரணமாகும். நாம் இன்று என்ன செய்தோம்; நாளைக்கு என்ன செய்வோம்; நம்மால் யாருக்கு என்ன பிரயோஜனம்; நம்மை படைத்து பரிபக்குவப் படுத்திய ஆண்டவனுக்கு என்ன கடமைகளைப் புரியவேண்டு மென்பதை சிந்தித்து நேரான வழியில் நடந்த ஒருவனுக்கு எவ்விதக் கவலையும் ஏற்பட ஞாயமில்லை. நம் சக்திக்குத் தக்கவாறு நிதானமாக நடக்காவிடில் நமது நிலைமை எவ்வாறாகுமென்பதையும் நாம் கவனத்திலிறுத்தல் அவசியமாகும்.

பல ஊர்களில் தேள்வையற்றதும் தனது நிலைமைக்கு அதிகமானதுமான செலவுகளைச் செய்துகொண்டு தங்களுக்கும் தங்கள் ஊருக்கும் உதவி தேடி வருகிறவர்களை நாம் அடிக்கடி காண்கிறோம். தனவந்தர்கள் நிறைந்திருக்கும் ஊர்களிலிருந்தும் பள்ளிவாசல், மத்ரஸா, ஸ்கூல்கள் முதலியவைகளுக்கு தாராளமாக தனுபகாரம் தேடி வரும் சமயத்தில் இது தருமமா அல்லது தாட்சண்ணியமா வென்ற கேள்விக்கே இடமுண்டாகி விடுகிறது. ஆனால் நமதூரைப் பொருத்தவரையில் அவ்வித மிருப்பதாக எனக்கு தெரியவில்லை என்பதைக் காண பெரிதும் சந்தோஷமடைகிறேன்.

ஒரு ஊரார் ஒரு நன்மையான காரியத்தைச் செய்தால் தாங்களும் அவ்வகைக்கு ஆசை கொண்டு தங்களது ஆடம்பரச் சிலவை நிறுத்தி அதைபூர்த்தி செய்வதா? அல்லது அதுபோல் எங்களுக்கும் செய் என்று பிற ஊராரை வேண்டுவதா?

கூடுமான வரையில் தென்னிந்தியாவைப் பொருத்தமட்டில் பல சடங்குகளிலும் நமதூரில் கொஞ்சம் நிதானித்தே ஆடம்பரச் சிலவுகளை அவசியமற்றதாய் விலக்குகிறோம். நமக்குள்ள அவசியங்களை அடக்கமாய் செலவு செய்து கொள்கிறோம். இன்னும் கூடுமான வரையில் விவாகச் சடங்குகளையும் சுருக்கிச் செய்யவேண்டுமென்று பலர் கருதுகிறார்கள். சமார் 10 சத விகித ஜனங்களே அக்கட்டுப் பாட்டுக்கு எதிராய் தோன்றினும், இவ்வகை சுபாவமுள்ளவர்கள் நாளடைவில் சிந்திக்க நேரிட்டுவிடும்.

நமதூர் அவசியங்களையே நாம் இன்னும் பூர்த்தி செய்து கொள்ள இயலாமலிருக்கையில் வெளியூர் வாசிகளும் தங்கள் ஊர்களுக்குவேண்டியன செய்யுங்கள்; எங்கள் பணங்களை சொந்த சடங்குகளுக்கு செலவிட்டுவிட்டோமென்றும் உதவி தேடுகிறார்கள். ஒருவர் யாருக்குத்தான் திருப்தியளிக்க முடியுமென்பதை சிந்திக்கிறார்களில்லை. தென்னிந்தியாவில் பிரபலஸ்தராய் விளங்கிய மர்ஹூம் ஆலி ஜனுப் அல்ஹாஜ் R. E. முகம்மது காஸிம் அவர்கள் தங்கள் காலத்தில் பெரிய தருமங்களைச் செய்த மார்க்க பக்தர்களாயிருந்ததுடன் அநேகர் சன்மானமாகவும் ஊதியமாகவும் அடைந்த பலன்கள் பல உண்டு. அவர்கள் சொத்துக்களை தற்காலம் கவனிக்கில் அவர்கள் செய்த நன்மைகள் போற்றத்தக்கதேயாகும். இதிலும் குறை கூறுபவர்கள் பலர் இருந்தார்கள், இருக்கிறார்கள் என்றே சொல்லலாம். இதிலிருந்து ஒருவர் எல்லோரையும் திருப்திசெய்ய முடியாதென்பதேயாகும். றமலான் மாதத்தில் அவர்கள் வஸ்திர சகாயம் செய்யத்துவக்கி அதுவே பல ஆயிரக்கணக்கான தொகைக்கு ஏறிக்கொண்டேவந்து பன்னூற்றுக்கணக்கான பேர்கள் அங்கு போய் கூடியதையும், குறிப்பாக நமதூரில் வந்தேறி வேலைசெய்து கொண்டிருக்கும் ஜனங்கள் தண்ணீர் எடுக்காமலும் மஸலா அறைக்காமலும் சில தினங்கள் அங்கு சென்று வந்ததை நாம் நேரில் கண்டிருக்கிறோம். இதனுல் தெரிவதென்னவெனில் பெரும்பாலும் வேலைகள் செய்துகொண்டிருப்பவர்களே கூலியை விட்டுவிட்டு புறப்படுகிறார்கள் என்பதாகும். நமது ஊரிலும் முஸாபிர்களுக்கு சாப்பாடு போட்டு பணமும் கொடுப்பதாய் ஒரு சங்கம் ஏற்படுத்தினோம். அக்கைங்கரியமானது வருஷாந்திரம் ஏறிக்கொண்டே போகிறதை கண்டு சிலர் இதை நிறுத்தவேண்டுமென எண்ணிவிட்டார்கள். இதை உள்ளூர் ஏழைகளுக்கு உதவி செய்வதென தீர்மானிப்பது திருப்தியாகும். அல்லாஹ் நம்மனைவர்களையும் நல்ல அமல், புத்தி கூர்மை, கல்வித் திறமை, தொழில் வன்மை முதலியதுகளில் சிரேஷ்டர்களாக்கி நமதூருக்கு வேண்டிய வசதிகளை அவரவர்கள் தகுதிக்குத் தக்கவாறு உதவிகளைப்புரிந்து ஒன்று சேர்ந்து வாழவும் இம்மஸ்ஜிது மென்மேலும் விருத்தியடையச் செய்யவும் பிரார்த்திப்போமாக!

ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்க அறிக்கை

இலங்கைவாசிகளுக்கு வேண்டுகோள்

கண்ணியமிக்க சோதரீர் !

சென்ற எட்டு ஆண்டுகளுக்கு முன் இஸ்லாத்தின் பாதுகாப்பை உத்தேசித்து மார்க்க பக்தர்களும் அபிமானிகளும் சேர்ந்து "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தை சென்னையில் நிறுவியது தங்களுக்குத் தெரிந்ததே. அன்று இச்சங்கம் எந்த நோக்கத்திற்காக நிறுவப்பட்டதோ அதற்கேற்ப இஸ்லாம் பாதுகாப்பிற்கும், அபிவிர்த்திக்குமான பல அரிய பெரிய சேவைகள் செய்து வந்திருக்கிறது—செய்தும் வருகிறது.

முக்கியமாய் நமது நாட்டு மக்களிடையே பரவி ஆங்காங்கு சிற்சில இடங்களில் தோன்றிய வழிகெட்ட காதியானிக் கொள்கையை அடியோடு ஒழித்து ஜெயக்கொடி நாட்டிவிட்டது.

கூத்துமேடையில் நபிமார்களின் வேஷம்பூண்டு நடிக்கப்பட்டு வந்தவும், தொழுகை முதலிய மார்க்கக்கிரியைகளை பரிகாச முறையில் காண்பிக்கப்பட்டு வந்தவுமாகிய அலிபாதுஷா நாடகத்தின் மீது தக்க நடவடிக்கை எடுத்து மார்க்க விரோதமான விஷயங்கள் நடைபெறாது தக்க பந்தோபஸ்து செய்து தடை செய்தது.

கிறிஸ்துவப்பாதிரி ஒருவரால் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் விஷயமாய் அறுவறுக்கத்தக்க முறையில் வியாசமெழுதி வெளியிடப்பட்டிருந்த "கிறிஸ்துவ சரித்திர சங்ஷேபம்" என்னும் புஸ்தகத்தின் மீது தக்க நடவடிக்கை எடுத்து அப்புத்தகம் பறிமுதலாகும்படி செய்தது. இவை போன்ற இன்னும் அநேக காரியாதிகளை தக்கமுறையில் செய்து வெற்றிக் கொடி நாட்டி வந்திருக்கிறது.

இவ்வாறு இச்சங்கம் செய்துவரும் அரும் சேவைகளை ஆங்காங்குள்ளோர் பாராட்டிபற்பல இடங்களிலும் இதற்குக் கிளைச் சபைகள் அமைத்ததுடன் இதன் நிருவாகிகளை தங்கள் நாட்டிற்கு வர வேண்டுமெனவும் அழைத்தனர். ஆயினும் பற்பல அசந்தர்ப்பங்களால் வெளியிற் புறப்பட சௌகரியமில்லாது போயிற்று.

சமீபத்தில் சில நாளாய் ஒரு டெபுடேஷன் சிலோன்வந்து அவ்விடத்திய நமது அபிமானிகளையும் ஏனையோரையும் கலந்து சங்க அபிவிர்த்திக்கான காரியஞ்செய்ய வேண்டுமென முடிவு செய்யப்பட்டிருந்தும் தவிர்க்க முடியாத காரணங்களால் பிரயாணம் சுணங்கிக் கொண்டே வந்தது. எனவே, இது பொழுது சங்கக் காரியதரிசி மௌலவீ அல்ஹாஜ் S. A. முகம்மது அலீசாஹிப், மௌலவீ M. முகம்மது மியான்சாஹிப், மௌலவீ S. K. முகம்மது ஷர்புதீன் சாஹிப் இம்மூவரும் இலங்கைக்குப் பிரயாணமாகி கொழும்பு வந்திருக்கிறார்கள். இலங்கையிலுள்ள முஸ்லிம் நேயர்கள் அவர்களுக்குத் தக்க ஆதரவு புரிந்து சங்கத்திற்கு நன்கொடைகளீந்து இச்சங்கம் இஸ்லாத்திற்கும் நம் சமூகத்துக்கும் இன்னும் அரிய ஊழியங்கள் புரியவும், பிரசாரத்தையே பிரதானமாகக் கொண்டு இதன் ஆதரணையில் நடத்தப்பட்டுவரும் மாசிகை அபிவிர்த்தியான முறையில் நடைபெறுவதற்கு சௌகரியமாகவும் உதவிபுரியுமாறு கோருகிறோம்.

இங்ஙனம்,

நிருவாகிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம்.

ஜர்மனியின் செயற்கை மனிதன்

ஜர்மனியிலுள்ள புதிய ஆராய்ச்சியாளரொருவர் சமீபத்தில் வெளிப்படுத்திய நூதன செயற்கை மனிதன் விஷயமாய் லண்டன்மாநகர் மிக மிகப் பறபறப்படைந்திருக்கிறது. இது காலை அது லண்டனுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. லண்டனின் பிரக்யாதி பெற்ற டெய்லி எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் விசேஷ நிருபர் இது சம்பந்தமாய் வெளியிட்ட செய்தியைப் பார்த்து லண்டன்நகர் முழுதிலும் எங்கும் அதே பேச்சாய்த்தான் இருந்து வருகிறது. அந்நிருபர் அந்த நூதன செயற்கை மனிதனை ஒருமணி நேரம் வரை சோதித்துப் பார்த்து ஆச்சரியமென்னும் கடலில் மூழ்கி விட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அந்த செயற்கை மனிதனை, ஜர்மன் தேசத்தின் நவீன ஆராய்ச்சியாளர் லண்டன்நகரின் பல முக்கியஸ்தர்கள் முன் வெளிப்படுத்திக் காண்பித்தார். அம்மனிதன் செய்யும் காரியாதிகளைக் கண்ணுற்ற அம்மேதாவிகள் யாவரும் அதிஆச்சரியமடைந்தனர். அந்த செயற்கை மனிதனைக் கண்டு, இவன் இயற்கை மனிதனா அல்லது செயற்கை மனிதனா என்பதைக்கூடத் திட்டப்படுத்தமுடியாத நிலைமையிலாய்விட்டனர்.

ஆச்சரியத்தை உண்டுபண்ணக்கூடிய அந் நூதன மனிதன் மின்சாரக் கம்பிகளினால் தயாரிக்கப்பட்டிருப்பதாயும், இதன் தயாரிப்பில் சுமார் 7 வருடங்களுக்குமேல் செலவாய்விட்டதாயும், 1930-ம் ஆண்டு முதல் வேலை செய்யப்பட்டு வருவதாயும் அதனை உற்பத்தி செய்த ஜர்மன் சைன்ஸ் ஆராய்ச்சியாளர் கூறியிருக்கின்றார். அவ்வாராய்ச்சியாளரிடம் இச் செயற்கை மனிதன் விஷயமாய் பற்பல கேள்வி கேட்கப்பட்டும் அக்கேள்விகளுக்கு யாதொரு பதிலும் சொல்லாது குஞ்சிரிப்புடனிருப்பதைப் பார்த்தால் அதன் இரகசியத்தை யாருக்கும் வெளியிட அவர் விருப்பங்கொள்ளவில்லை எனத் தெரிகிறது.

அங்கு கூடியிருப்பவர்களில் யாரும் அச் செயற்கை மனிதனைத் தொடுவதற்கு அந்த சயின்ஸ் ஆராச்சியாளர் அனுமதியளிக்கவில்லை. இரண்டு கஜ தூரத்திலிருந்துகொண்டு அதனைப் பார்த்தால் இயற்கையான உயிருள்ள மனிதன் போல்தான் காணப்படுகின்றது. இயற்கை மனிதனைப்போல் முகம், கண்கள் இவைகளில் ஒளியும் பிரகாசமும் ஏற்பட்டிருப்பதால் முகம் மாமிசத்தாலமைந்ததெனவும், கண்கள் இயற்கையாயமைந்ததென்றும் உறுதிகொள்ளும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அம்மனிதன் அழகு சௌந்தரியம் உடையவனாயும், வெண்மை சிகப்பு இருவர்ணங்களும் கலந்த நிறமுடையவனாகவுமிருக்கிறான். புதிய நாகரீகத்திற்கேற்ப பேஷனபிள் உடை அணிந்து காலர், டை கட்டிக்கொண்டிருக்கிறான். குளிர் தேசமாகையால் உஷ்ணமான கோட் முதலியவைகள் அணிந்திருக்கிறான். தலையில் சிவப்பட்டிருக்கும் உரோமங்கள் மக்களுக்கு அதிஆச்சரியத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. முகம் நடுத்தர அழகிய தோற்றத்தையுடையதாக இருக்கிறது. அதில் குரும்புத்தனதின் அறிகுறி தென்பட்டிக்கொண்டிருக்கிறது. இந்நிலைமையில் அவன் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியஸ்தர்கள்முன் செய்து காண்பித்த காரியங்கள் அதிஆச்சரியத்தை விளைவித்தது.

1. அந்த செயற்கை மனிதன் வீற்றிருந்த நாற்காலியினின்று எழுந்து அந்த அறையின் நாலு பக்கங்களிலும் சுற்றிவர முற்பட்டான்.

2. அவன் மக்களளவில் நோக்கியவாறே தன் நாற்காலியில் வைக்கப்பட்டிருந்த தொப்பியை கையிலெடுத்து நல்லவிதமாய் தலையிலணிந்து கொண்டான்.

3. அவன் சிக்ரெட் டப்பாவிலிருந்து ஒரு சிக்ரெட் எடுத்து வாயில் வைத்துக்கொண்டு நெருப்புப்பெட்டியிலிருந்த ஓர் குச்சியால் அதனைப் பத்தவைத்துக் குடிக்க ஆரம்பித்தான். அதன் புகை மூக்கிலும் வந்துகொண்டிருந்தது.

அங்கு கூடியிருந்தோர் இவ்வற்புதங்களைக் கண்டு ஆச்சர்ய மடைந்ததுடன் மென்மேலும் அவர்களது பிரீதிமேலிட்டது. அந்த செயற்கை

மனிதன் இதோடு தன் காரியத்தை முடித்துக் கொள்ளாது,

4. அவனது சமீபத்திலுள்ள மேஜைமீ திருந்த தண்ணீர் கிளாஸை எடுத்து வாயில் வைத்து உதட்டில் சேர்த்து தண்ணீர் குடித்து விட்டு அந்த கிளாஸை மேஜைமீது வைத்து விட்டு அறையினுட் பிரவேசித்துவிட்டான்.

5. அவன் ரொட்டியின் ஒரு துண்டை கையிலெடுத்துக்கொண்டு மெள்ள மெள்ள தின்ன ஆரம்பித்து முழுதையும் முடித்துவிட்டான்.

6. அதன்பின் அச்செயற்கை மனிதன் சிவப்பு நிறத்தையுடைய ஆப்பிள் பழமொன்றை கையிலெடுத்துக்கொண்டு வெகு ருசியாய்த் தின்ன ஆரம்பித்தான்.

7. இதெல்லாம் முடிந்தபின் அவன் அங்கு வீற்றிருந்தவர்களை நோக்கி நிரம்ப இனிமையாகவும் இலக்கண இலக்கிய சுத்தத்தோடும் ஹலோ—"உங்கள் நிலைமை யென்ன? எந்த முறையில் காலங்கழிகின்றது" என்று வினவியது மக்களை பீதியடையச் செய்துவிட்டது. அவன் இவ்வாறு வார்த்தையாடுங்கால் அவனது உதடு முறைபோல் அசைந்துகொண்டிருந்தது. உண்மை மனிதன் இதரர்களிடம் சுகச் செய்திகள் வினவுங்கால் முகம் எவ்வாறு மலர்ந்து காணப்படுமோ அவ்வாறே இவன் முகத்திலும் மலர்ச்சியின் அறிகுறி காணப்பட்டது.

இந்நிலைமையில் இக்காட்சியை காண விஜயஞ் செய்துள்ள மக்களின் பரவசம் முற்றுப் பெருதிருக்கும் நிலைமையில் அந்த செயற்கை மனிதனைச் செய்தவன் முன்வந்து,

8. இம்மனிதன் ரொட்டியை நெருப்பில் வாட்டியும் கொள்வான்.

9 சாப்பாடும் தயார்செய்து கொள்வான்.

10. சில மெஷின்களின் தனியாக வைக்கப் பட்டுள்ள சாமான்களை எடுத்து பூட்டி ஒழுங்கு செய்து விடுவான், என அறிவித்தான். அம் மனிதனைச் செய்த ஸைன்ஸ் ஆராய்ச்சியாளன் அதற்கு சுமார் 20 அடி தூரத்தில் நின்று கொண்டு அதனை நோக்கி பலவாருக இதைச் செய், அவற்றைச்செய்து காண்பி என கூறிய வுடனே சற்றும் தாமதமில்லாது அதனைச்செய்தவன் கூறியவாறே செய்து காண்பிக்கிறது. இவ்வற்புதம் லண்டனிலுள்ள சில முக்கியஸ்தர்கட்கு மட்டில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. பொதுமக்களிடையே காண்பிக்கப்படுமாகில் ஐரோப்பா முழுதிலும் இன்னும் அதிகமான உணர்ச்சி காணப்படுமென்பது திண்ணம்.

உலக நிகழ்ச்சிகள்—விநோதங்கள்

காஷ்மீரில் பனி

இவ்வாண்டு காஷ்மீரில் பெய்த பனியைப் போல் சென்ற நூறுண்டுகளுக்கிடையே ஏற்படவில்லை எனக் கூறப்படுகின்றது. அங்குள்ள குரு என்னுமூரில் 11 நபர்கள் பனியில் அகப்பட்டு மரணமாய்விட்டனர். காஷ்மீரின் தண்ணீர் தாங்கி அமைக்கப்பட்டுள்ள ஹாரூன் என்னுமிடத்தில் ஒரு பெருங்கட்டடம் பனியின் பளுவு தாங்காது தரையோடு சேர்ந்துவிட்டது. இதன் பயனய் அநேகர் மரணமாயும் அநேகர் காயப்பட்டும் போய்விட்டனர். தெருவீதிகளெல்லாம் பனிக்கட்டிகளால் நிரம்பியிருந்தது.

99 வயதில் விவாகம்

முதிர்ந்த வயதில் விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்னும் பைத்தியம் இந்தியாவில் மட்டுந்தான் ஏற்பட்டிருப்பதாக நாம் இதுகாலைவரை நினைத்திருந்தோம். இதுபொழுது இதர தேசங்களிலும் இச்செய்கை இந்தியாவை விட மிக மிக மோசமான ஸ்திதியிலிருப்பதைத் தெரிந்துகொள்கிருேம். பாதா பஸ்டிலுள்ள கோடீஸ்வரரான ஹின்றிமுச்சல் என்பவருக்கு இதுபொழுது 99 வயதாகிறது. இவரின் மூத்த குமாரருக்கு 70 வயதும், இவரின் குமாரருக்கு சுமார் 50 வயதும், இவரின் பிள்ளைக்கு 19 வயதுமிருக்கிறது. எனவே அவருடைய சங்

ததிகள் 82 இருக்கின்றனர். இங்நிலைமையில் அவர் இளவயதையுடைய ஓர் அழகிய மாதை விரும்பிக்கொண்டிருக்கிறார். 19 வயதையுடைய ஒருமாதை விவாகஞ் செய்துகொள்ள முடிவு செய்துவிட்டு, "எனது வயது 99 ஆக இருந்த போதினும் வாலிபர்களைப்போல் சந்தோஷ வாழ்க்கையுடையவனாகவிருக்கிறேன்; இன்னும் 50 வருடங்கள் வரை ஜீவித்திருந்து என் சந்ததிகளி லபிவிருத்தி ஏற்படும் என்னும் நம்பிக்கை எனக்கிருக்கிறது" என பத்திரிகா நிருபர்களுக்கு பேட்டியளிக்குங்கால் மிஸ்டர் முச்சல் கூறியுள்ளார்.

வாலிபத்தை வெறுக்கும் மாது

உலகில் ஒவ்வொருவருக்கும் அவரின் வாலிபப்பருவமே மிக மிக விருப்பமானதாகும். ஆனால் இதே உலகில் வாலிபப்பருவத்தை வெறுப்புடன் கவனிக்கின்றவர்களுமிருக்கின்றனர். லாஸ்என்ஜிலீஸிலுள்ள லேடி டாக்டரான ஓர் மாது தன் வாலிபப்பருவத்தை அதன் காலத்திற்கு முன்பே வழியனுப்பிவிட முயற்சித்து வருவதாகத் தெரிகிறது. இதற்காக அவள் உபயோகித்து வந்த மருந்தின் பயனாய் முகத்தில் சுருக்கம் விழுந்து உரோமங்களெல்லாம் வெளுத்துப்போய்விட்டது. இதுபொழுது அம்மாது 35 வயதை அடைந்திருந்தபோதினும் 50 வயதையுடையவளாக மதிக்கப்படுகின்றாள். டாக்டர் தொழிலை நடத்துவதற்கு முதிர்ந்த வயது மிக மிகப் பிரயோசனமளிக்கிறதென்பது அம்மாதின் நோக்கமாகும். ஏனெனில், வயதை அடைந்த டாக்டர்கள் தான் அனுபசாலிகளாயிருக்கின்றார்களென்பது பொதுஜனக் கொள்கையாகும். அம்மாது தான் செய்துள்ள காரியம் சரி என்பதை நிரூபிப்பதற்காக, தான் முதிர்ந்த வயதை அடைந்ததாக பாவனை காட்டியது முதல் வருவாய் அதிகரித்திருக்கிறதென நிரூபித்துக்காட்டுகின்றாள். விஷயம் எவ்வாறாகவிருந்தபோதினும் எந்த வயோதிகத்தை உலகம் வெறுத்துக்கொண்டிருக்கிறதோ அதனை வாலிபப்பருவத்தில் அழைத்துக்கொண்டுள்ளவர்களில் இவள்தான் முந்திய மாது என்பதாய்க் கூறலாம்.

பவுண்டன்பேனா

இப்புதிய நூதன உற்பத்தியானது 1937-ம் வருஷ சம்பவத்தில் புதிய ஓர் ஆச்சரியத்தை விளைவித்திருக்கின்றது. இப்பவுண்டன்பேனாவில் சுத்த ஜலத்தை நிரப்பியவுடன் அது மையாக மாறிவிடுகிறது. இப்பேனாவின் உற்பத்திக்குப்பின் ஒவ்வொரு கிணறு, குளங்களும் மைபோலாய்விட்டது. இதன் பயனாய் மை ஊற்றப்படும் பேனாக்கள் முழுதும் உபயோகமற்றதாய்விட்டதெனக் கருதப்படுகிறது. இது நீண்டநாள் உழைக்கக்கூடியதெனவும் சீக்கிரம் கெட்டுப்போகிறதில்லை எனவும் கூறப்படுகிறது. இது மை அகப்படாத காடு மலை வனாந்தரம், ரயில், கப்பல் முதலிய பற்பல இடங்களிலும் பிரயோசனமளிக்கும். மை தேவைப்படும் காலத்தில் தண்ணீரை நிரப்பிக்கொண்டவுடன் அது மையாக மாறி எழுத்தில் உபயோகமாகிறது. இது இக்கால உலக ஆச்சரியத்திலொன்றெனக் கூறுவது மிகையாகாது.

ஆகாயத்தில் போஜனசாலை

இதுகாலை ஆகாய விமான முன்னேற்றம் தினே தினே முன்னேற்றமடைந்துகொண்டே வருகிறது. இத்தோரணையில் அவ்விமானத்திற்குள்ளேயே தூங்குவதற்கும், விளையாடுவதற்கும், நூலாராய்ச்சி செய்வதற்கும் வசதி செய்யப்பட்டு வருவதுடன் அதில் ஹோட்டலைப்போல் சாப்பாடு தயார் செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. அதில் பிரயாணஞ் செய்வோர் ஏதாவது ஒரு வஸ்துவை விரும்பி ஆர்டர் கொடுத்தால் ஒரே நிமிஷத்தில் அவ்வஸ்து அவர்முன் வைக்கப்படுவதற்கு முடியுமெனக் கூறப்படுகிறது. சில ஆராய்ச்சியாளர் விமானத்திலிருந்துகொண்டே பூமியிலிருப்பவர்களுடன் டெலிபோன் சம்பந்தம் வைத்துக்கொள்வதற்கான ஏற்பாடு செய்து வருவதாய்த் தெரிகிறது. சுமார் இரண்டு வருடங்களுக்குள் விமானத்தில் சகலவித சௌகரியங்களுமேற்பட்டுப்போமென எதிர்பார்க்கப்படுகிறது.

நூதனக்குடை

துருக்கி தேசத்திலுள்ள சிறந்த ஆராய்ச்சியாளரான இப்ருஹீம் பேக் என்பவர் ஓர் வகை குடையைக் கண்டுபிடித்திருக்கிறார். அக்குடை விமான யாத்திரை செய்பவர்களுக்கு மிக மிக உபயோகமுள்ளதாக விருக்கிறது. துரதிர்ஷ்டவசமாய் விமானத்தில் ஏதாகிலும் கோளாறு ஏற்பட்டுவிடுமாயின் கப்பலோட்டியோ அல்லது அதில் பிரயாணஞ் செய்பவர்களோ, அக்குடையைத் திறந்துகொண்டு

அதன் உதவியால் வெகு சுளுவில் பூமியி லிறங்கிவிடலாம்.

மணிக்கு 300 மைல்

அமெரிக்காவில் மணிக்கு 300 மைல்கள் செல்லக்கூடிய 24 ஆகாய விமானங்கள் கட்டப் படுகின்றன. அவைகள் அவ்கியா நூஸ் கடற் கரையோரமாய் பிரயாணிகளை ஐரோப்பாவிற்கு ஏற்றிச்சென்று திரும்ப கொண்டுவரும். ஒவ் வொரு விமானமும் இரண்டு லக்ஷம் பவுன் விலையுள்ளதாகும். ஒவ்வொன்றிலும் நூறு பிர யாணி, பதினாறு விமான மோட்டிகள் தாராள மாய்ச் செல்லலாம். ஐந்து மைல் உயரத்தில் பறப்பதுடன் ஒரேமுறையில் இடையில் எங் கும் தங்காது 5,000 மைல்கள் பறக்கக்கூடிய தாகும்.

தங்கம் செய்தல்

ஜப்பானிலுள்ள டோக்யோ நகரில் தங்கம் செய்வதின் காரியாதி பூர்த்தியாய்விட்டதாக வும், அத்தங்கத்தைப் பரீக்ஷித்துப்பார்த்ததில் அசல் தங்கத்திற்கும் இதற்குமிடையே எவ்வித வித்தியாசமும் கண்டுபிடிக்க முடியாத நிலைமை யிலிருப்பதாயும், அசல் தங்கத்தை எந்தெந்த வேலைகளுக்கெல்லாம் உபயோகிக்கப்படுகின்ற தோ அவைகளுக்கெல்லாம் இவைகளையும் உப யோகித்துக் கொள்ளலாமென்றும், விலையிலும் அசல் தங்கத்திற்கு நூறு மடங்கு குறைந்த தாக இருக்கிறதென்றும் ஓர் புரோபஸர் அறி வித்திருக்கிறார்.

துருக்கியில் ஆயுதசாலை

துருக்கியிலிருந்து ஒடிந்து தகர்ந்துள்ள பழைய இரும்புகளை வெளி தேசங்களுக்கு அனுப்புவது சட்டப்படி தடை செய்யப்பட் டிருக்கிறது. அக்கெவர்ன்மெண்டே இவைகளை சர்வ ஜாக்கிரதையோடு சேகரித்து வருகின் றது. அங்குள்ள தொழிற்சாலையில் இராப்பகல் வேலை நடைபெற்று வருகின்றது.

ஈரானில் அன்னிய பாஷை

ஈரானில் கடிதப்போக்குவரத்து, கணக்கு முதலியவைகளும், வியாபாரக்கம்பெனி பெயர், வியாபாரக்குறி முதலியவைகளும் பார்ஸிப் பா ஷையிலிருக்க வேண்டுமென்னும் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் உத்தியோ கஸ்தர்களைப் பழக்குவதற்காக அநேக அநேக ஸ்கூல்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இது வன்றி ஒவ்வொரு ஈரானியரும் தேசபாஷையி லேயே எழுதப்படிக்க கற்றுக்கொள்ள வேண்டு மென்றும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அன்னிய பாஷைகளிலிருந்த கவர்ன்மெண்ட் ரிகார்டுகளெல்லாம் பார்ஸி பாஷையில் புதுப்பிக்கப்படுகின்றது.

ஆலீகார் கலாசாலையில் ராணுவ வகுப்பு

அலீகாரிலுள்ள முஸ்லிம் யூனிவர்ஸிடியில் ராணுவக் கலாசாலை ஏற்படுத்த ஓர் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த யூனிவர்ஸிட் டிக்கு சமீபமாக ஏற்கனவே விஸ்தாரமான மை தானமும், ராணுவத்திற்கு தேவையான கட் டிடங்களும், விளையாட்டு ஸ்தலம், குதிரை சவாரி செய்யுமிடம் முதலிய பற்பல வசதிக ளும் அமைந்திருக்கின்றன. இவைகளெல்லாம் இதுபொழுது ஏற்பாடுசெய்ய உத்தேசிக்கப் பட்டிருக்கும் கலாசாலைக்கு உதவியாக இருக்கு மென யூகிக்கப்படுகின்றது.

22 வருடங்களாய் தூக்கமில்லை

எம். பால்கரானின் வயது இதுபொழுது 54 ஆகிறது. 1915-ல் மகாயுத்தத்தின்போது அவன் காயப்பட்டுப் போனான். ஆனால் அன்று முதல் இதுவரை அவன் ஒரு நிமிடநேரங்கூட தூங்கவில்லை. 24 மணிநேரத்திற்குள் எட்டு முறை ரொட்டி சாப்பிடுகின்றான். அவன் களைப்புற்றுவிடுவானாகில் சிரமப்பரிகாரஞ் செய்துகொள்வதற்காக சிலமணிநேரம் கண் களை மூடிக்கொண்டு பலவற்றிலும் தன் நினைவு செல்லாமலிருக்க வேண்டுமென முயற்சிக்கின் றான். அவன் நான்கு பாஷைகளில் அநேக கிரந்தங்களை ஆராய்ச்சி செய்து வருகிறான்.

எமன் அரசாட்சிக்கு புதயல்

எமன் பட்டாள விடுதிக்குச் சமீபத்தில் ஓர் கிணர் தோண்டப்பட்டபோது 150 பீட் ஆழத்திற்குச் சென்றவுடன் அங்கு ஓர் பெட்டி காணப்பட்டது. பின்னும் தோண்டப்பட்ட போது ஓர் கட்டடமும் மனித எலும்புகளும் கணக்கற்ற பாத்திரங்களும் காணப்பட்டது. அப்பெட்டி கணக்கற்ற இரத்தனம், வைடூரியங் கள் கொண்டதாக யிருந்தது. அது 5 கோடி பவுன் பொறுமதியுள்ளதென மதிப்பிடப்படு கிறது.

208354

சந்தா நேயர்கட்கு

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தா ரூபாயை வருட ஆரம்பத்தில் கொடுத்து அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டியது முக்கியமாக இருக்க, அநேகர் சென்ற வருடங்களின் பழைய பாக்கிகளையே அனுப்பிக் கொடுக்காமலே இருக்கின்றனர். நமது மாசிகைக்கு ஏற்பட்டுள்ள சந்தா ரூபாய் வெகு சொற்பமாகையால் இதற்காக அடிக்கடி தபால் எழுதுவதினால் வீண் செலவேற்படுகிறது. ஆதலால், அன்பர்கள் தங்கள் பாக்கிகளையும் புதிய ஆண்டுக்குரிய சந்தா ரூபாயையும் உடனே அனுப்பி வைக்குமாறு கோருகிறோம்.

சிலோன் சந்தா நேயர்கள் :—சிலோன் பகுதிகளுக்கு வி. பி. அனுப்புவதானால் அதிகமான வீண் செலவேற்படுகிறது. சந்தா நேயர்கள் அதிகமான ரூபாய் கொடுத்து வி. பி. பெற்றுக் கொள்ளும்படி நேரிடுகிறது. ஆகவே, கொழும்பு, கண்டி, மாத்தளை, நீர்கொழும்பு, கம்பளை முதலிய சிலோன் பகுதிகளிலுள்ளவர்கள் தங்கள் பாக்கிகளை அவ்விடம் வந்திருக்கும் நம் சங்க பிரதிநிதிகளிடமாவது, அல்லது நமது சிலோன் ஏஜண்டு மெஸ்ஸர்ஸ் **A.M.K.** ஹாஜி ஸ்டோர் (220, 2-ம் குறுக்கு தெரு, கொழும்பு) இடம் கொடுத்தாவது ரசீது பெற்றுக் கொள்ளும்படி கோருகிறோம்.

பர்மா :—ரெங்கூன், மாந்தலே முதலிய பர்மா பகுதிகளுக்கு தபால் கட்டணம் அதிகமாய்விட்டதால் ஒவ்வொரு சந்தாதார்களுக்கும் தனித் தனியே தபால் எழுதுவதுகொண்டு அதிகச் செலவேற்படுகிறது. ஆகவே, அவ்விடங்களிலுள்ள சந்தா நேயர்கள் நடைபெற்ற இவ்வருடத்திற்குரிய சந்தா பாக்கியை உடனே அனுப்பிவைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

பினங், சிங்கப்பூர், மலாயா :—இவ்விடங்களிலுள்ள நமது சந்தா நேயர்கள், நடைபெற்ற ஆண்டுக்குரிய சந்தா பாக்கிகளையும், புதிய ஆண்டுக்குரிய சந்தா ரூபாயையும் தாமதமின்றி அனுப்பிக்கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரித்து அபிவிர்த்திக்குக் கொண்டுவருவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

மானேஜர்.

யவ்முந் நபி விழா.

சோதரீர் !

எம்பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது சிறப்புவாய்ந்த முன் மாதிரியை சகல மானிடர்களுக்கிடையே பிரசாரஞ் செய்வதும், அவர்களைப் பின் பற்றி நடக்கவேண்டும் என்னும் தூதை யாவருக்கும் அறிவித்துவிட வேண்டுமென் பதும்தான் இவ்வியக்கத்தின் பிரதான நோக்கமாகும். இவ்வியக்கம் ஆரம்பமாகி இற்றைக்கு பத்து ஆண்டுகளே செல்படியாயிருக்கின்றனவாயினும், இதனுலேற் பட்ட நற்பயன்கள் அளவிடற்பாலதன்று.

ரபீஉல் அவ்வல்மீ 12-ந் திகதி உலகசிரேஷ்டர் உத்தமத்தூதர் (ஸல்.) அவர்கள் இப்பூவுலகின்கண் ஜனனமான திருநாளாகும். இவ்வாண்டு அந்த நாள் 13-5-38 வெள்ளிக்கிழமை வருகிறது. ஆதலின், அன்று ஒவ்வொரு ஊரின் முஸ் லிம் மக்களும் நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பிரசாரஞ் செய்வதில் கண்ணுங்கருத்துமாயிருந்து மாலையில் மகாநாடுகள் கூட்டி நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் ஜீவிய சரித்திர வரலாறுகளையும், சம்பவ நிகழ்ச்சிகளையும் மக்களுக்கு எடுத்துக்காட்டி, தக்க சொற்பெருக்காற்றுவதுடன் இவ்வாண்டின் விழாவிற்கென்றே தயாரிக்கப்பெற்றிருக்கும் "ஸீரத்" நூலை யாவ ருக்கும் வாசித்துக் காட்டவேண்டும்.

அன்றையதினம் ஒரே பிரசங்கம் உலகம் முழுவதிலும் படிக்கப்படவேண்டு மென்பதே அகில உலக ஸீரத் கமிட்டியாரின் நோக்கமாகும். அதுபோல இவ் வாண்டுக்கென்றே அகில உலக ஸீரத் கமிட்டியார் சிறந்த பேரறிஞர்களைக் கொண்டு எழுதுவித்துப் பிரசுரம் செய்துள்ள உருது நூலை நமது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம் தமிழில் மொழி பெயர்த்து வருகிறது.

ஆகவே அன்று பிரசங்கிப்பதற்கும் வினியோகிப்பதற்காகவு மென்றே தயாரிக்கப்படும் இந்நூலை ஏராளமாய் வாங்கி வினியோகிப்பீர்களென்று எதிர் பார்க்கிறேம்.

1000 பிரதி ரூபா 25; 500 பிரதி ரூபா 13; 250 பிரதி ரூபா 7—8—0 100 பிரதி ரூபா 3. தபால் சார்ஜ் வேறு

100 பிரதிகளுக்குக் குறையாது ஆர்டர் செய்பவர்களின் பெயர்கள் அப் புத்தகத்தின்மீது அச்சிட்டுக் கொடுக்கப்படும்.

N. B.—தபால் செலவு அதிகமாக ஏற்படுமாதலால் நண்பர்கள் கிரயத்தை முன்பணமாக அனுப்பிவைத்து சமீபத்திலுள்ள ரயில்வேஸ்டேஷன் பெயரை, தெரியப்படுத்தினல் அனுப்பிவைப்பதற்கு சௌகரியமாயிருக்கும்.

சிலோன் பகுதியிலுள்ளோர் 100 பிரதிகளுக்கு ரூ. 2 தபால் செலவுக்கு சேர்த்து அனுப்பவேண்டும். ரயில் பார்சல் வசம் அனுப்பமுடியாது.

குறுகியகாலத்தில் பிரசங்கம் தயாராவதால் பினங், சிங்கபூர், மலாயா, பர்மா சிலோன் முதலிய இடங்களில் வதியும் அன்பர்களுக்கு பிரதிகள் போய்ச்சேர்வ தற்கு வசதி கிடைப்பதில்லையாதலால் முற்கூட்டியே ஏற்பாடுகள் நடைபெறுகின் றன. ஆகவே நண்பர்கள் முன்னதாகவே தங்களுக்கு இத்தனை பிரதிகள் தேவை என்பதை தெரிவித்துவிட்டால் அனுப்புவதற்கு சௌக்கியமாயிருக்குமென்று எதிர் பார்க்கிறேம்.

இங்ஙனம், காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43, போஸ்டாபீஸ் தெருவு, சென்னை

Printed by V. Sundram Iyer at the Kesari Printing Works, 150, Anna Pillai St., Madras. Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam 43, Post Office St., G. T. Madras.